# நமது செட்டிநாடு

மலர் 11 ✿ மணம் 05 ✿ ஸ்ரீ விசுவாவசு ஆண்டு ✿ புரட்டாசி ✿ செப்டம்பர் 2025 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 11 ✿ Issue 05 ✿ September 2025 ✿ Rs.25



காசியில் புதிய சத்திரம் கட்டுவதற்கு செட்டிநாடு குழுமம் சார்பாக **ரூ. 1 கோடி** நன்கொடை வழங்கிய செட்டிநாடு குழுமத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் **டாக்டர் முத்தையா ராமசாமி** அவர்களை ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகர சத்திர மேலாண்மைக் கழக நிர்வாகிகள் கிர்லோ வீரப்பன் (துணைத் தலைவர்), லேனா நாராயணன் (தலைவர்), பிஎல்.எம். முத்தையா (துணைத் தலைவர்) மற்றும் சிறுகூடல்பட்டி டாக்டர். பழனியப்பன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

## சென்னை அமைந்தகரையில்

# ஸ்ரீ பால கைலாச விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம்







சென்னை மாநகர், அமைந்தகரை, நெல்சன் மாணிக்கம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ பால கைலாச விநாயகர் ரிலிஜியஸ் டிரஸ்டிற்குச் சொந்தமான அலுவலக வளாகத்தில் அருள்பாலித்து விளங்கி வந்த ஸ்ரீ பால கைலாச விநாயகர், ஸ்ரீகாசி விஸ்வநாதர், ஸ்ரீவிசாலாட்சி, ஸ்ரீகோதண்ட ராமர், ஸ்ரீமுருகன், வள்ளி தேவசேனா, ஸ்ரீதுர்கை அம்மன், ஸ்ரீ ஐயப்பன், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீநடராஜர், ஸ்ரீசிவகாமி அம்மன், ஸ்ரீபைரவர் மற்றும் நவகிரகங்கள் ஆகிய தெய்வங்களுக்கு திரு. AMPA பழனியப்ப செட்டியார் மற்றும் குடும்பத்தார்கள் சொந்தப் பொருளுதவியாலும், முயற்சியாலும் ஆகம முறைப்படி புதிய கருங்கல்லினால் ஆலயம் அமைத்துத் திருப்பணிகள் செய்விக்கப்பெற்று இறைவன் திருவருளால் நிகழும் விசுவாவசு வருடம், ஆவணி மாதம், 12-ஆம் நாள் (28.08.2025) வியாழக்கிழமை, சுக்லபட்ச பஞ்சமி திதி, சுவாதி நட்சத்திரம், அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் துலா லக்னத்தில் ஸ்ரீ பால கைலாச விநாயகர் மற்றும் அனைத்து நூதன ஆலய மஹா கும்பாபிஷேகம் சிவாகம முறைப்படி சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகம் தொடர்பாக 24.08.2025 முதல் 28.08.2025 வரை யாகசாலை நிகழ்ச்சிகள் தொடங்கி மஹா கும்பாபிஷேகம் வரை கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், பூர்ணாஹுதி, வாஸ்து சாந்தி, லெஷ்மி ஹோமம், ரக்ஷாபந்தணம், கும்பாலங்காரம், யாகசாலை பூஜைகள், விமான மஹா கும்பாபிஷேகம், மஹா அபிஷேகம், காசி விஸ்வநாதர் - விசாலாட்சி திருக்கல்யாண நிகழ்ச்சிகளை திருக்கண்ணங்குடி ஸ்ரீ ஞானாம்பிகா வேதாகம பாடசாலை முதல்வர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ T.K. பாலாமணி சிவாச்சாரியார் நடத்தி வைத்தார். நகரத்தார்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு இறையருள் பெற்றனர்.

நமது செட்டிநாடு

மலர் 11 மணம் 05 செப்டம்பர் 2025
ஸ்ரீ விசுவாவசு ஆண்டு புரட்டாசி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்

ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
இல.பழனியப்பன், கண்டரமாணிக்கம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்

புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி

வடிவமைப்பு: பி.தாமோதரன்

விளம்பரம் தொடர்புக்கு: 99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com

செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
கைப்பேசி: 78258 55838

கரு.மணிகண்டன், மக்கள் தொடர்பு அலுவலர்,
காரைக்குடி - 86818 28284

இதழ் சந்தா விவரம்
ஓராண்டு ரூ.300/- இரண்டாண்டு ரூ.500/-
ஐந்தாண்டு ரூ.1250/-
Cheque/ NEFT/ Gpay

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,
(OR)
Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.
விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

வாட்ஸ்ஆப்: 9962243750



# அன்னிய மொழியும் அண்ணா பல்கலை முன்னெடுப்பும்

நம்முடைய பாட்டய்யாக்கள், ஐயாக்கள் கடல் கடந்து பர்மா, சிங்கப்பூர், மலேசியா, வியட்நாம், இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்து பொருளீட்டினார்கள். அவ்வாறு அங்கு சென்ற பொழுது அந்த நாட்டு மக்களோடு பழகி, அந்த நாட்டு மொழியை கற்றுக் கொண்டார்கள். தேவையின் அடிப்படையில் அவர்கள் பல மொழிகளை கற்றுக் கொண்டு வணிகத்தில் தலைசிறந்து விளங்கினார்கள். 1940 வாக்கில் இரண்டாம் உலகப் போர் தொடர்வதற்கு முன்னரும், இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருக்கின்ற போதும், குறிப்பாக பர்மா, வியட்நாம் நாடுகளில் இருந்து பலர் இந்தியாவிற்கு திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தங்கள் வணிகம் தொடர்பாக இந்தியாவில் பல மாநிலங்களுக்குச் சென்றதனால் பிற மாநிலங்களில் பேசப்படும் மொழிகளையும் தேவைக்கு ஏற்ப கற்றுக் கொண்டனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் அரசியல் அமைப்பு சட்டத்தில் மொழிகள் தொடர்பான ஷரத்துக்கள் சேர்க்கப்பட்ட நிலையில், இரு மொழி, மும்மொழிக் கொள்கை என கருத்து வேறுபாடுகள் சில மாநிலங்களில் அவ்வப்போது வருவதும் போவதுமாக உள்ளது. இந்த நிலையில் உலகளாவிய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இலட்சக்கணக்கான இந்தியர்கள் மட்டுமல்லாது பிற நாட்டைச் சேர்ந்த மக்களும் தங்கள் நாட்டை விட்டு பல்வேறு வெளிநாடுகளுக்கு சென்று பணிபுரிய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு மொழியையே தங்கள் நாட்டின் கொள்கையாக கடைப்பிடித்து வந்த சீனா, ரஷ்யா, ஜப்பான், கொரியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற நாடுகள் கூட கூடுதலாக அந்நிய நாட்டு மொழியை தங்கள் நாடுகளில் ஏதாவது ஒரு வழியில் அறிமுகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் ஒன்றாகத் திகழும் அண்ணா பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் அனைவரும் கூடுதலாக ஜெர்மன், ஜப்பானீஸ், கொரியன் உள்ளிட்ட அந்நிய மொழிகளில் ஒன்றை கற்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் மாணவர்கள் தாங்கள் பயிலும் பொழுதே அன்னிய நாட்டின் மொழியை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்ற காரணத்தினால் அந்தந்த மொழி பேசும் நாடுகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சாத்திய கூறுகள் அதிகமாக இருக்கும். இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் முதன்முதலாக ஒரு அந்நிய நாட்டு மொழியை மாணவர்கள் அனைவரும் கட்டாயம் கற்க வேண்டும் என்ற இந்த அறிவிப்பு உயர் கல்வியை கற்றுத் தருகின்ற நிறுவனங்களுக்கு ஒரு முன் உதாரணமாக அமையும். நம் வீட்டுக் குழந்தைகளுக்கும் பிற நாட்டு மொழி ஒன்றை வளரும் பருவத்திலேயே கற்றுத் தரலாம். கற்றுத் தர ஆன்லைன் வகுப்புகள் உள்ளன. நம் ஐயாக்கள் அன்னிய நாடுகளுக்குச் சென்று கற்றுக் கொண்ட மொழி அறிவை, நம் குழந்தைகள் அந்த நாடுகளுக்கு செல்வதற்கு முன்னரே கற்றுக் கொண்டால் அவர்கள் சிறப்பாகப் பணிபுரியவும், பொருளீட்டவும் ஏதுவாக இருக்கும். ♦

# லியோ டிராவல்ஸ் கம்பெனி

SINCE - 1982

நெ.சி6, ஜென்னி பிளாசா, 5, பாரதியார் சாலை, கண்டோன்மென்ட், திருச்சி-620001
தொலைபேசி எண்: (0431) 3597441
E.mail: leotrvl@yahoo.com. 98424 54314, 96000 07454, 98940 14166



## 2026 ஆம் ஆண்டு "தைப்பூச விழா" சிறப்பு பயணம்...

வருடம் முழுவதும் நடக்கும் முருகப்பெருமான் விழாக்களிலே, பெரிய முக்கியமான, சிறப்பான விழா தைப்பூசம் இந்த விழாவை உலகத்தில் உள்ள தமிழர்கள் கொண்டாடிவரும் இவ்வேளையில், மலேஷியா நாட்டில் அதுவும் பினாங்கில் 2026 ஆம் ஆண்டு தைப்பூசம் மிக சிறப்பாக நடக்கவிருக்கிறது. பல்வேறு நாட்டு மக்கள் கலந்து கொள்ளும் இவ்விழாவை நாம் அவசியம் கண்டு களிக்கவேண்டும். இந்த விழா நம் நகரத்தார்களுக்கு சிறப்புமிக்க விழா. இதை காண்பதற்கு எங்கள் லியோ டிராவல்ஸ் நிறுவனம் கடந்த 40 வருடங்களாக ஏற்பாடு செய்து வருகிறது.

எதிர்வரும் 2026 ஆம் வருடம் ஜனவரி 26 ஆம் தேதி புறப்பட்டு 10 நாட்கள் சுற்றுலாவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சுற்றுலாவில் கலந்துகொள்ள வருபவர்கள் முன்பதிவு செய்து உறுதி செய்துகொள்ளவும். இந்த சுற்றுலா பற்றி விவரம் வேண்டுபவர்கள் எங்கள் அலுவலக தொலைபேசி எண்களில் தொடர்புகொண்டு சுற்றுலாவின் முழு விவரம் பெற்றுக்கொள்ளலாம்.

நாங்களும் கடந்த மூன்று வருடங்களாக குறிப்பிட்ட அளவுக்கு மட்டும் இடங்களை நிறைவு செய்து அழைத்து செல்கிறோம். ஆகையால் இடமின்மையை தவிர்க்க அவசியம் முன்பதிவு செய்து கொள்ளவும். எங்கள் லியோ டிராவல்ஸ் நிறுவனம் தைப்பூசம் சுற்றுலாவிற்கு அழைத்து செல்வது போல் யாராலும் செய்ய முடியாது என உறுதியாக கூறுகிறோம்.

இந்த சுற்றுலாவில் கோலாலம்பூர், லங்காவி, பினாங், ஈப்போ, சிங்கப்பூர் போன்ற இடங்களும் அடங்கும். உணவு நம் தென்னிந்திய (செட்டிநாடு) போன்றும், 10 நாட்களுக்கு 3 மற்றும் 4 நட்சத்திர ஹோட்டல்களிலும் தங்கவைத்து, சுற்றுலா முழுவதும் ஏசி கோச்சில் பயணம் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். எங்கள் நிறுவனம் நகரத்தார்களை அழைத்துச்செல்லும் விதமே தனிச்சிறப்பு. குறிப்பாக எங்கள் நிறுவன மேலாண்மை இயக்குனர் அவர்களே கூட வந்திருந்து சிறப்பிப்பார் என்பதையும் பெருமையுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

நாங்கள் 45 வருட அனுபவம் உள்ளவர்கள். மேலும் நாங்கள் நான்கு நபர்கள் முதல் பத்து நபர்கள் வரை சுற்றுலா செல்ல விரும்பினால் எந்த நாடாக இருந்தாலும் ஏற்பாடு செய்து தருகிறோம்.



தங்கள் அன்புள்ள
புதுவயல் V.சுப்பு
மேலாண் இயக்குநர்


# உள்ளே...


எழுத்தாளர் பேரா. அரு.ராமநாதன் ............ 08

வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க.... 10

இலங்குடி குடமுழுக்கு .............................. 12

சிதம்பரத்தில் நகரத்தார் சம்போ ................. 15

நகரத்தார் திருப்பணிகள்............................ 16

திருமாலின் திவ்ய தேசங்கள் .................... 18

தொழில் தொடங்கலாம் வாங்க ................. 21

இந்தியாவின் வளர்ச்சியில் இஸ்ரோவின் பங்கு.. 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ....... 28

VIBES of CHETTINAD ............................ 31

நகரத்தார்களும் அன்னதான திருப்பணியும் ....... 32

ஏழிளந்தமிழ் – நல்வழி – உரை
செம்மல் வ.சுப.மாணிக்கனார் ..................... 35

திருமந்திரச் சுவை .................................... 36

இராம காவியம் .......................................... 37

அமெரிக்கா வாழ் டாக்டர் பிரியா சேதுசொக்கலிங்கம்
அவர்களுடன் ஒரு நேர்காணல் ................. 38

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ....... 40

கவிமாமணி புதுவயல் செல்லப்பன்
அவர்களின் 99ஆம் ஆண்டு பிறந்தநாள்.... 41

நகரத்தார் சிகரத்தார் ................................ 42

விலங்கின் அறிவோடு ஒரு பறவை ............ 44

கானாடுகாத்தான் ஸ்ரீகரைமேலழகர்
அய்யனார் கோவில் கும்பாபிஷேகம் ............ 47



Vees Star™
Diamonds & Jewelry
ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை
GIA
CERTIFIED
SOLITAIRE
CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com
CHENNAI - 044 4553 6003 1, 9383007477
MADURAI - 9884473330
KARAIKUDI - 9884803349
S. விஜயகுமார்
V. விசாலாட்சி
பள்ளத்தூர்


Innovative Homes & Developers Pvt. Ltd.
Creating Value & Lifestyles
SINCE 1999
25
YEARS OF EXCELLENCE
சொந்த நிலத்தில வீடா?
உங்கள் கனவில்லத்தை கட்ட
Innovative Homes தயார்.
Joint venture-ஆ? இல்ல contract-வீடா?
We do both, Flat development & Individual house construction!
Book your Flat Now!
K.K.Nagar
Chennai, S+5 floors.
Virugambakkam
Chennai, S+5 floors.
98410 12145
www.innovativehomes.in
7/11,1-A, Bharathi Nagar 2nd Street,T.Nagar, Chennai - 17
இன்னோவேடிவ் அண்ணாமலை


SRM
DENTAL CLINIC
Madurai
23 years
உலகத்தர
இம்ப்ளாண்ட் தொழில்நுட்ப
வசதி கொண்ட மிகச்சிறந்த
பல்மருத்துவமனை
மதுரையில் !
Dr.R.மெய்யப்பன்
M.D.S, F.ISOI
Endodontist & Implantologist
ஒரே நாளில்
இம்ப்ளாண்ட் பற்கள்!
All on 4 இம்ப்ளாண்ட் பல்செட்
All on 6 இம்ப்ளாண்ட் பல்செட்
Zygoma இம்ப்ளாண்ட் (எலும்புதேய்ந்தவர்களுக்கு)
இம்ப்ளாண்ட் support கழற்றிமாட்டும் பல்செட்
SRM Dental ஹாஸ்பிட்டலில்,
நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய
அதிநவீன பல் சிகிச்சை!
நன்மைகள்: நிலையான மற்றும் நிரந்தர தீர்வு | இயற்கையான
தோற்றம் கொண்ட பற்கள் | உறுதியானது & வசதியானது.
நம்பிக்கையுடன் புன்னகைக்க தயாரா?
SRM DENTAL CLINIC
94432 52108
மதுரை
SRM Dental Clinic
Adjacent To Income Tax Office, B.B. Kulam, Madurai - 2.
Email : info@srmdentalclinic.com

# ‘நன்றே செய்க; தீது தவிர்க்க!’ அன்றே என் அன்னை சொன்ன மந்திரம்!

## எழுத்தாளர் பேரா. அரு. ராமநாதன்





பிரேமா நாராயணன்

சிதம்பரம் நகர விடுதிக்குச் செல்பவர்கள், அங்கே பொறுப்பாளராகப் பணி செய்யும் ராமநாதன் செட்டியாரை கண்டிப்பாக சந்தித்திருப்பார்கள். எளிமையான உருவம், எப்போதும் புன்னகை தாங்கிய முகம், கனிவான பேச்சு, தமிழின் மீதும், எழுத்தின் மீதும் அளப்பரிய காதல். இவைதான் ராமநாதன் செட்டியார். ஒரு முறை பார்த்துப் பேசினால் போதும். நெருங்கிய நண்பர் போல அன்பும், அக்கறையும் கொண்டு உரையாடுவது அவருடைய சிறப்பியல்பு. தான் படித்த கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்று, அப் பணியைத் திறம்பட ஆற்றியவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்கள் பல தந்தவர். சுவாரசியமான அந்த ஆளுமையுடன் ஒரு பேட்டி.

**உங்களைப் பற்றிச் சொல்லுங்கள் அண்ணன்.**

“தமிழுக்கும், தொண்டுக்கும் பலரை ஈந்த தேவகோட்டை தான் நான் பிறந்த ஊர். எங்கள் ஊரில் பாதிக்கு மேல் இலுப்பைக்குடியார். ஐந்தாறு வகைகளாக வாழ்பவர்களுள், ஐந்து வீட்டார் வகையினர் நாங்கள்.

தேவகோட்டை நகர சிவன் கோயிலுக்கு கிழக்கே 1 கி.மீ. தொலைவில் பழமை வாய்ந்த அருள்மிகு மந்திர மூர்த்தி ஆலயம் அமைத்த பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் வந்தவர்கள் ராம. மெ. கருப்பன் செட்டியாரும், அவருடைய மூத்த மகன் அருணாசலம் செட்டியாரும்.

மூத்த மகன் அருணாசலத்தின் இரண்டு தார வாரிசுகள் அரு. ராமநாதன், அரு. லெட்சுமணன் ஆகிய இருவரோடு, பிற இளைய மக்கள் கரு. முருகப்பன், கரு. வினைதீர்த்தான், கரு.முத்துராமன் ஆகியோரை சமபங்காளர்களாக ராம.மெ. கருப்பன் செட்டியார் அறிவித்த வண்ணம் ஐந்து வீட்டார் வகை உருவானது.

இவர்கள் அனைவரின் வாரிசுகளுக்கும், கோயில் திருப்பணிகளும், ஆன்மிகச் சேவைகளும் வழிவழியாகச் செய்யும் பெரும்பேற்றை இறைவன் அருளியிருக்கிறான். அதை விரிவாகவே சொல்கிறேன்.

இலுப்பைக்குடி சுயம்பிரகாசர் கோயில் பரம்பரை அறங்காவலர்கள், எங்கள் குலதெய்வம் இலங்குடி பகச்சால மூர்த்தி ஐயனார் கோயில் முதல் திருப்பணியாளர்கள் அரு.லெ. குடும்பத்தார்.

தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் நடராசர் சந்நிதி அமைத்து, அபிஷேக ஆராதனை செய்வோர் கரு. முருகப்ப செட்டியார் மரபினர்.

கோவிலூர் இரண்டாம் பட்டம் அருணாசல சுவாமிகளும், மூன்றாம் பட்டம் கருணாநிதி சுவாமிகளும் கரு.வினைதீர்த்தான் செட்டியார் வாரிசுகள்.

திருக்குற்றாலம் அம்மன் திருப்பணி செய்தோர் கரு. வினைதீர்த்தான் மரபில் வந்தவர்கள்.

ஆவுடையார்கோயிலில் தேர், ஆபரணங்கள், ஊருணி, சத்திரம், உப்புமடம், ஊறுகாய் மடம் கொடையாளர்கள் கரு. முத்துராமன் செட்டியாரின் முதல் மகன் அண்ணாமலை செட்டியார் குடும்பத்தினர். இந்த மு.ராம. அண்ணாமலை செட்டியாரின் மகன், ஐந்து வயதில் கண் பார்வை இழந்த நாராயணன் என்ற வன்றொண்டர், திருவாவடுதுறை மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர். மாபெரும் தமிழறிஞர் வன்றொண்டரின் நியமமும், நினைவாற்றலும் வியக்கத்தக்கன. வன்றொண்டர் குடும்பத்தார் தேவகோட்டையில் சேக்கிழாருக்கு



பெற்றோர்: ராம.அருணாசலம் செட்டியார் – அரு.தருமாம்பாள் ஆச்சி.

தனிக்கோயில் எழுப்ப வைத்திருந்த இடத்தை நகரச் சிவன் கோயில் கட்ட அன்பளிப்பாக கொடுத்தார்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்க தனி சேக்கிழார் சந்நிதி அமைந்து, சேக்கிழார் மணி சிவாலய மணியாக ஒலி சேர்க்கிறது.

(சிதம்பரத்தில் நூறாண்டுகளுக்கு முன்பே மெய்கண்டார் வித்யாசாலை நிறுவிய காரைக்குடி சொக்கலிங்க ஐயாவும், தேவகோட்டை ஆசுகவி வீர.லெ. சின்னையா செட்டியாரும் வன்றொண்டரின் மாணவர்கள் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்).

கரு. முத்துராமன் செட்டியாரின் இரண்டாவது மகன் சின்னையசெட்டியார் பேரன் சுப்பிரமணியன் செட்டியார் குடும்பத்தினர் திருவெண்காடு வித்யாம்பிகை கற்கோயில் கட்டியவர்கள்.

மூன்றாவது மகன் கிருஷ்ணன் செட்டியாரின் வாரிசு நான். இறகுசேரி மும்முடிநாதர் கோயில் பரம்பரை அறங்காவலர் எங்கள் வளவு பெரியப்பச்சி மகன் அரு. லெட்சுமணன் அவர்கள்.

மதுரை குட்டைய அய்யா மடத்தை நிறுவிய குட்டைய அய்யா கரு.முத்துராமன் செட்டியாரின் நான்காம் மகன் ஆதப்ப செட்டியாரின் வம்சத்தினர்".

**உங்கள் பரம்பரையின் பாரம்பரியமும், கோயில் திருப்பணிகளும் பிரமிக்க வைக்கின்றன. உங்கள் பெற்றோர், உடன்பிறப்புகள், கல்வி, ஆற்றிய பணி பற்றி.**

"மு.ராம.கி.அரு.ராம. அருணாசலம் செட்டியார் – அரு. தருமாம்பாள் ஆச்சி இணையரின் மூன்றாவது (மூவரில்) மகன், பதின்மரில் ஆறாவது பிள்ளை. அரு. கிருஷ்ணன், அரு.பழனியப்பன் எனது அண்ணன்கள். எனது மூன்று ஆச்சிகள் (மூத்த சகோதரிகள்) சுபத்ரா, மீனாட்சி மாயாண்டி, முத்துப்பொண்ணு வீரப்பன் ஆகியோர். நான்கு தங்கைகள் அலமேலு சுந்தரம் (சொ.சொ.மீ.), தெய்வானை பழனியப்பன், வள்ளியம்மை லெட்சுமணன், பார்வதி அருணாசலம்.

என்னைக் கருவறையில் சுமந்திருந்த என் தாயார் இராமேசுவரத்தில் தீர்த்தமாடியதால், உடனிருந்தோர் கூறிய வண்ணம் நான் இராமநாதன் எனப் பெயர் பெற்றேன். அப்பத்தா வீட்டு அய்யா பெயரும் அதுவே ஆக, மாமனார் பெயரை உச்சரிக்க தயங்கி என் தாயார் என்னை ரகுபதி என அழைக்க, உறவுகள் மத்தியில் அந்தப் பெயரே நிலை பெற்றது. நான் பிறந்தது நான்கு கட்டுகள் உள்ள வளவு வீட்டில். மூன்றாம் கட்டில் சுகப்பிரசவம் ஆனதால், என்னை 'மூன்றாம் கட்டுத் தம்பி' என பாசமுடன் விளிப்பார்கள் எங்கள் வளவில்.

தான் கறந்து வந்த பசும்பாலினை, முதலில் முகம் தெரியா பிள்ளைகள் சிலருக்குக் கொடுத்து விட்டுத்தான் வீட்டுக்குள் கொண்டு வருவார்களாம் எங்கள் அப்பச்சி. என் தாயார் தெருவில் பொருட்களை கூவி விற்கும் எளியோருக்கு அன்னமிடாத நாட்களே இல்லை. குடல் ஏற்றத்தை எளிதில் சரிசெய்யும் நன் மருத்துவரும் கூட. மேலும் இறுதி காலம், பிரசவ காலம் போன்றவற்றை துல்லியமாக நாடி கணிப்பதில் வல்லவர். விளம்பரம் தேடாத உதவும் கரங்களாக விளங்கியவர். வாய்ப்பாடு அத்தனையும் அத்துபடி. வாய்ப்பாட்டில் (தாலாட்டு, ஒப்பு) வல்லவர். 'கிடைத்தற்கரிய மனிதப் பிறவியில் நன்றே செய்க; தீது தவிர்க்க' இதுதான் என் அன்னையின் உபதேசம்.

எனது ஐந்து வயதில், அப்பச்சியை புற்றுநோய் இறையடியில் சேர்த்தது. தாயார் முழு பாரமும் சுமக்க, ஆயாள் அலமேலு ஆச்சி முழு அர்ப்பணிப்புடன் உற்ற துணையானார். பாசத்தைப் பொழிவதில் இருவரிடையே கடும் போட்டி. அந்தப் பாசமழையில் சுகமாய் நனைந்த நாங்கள், அப்பச்சி இல்லாத குறையை மறந்தோம். அப்போதைய ஒரே அண்மை மொத்த வணிகத் தலமான மதுரையில் பெரிய டப்பா பிரிட்டானியா பிஸ்கட், கௌ அன்ட் கேட் டப்பா, வெளிநாட்டு ஹார்லிக்ஸ் (கரைக்காமல் 'அப்படியே' காலி செய்வதும் உண்டு). துணிமணிகள் பீஸ் கணக்கில், நோட்டு புத்தகங்கள் டஜன் கணக்கில் என கொள்முதல் செய்வார்கள்.



அரு. ராமநாதன் – சௌந்தரலெட்சுமி தம்பதியர்

உள்ளூர் சந்தையில், வீட்டு வாயிலில் பொரி உருண்டை, கடலை உருண்டை, பதநீர், நுங்கு என தின்பண்ட வகைகள். வீட்டிலேயே ஆள்கூட்டி சீடை, முறுக்கு, தேன்குழல், மாஉருண்டை, அதிரசம், எள்ளுருண்டை என நொறுக்கு தீனி வகைகள் வேறு. மொத்தத்தில் வருத்தப்படாத வளர்ச்சி. (தொடரும்)

# வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க...

## 5 பேங்காக்



சோமலெ
சோமசுந்தரம்

**உலக நகரங்களில் முதல் இடம்!**

தாய்லாந்து நாட்டின் மக்கள் தொகையில் 22 சதவிகித மக்கள் தலைநகர் பேங்காக்கில் வாழ்வதால் நாட்டின் மிகப் பெரிய நகரமாக விளங்குகிறது பேங்காக். தென்கிழக்காசியாவின் மிக முக்கியமான நகரங்களில் ஒன்றான பேங்காக் உலகளவில் அதிக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நகரங்களில் முதல் இடத்தில் உள்ளது. 2024-ஆம் ஆண்டில் 332 இலட்சம் வெளிநாட்டவர் இந்நகரைப் பார்க்க வந்துள்ளனர்.



சாந்தமான புத்தர் கோவில்கள், கண்கவர் அரண்மனைகள், கேளிக்கைக்கு நகரம் முழுவதும் சாலையோர உணவகங்கள், இரவு வாழ்க்கை, உடல் இளைப்பாற உருவுதல் (மசாஜ்), இரவு சந்தை, வார இறுதி சந்தை, நவீன ஆடம்பர வணிக வளாகங்கள், இப்படி பேங்காக் நகரின் சிறப்புகள் அடங்கிய பட்டியல் மிக நீளமானது.

**ராமா! ராமா!**

இந்நகரில் முக்கியமாக பார்க்க வேண்டிய இடங்களில் குறிப்பிடத்தக்கது தாய்லாந்து மன்னர்களின் அரண்மனையும் அதன் வளாகத்தில் உள்ள மரகத புத்தர் ஆலயமும் ஆகும்.

நம் கோவில் வாசல்களில் காவலுக்கு துவாரபாலகர் இருப்பது போல அரண்மனையின் வாயில்களில் உள்ள பிரமாண்டமான துவாரபாலகர் சிலைகள் நம்மை வரவேற்கின்றன. 233 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த வளாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கவின்மிகு கட்டிடங்களில் 1782 முதல் அரச குடும்பத்தினர் வசித்து வந்தனர். ஆனால், அவர்களின் வம்சாவளியினர் யாரும் இப்போது அங்கு வசிப்பதில்லை.



இன்றைய மன்னரின் இயற்பெயர் வஜ்ஜிரலோங்காரன். அவர் ‘பத்தாவது ராமா’ என்று அழைக்கப்படுகிறார். உலகின் மிகப் பணக்கார மன்னராக இருந்தாலும், தெய்வம் போல் போற்றப்பட்ட ஒன்பதாம் ராமாவின் மகனாக இருந்தாலும், இவருக்கு நாட்டு மக்களிடையே செல்வாக்கோ, மதிப்போ இல்லை. அதற்குக் காரணம் அவருடைய நடத்தையே என ரகசியமாகச் சொல்கின்றனர் உள்ளூர்வாசிகள். வெளிப்படையாக மன்னரை விமரிசிப்பது இந்நாட்டில் தண்டனைக்குரிய குற்றமாம்!



**பூசாரி இல்லாத கோவில்**

புத்தர் கோவில்களில் துறவிகள் அங்கேயே தங்கி வழிபாடுகளில் ஈடுபடுவது வழக்கம். ஆனால், அரண்மனை வளாகத்தில் உள்ள மரகத புத்தர் கோவிலில் துறவிகள் தங்க இடம் ஒதுக்கப்படாததால் இது பூசாரி இல்லாத கோவிலாக, சுற்றுலா மையமாகத் திகழ்கிறது. இந்த புத்தருக்கு காலத்திற்கு ஏற்றார் போல தங்கக் கவசங்களை, வருடத்திற்கு மூன்று



முறை, கோடை, மழை, மற்றும் பனிக் காலங்களில், மன்னரோ, அவரது குடும்பத்தினரோ மாற்றுகின்றனர்!

மரகத புத்தர் என்று பெயரிடப்பட்டிருந்தாலும் இந்த புத்தர் சிலை ஒரே கல்லில் மாணிக்கக்கல் போன்ற ஜாஸ்பெர் கல்லில் செதுக்கப்பட்டதாம். 66 சென்டிமீட்டர் உயரத்திலும், 48 சென்டிமீட்டர் அகலத்திலும், “மூர்த்தி சிறிதாக இருந்தாலும் கீர்த்தி பெரிது” என்பதற்கேற்ப இச்சிலை தாய்லாந்து நாட்டின் சின்னமாகப் போற்றி வணங்கப்படுகிறது.

கோவிலைச் சுற்றியுள்ள சுவர்களில் உள்ள இராமாயணத்தின் 178 காட்சிகளை சுவரோவியங்களாக அமைத்திருப்பது இக்கோவிலின் தனித்துவங்களில் ஒன்றாகும்.

### நதி உலா

பாரிஸ் நகரில் செய்ன் நதி, லண்டன் நகரில் தேம்ஸ் நதி, ரோம் நகரில் டிபெர் நதி, நியூ யார்க் நகரில் ஹட்சன் நதி என உலகின் புகழ் பெற்ற நகரங்களையெல்லாம் நதிகள் அலங்கரிக்கின்றன. அவ்வரிசையில் பேங்காக் என்ற பொன் குடத்திற்குப் போட்டு வைப்பதோ ‘சாவோ பிரயா’ நதி.



பழங்காலத்து புத்தர் கோவில்கள் முதல் நவீன வானளாவிய கட்டிடங்கள் வரை பேங்காக் நகரின் பன்முகப் பாங்கினை சில மணி நேரங்களில் கண்டுகளித்துவிட விரும்புவோர் இந்த நதியில் உல்லாசக் கப்பலிலோ அல்லது பாரம்பரியமிக்க ‘நீண்ட வால்’ படகுகளிலோ உலா வருகின்றனர். இந்த நதி உலாவில் இந்தியர்கள் அதிகமாகப் பங்கு பெறுவதால் இந்திய உணவு மட்டுமன்றி இந்தி திரைப்பாடல்களையும் இக்கப்பல்களில் பரவலாக ரசித்து மகிழலாம்.

### தெருவெல்லாம் உணவு முழக்கம்!

இந்திய உணவைப் போன்றே தாய் உணவு காரமாக இருந்தாலும், உலகளவில் இந்திய உணவை விட பிரபலமாக உள்ளது தாய் உணவு.

அதிக காரத்தை விரும்பாதவர்களுக்கு காரம், இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு அனைத்தும் கலந்த உணவு வகைகளைத் தயாரிப்பதில் வல்லமை பெற்றவை தாய் உணவகங்கள். சுவைக்கும், வாசனைக்கும் எலுமிச்சைப் புல், புதினா,கலாங்காய் (இஞ்சி, பூண்டு போன்ற வேர்த் தண்டு), வோக்கோசு, துளசி, வெவ்வேறு அளவில் கார அளவு மற்றும் வித விதமான வண்ணங்களில் மிளகாய்கள் ஆகிவற்றைப் பயன்படுத்துவதால் இந்திய மற்றும் சீன உணவுகளை விட, தாய் உணவு தனித்துவமாக உள்ளது.



நம் உணவில் இட்லி, தோசை, சாதம் போன்று, தாய் உணவில் பேட் தாய் (pad thai) என்ற அரிசி நூடுல்ஸ் மிகவும் விரும்பி சாப்பிடப்படுகிறது. முட்டை, பனை சர்க்கரை, புளிச்சாறு, வேர்க்கடலை, இறால் ஆகிவற்றை அரிசி நூடுல்சுடன் சேர்த்து பெரிய இருப்புச் சட்டிகளில் லேசாக வறுத்து எடுக்கிறார்கள். மாமிசம் சாப்பிடாதவர்களுக்கு இறாலுக்குப் பதிலாக காய்கறிகள், மீன் குழம்பிற்குப் பதிலாக சோயா குழம்பு என மாற்றி சமைக்கப்படுகிறது.



கொய்யாப்பழம், மாதுளை, மாம்பழம் போன்ற பழ வகைகளை வித விதமாக வெட்டி, உணவகங்களில் காட்சிப் பொருளாகவும், உணவின் மீது கவர்ச்சிப் பொருளாகவும் வைத்து நம்மை மகிழ்விப்பது வித்தியாசமாக இருக்கிறது. வாழைப்பழத்தைக் கூட உரித்துக் கொடுத்து விடுகிறார்கள்!

பேங்காக் நகரில் உள்ள அடுக்கு மாடி கட்டிடங்கள் அனைத்திலும் கீழ் தளத்தில் உணவகங்கள் உள்ளன. காலை உணவு, அதிகாலை நான்கு மணி முதல் ஆறு மணி வரை கிடைப்பதாலும், வீட்டிற்கு கீழேயே உணவகம் இருப்பதாலும் காலை உணவை ஆறு மணிக்குள் முடித்து அலுவலகம் செல்கின்றனர் பேங்காக் மக்கள். வீட்டில் இருக்கும் மற்றவர்கள் மதிய உணவிற்கும், இரவில் குடும்பத்தோடும் இந்த உணவகங்களுக்கு வருகின்றனர். உணவின் விலை மலிவாக இருப்பதால் பெரும்பாலோர் வீட்டில் சமைப்பதே இல்லை!

புன்னகை தொடரும்...

சென்ற இதழ் தொடர்ச்சி

# இலங்குடி குடமுழுக்கு



தேவகோட்டை இராமநாதன்



தோன்றியதால் இவர் பகச்சால மூர்த்தி அய்யனார் எனப் பெறுகிறார். இதே பெயரில் கல்லல் ஸ்ரீ மீனாட்சி சோமசுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஊருணிக் கரையில் அருகிலுள்ள ஊருணி விநாயகர் ஸ்ரீ பகச்சால விநாயகர் என அழைக்கப் பெறுகிறார்.

கல்லல் அருகே உள்ள குருந்தம்பட்டு எனும் ஊரில் உள்ள இந்து ஏழு கரை நாட்டார்களுக்குப் பாத்தியப்பட்ட அருள்மிகு பெரிய நாச்சியம்மன் ஆலயத்தில் உள்ள விநாயகப் பெருமானும் பகச்சால விநாயகர் என்று வழங்கப் பெறுகிறார். அதே போல் இலங்குடி ஐயனார் கோவிலுக்கு வெளியில் உள்ள ஊருணியின் அருகில் உள்ள விநாயகரும் பகச்சால விநாயகர் என்றே அறியப்படுகிறார்.

## பகச்சால மூர்த்தி பெயர் விளக்கம்:

இத்திருக்கோவிலில் அருள் வாய்ந்த மூர்த்தியாக விளங்குபவர் பகச்சால மூர்த்தி ஐயனார். இவரையே பாலையடியான் என்று அழைப்பது வழக்கம்.

இராமன் ஏழு மராமரங்களை ஒரு அம்பால் துளைத்த கதை இராமாயணத்தில் கூறப்படும் ஒரு நிகழ்வாகும். இதை மராமரப் படலம் என்று கூறுவர். சுக்கிரீவன் இராமனின் வலிமையைச் சோதிக்க, ஏழு மராமரங்களை அம்பால் துளைக்குமாறு வேண்டினான். இராமன் அம்பை எய்ய, அது ஏழு மரங்களையும் துளைத்துத் திரும்பியது. இந்த மராமரமே "சாலமரம்" என அழைக்கப் பெறுகிறது. திருமாலின் மோகினி அவதாரத்தில் சிவன் வழி அவதரித்த ஹரிஹரசுதனின் பிறப்பிடமாக இருக்கும் பெருமையையும் இந்த மரம் பெற்றிருக்கிறது. ஆகையினால், இந்த ஐயனார் "சாலமூர்த்தி ஐயனார்" ஆகிறார் என்று "நகரத்தார் குலதெய்வங்கள்" எனும் நூலில் அதன் ஆசிரியர் "வேகுப்பட்டி எஸ்ஸார்எம்" குறிப்பிடுகிறார். இறைவனின் அறுகுணங்களைப் "பகம்" என அழைப்பர். அவாவின்மை, ஈச்சுரத் தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம் ஆகிய இந்த ஆறு குணங்களையும் "பகம்" என்பர். இத்தகைய அறுகுணங்களை உடைய சாலமரத்தின் அடியில் அவதரித்த ஐயனார் பகச்சாலமூர்த்தி ஐயனார் என்று "எஸ்ஸார்எம்" குறிப்பிடுகிறார்.

பகம் என்றால் பகுத்தல் என்னும் பொருள் உண்டு. சால மரங்களைப் பகுத்தவன் ராமன் என்பதனால் கூட பகச்சாலம் என்று இந்த மரத்திற்குப் பெயர் வந்திருக்கலாம் என்பது என்னுடைய எண்ணமாக உள்ளது. கல்லைப் பகுத்து உருவானதால் தானே கற்பகம் என கற்பகப் பிள்ளையார் அழைக்க பெறுகிறார். ஆகவே, தான் இம்மரத்தின் அடியில்

## அருள்தரு பகச்சால மூர்த்தி ஐயனார்:

இந்த ஆலயத்தின் பிரதான தெய்வமாக வீற்றிருப்பவர் பகச்சால மூர்த்தி ஐயனார். அவர்தம் பூரணை புட்கலை எனும் மனைவியரோடு வீற்றிருக்கிறார்.

ஆலயத்திற்குள் நுழையும் பொழுது "கோயில் வாயிற்கண் குடவயிற்றன சில பூதம்" என்பது போல் இரண்டு பூதங்கள் ஆயுதம் தாங்கி நிற்கின்றன. சேமம் குதிரையைத் தாங்கி மூன்று பூதங்களும், பாலை மரத்தை ஒட்டி ஒரு பெரிய பூதமும் உள்ளது.

கல் தூண்களைக் கொண்ட மண்டபத்தில் யானை, பலிபீடம் ஆகியவையும் உள்ளன. 12 ராசிகளின் சிற்ப அமைப்பு மண்டப மேல் விதானத்தில் அமைந்துள்ளது. கருவறையின் முன்னர் துவாரபாலகர் உள்ளனர்.

"சீருற்ற சென்னிமிசை மின்னும்மணி மகுடமும்
சேர்ந்தவெண் நீற்றின் அழகும்

சிந்தூரத் திலகமொடு செங்கதிர்க் குழைகளும்
செம்பவள உருஅ தரமும்

கார்உற்ற இருளைத் 'துரக்கும்மதி முகமொடும்
கருணைமழை பொழி விழிகளும்

கனகமே யூரமும் கல்அனைய வாகுவும்
கண்டிகை தரித்த மார்பும்



தார்உற்ற கரம்அதில் சங்குஆழி களும்இடை
தன்னில் ப்ரகாச கலையும்

சந்தமிகு கிண்கிணி சதங்கைகள் ஒலிக்கவும்
சவாதுமெய் யில்க மழவும்

பார்உற்ற பூரணை புட்கலை உடன்வந்து
பட்சம்வைத்(து) எனைஆ ளுவாய்
பணிபவர்க்(கு) அருள்புரி இலங்குடியி லேவளர்
பகற்சால மாமூர்த்தியே!

– என்று விரையாச்சிலை அம்பலம் அடைக்கலவன் செட்டியார் மகன் சுப்ரமணியன் செட்டியார் பகச்சால மூர்த்தி ஐயனார் பேரில் திருப்பதிகம் பாடிய வண்ணம் ஐயனார் அருள் பாலிக்கிறார். இவ்வாலயத்தில் ஐயனாருக்கான உற்சவ சிலையும் உள்ளது. பிற ஆலயங்களில் இருந்து வாகனங்களைக் கொண்டு வந்து வைகாசி மாதத்தில் சாமி எழுந்தருளச் செய்யப் பெற்றுள்ளது.

அந்த வகையில் காரைக்குடி – மூ.மெ.சேவு குடும்பத்தாரால் காரைக்குடி நகரச் சிவன் கோவிலுக்குச் செய்து வைக்கப் பெற்ற யானை வாகனத்தில் ஐயனார் எழுந்தருளப் பெற்று அருள் பாலித்து உள்ளார். மரத்தினால் செய்யப் பெற்ற யானை வாகனம் 2012 – குடமுழுக்கின் போது செய்யப் பெற்றது. இந்தக் குடமுழுக்கு விழாவன்று இரவு 8.00 மணிக்கு யானை வாகனம் புறப்பாடு ஆனது. இதற்கு வாகனக் கொட்டகையும் அமைக்கப் பெற்றுள்ளது.

இக்கோவிலில் எங்கும் இல்லாத சிறப்பாக ஐயனார் கோவிலில் பிரகாரத்தில் சண்டேஸ்வரப் பெருமானைக் காண முடிகிறது. சிவனுக்கும், திருமாலுக்கும் பிறந்த காரணத்தால், ஐயனார் கோவிலில் சிவனுக்குரிய அணிகலன்களை அணிந்துள்ள ஐயனார் சிவாம்சமாகவே கருதப்படுவதால் இந்த ஆலயத்தில் சண்டேஸ்வரருக்கும் தனிச்சந்நிதி உள்ளது.

பிரகாரத்தில் கொரட்டி நொண்டிக் கருப்பர், பேச்சி அம்மன், பத்திரகாளி, இராக்கச்சி அம்மன், மீண்டும் சின்ன நொண்டிக் கருப்பர், பெரிய நொண்டிக் கருப்பர் முத்துக்கருப்பர், சங்கிலிக் கருப்பர், பெரிய கருப்பர், அகோர வீரபத்திரர், சின்ன கருப்பர், முனீஸ்வரர், ஆஞ்சநேயர், சப்த கன்னியர் மற்றும் நாச்சியப்ப பண்டித வேளார் மற்றும் காரைக்குடி பிள்ளையார்பட்டி கோவில் முரு.ராம.ராம.மெ. குடும்பத்தார் 06.02.1927-ல் நிறுவிய இராமநாதன் செட்டியார், மானகிரியில் இளையாத்தக்குடி – ஒக்கூர் வகுப்பினரால் வணங்கப் பெறும் அருள்மிகு தேனாண்டாள் – குப்பான் செட்டியார், கண்டவராயன்பட்டி நகரத்தார்களால் வணங்கப் பெறும் கன்னியான் செட்டியார், தேவகோட்டை, மாத்தூர் – மணலூர் சி.நா.வெ.நா.நா.அழ. குடும்பத்தார், மானகிரியாரால் வணங்கப்பெறும் அருள்மிகு நாச்சாத்தாள், மூஷிதம் பலிபீடத்துடன் அருள்மிகு கற்பகப் பிள்ளையார், மூஷிதத்துடன் கன்னி மூலை கணபதி, தேவகோட்டை இளையாத்தக்குடி – ஒக்கூர் வகுப்பினரால் வணங்கப்பெறும் அடைக்காத்தாள், காரைக்குடி, பிள்ளையார்பட்டிக் கோவிலாரால் வணங்கப் பெறும் மெய்யாத்தாள், காரைக்குடி, இளையாத்தக்குடி – ஒக்கூர் பிரிவினரில் சிலரால் வணங்கப் பெறும் திருமாத்தாள், உ.சிறுவயல் நகரத்தார்களால் வணங்கப் பெறும் அடைக்கலவன் செட்டி – கருப்பாத்தாள், அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர் மற்றும் பைரவரும் அமைந்துள்ளனர். கருப்பர் சன்னதிக்கு எதிரில் உள்ள தூணில் காரைக்குடி குப்பான் செட்டியாரின் சதா சேவிப்புச் சிலை உள்ளது.

அச்சிலை அமைந்துள்ள தூணின் மேற்புறத்தின் மீது கல்வெட்டு ஒன்று உள்ளது. அதன் வாசகம் பின்வருமாறு:-

“உ கல்வாசல்
நாட்டில் இளையா
த்தக் குடியான குல
சேகரபுரத்தில் க
ணிவாசல் கு
டியான காறக்குடி
கறுப்பன் செட்டியார் மகன்
குப்பாண் செட்டியாற்”

என்று அக்கல்வெட்டு உள்ளது. இவர் அந்த மண்டபத்தைத் திருப்பணி செய்தவர் ஆவார். தற்போது அவர்கள் குடும்பத்தினரை காரைக்குடியில் வாரியப்பட்டியார் வீடு என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஆலயத்திற்கு வெளியே ஒரு பெரிய சேமங்குதிரை உள்ளது. பொதுவாக அனைத்துக் கோயில்களிலும் இரண்டு சேமம் குதிரைகள் இருக்கும். ஆனால், இங்கே உருவாக்கப்பட்டதோ ஒரே ஒரு சேமங் குதிரைதான். இதை அன்று உருவாக்கும் காலத்தில் அதன் கண் திறந்த போது எதிரே இருந்த ஊர் தீப்பிடித்து விட்டதாகவும், ஆகையினால் இதன் கண்பார்வையைச் சற்று கீழே ஆலயத்தை நோக்கி இருக்கும்படி வைத்துள்ளதாகக் கூறுகிறார்கள்.

இந்த ஆலயம் கண்மாய் கரையருகே அழகான எழில் தோற்றத்துடன் அமைந்துள்ளது. நாகதாழி மரத்தருகே மேடைக்காளியும், மேடைக்கருப்பரும் அமைந்துள்ளன. நாகலிங்கப் பூமரம் மிகவும் தனித்துவமான மணமிக்கது. இதனை நாகதாழி எனவும் அழைப்பர். இதைத் தெய்வாம்சம் பொருந்தியதாகத் தமிழர்கள் கருதினார்கள். இம்மரத்தின் கீழ் மேடை வடிவத்தில் அம்பிகை காளியாக வீற்றிருக்கின்றாள்.

(களப்பணி தொடரும்)

# கந்தர் சஷ்டி கவசம் – சிறப்புரை நூல் விமர்சனம்

இதுவரை 4 நூல்கள் எழுதியுள்ள நூலாசிரியர் புதுப்பட்டி இராமநாதன் பழனியப்பனின் ஐந்தாவது நூல் 'கந்தர் சஷ்டி கவசம் – சிறப்புரை'. தினந்தோறும் போகுமிடமெல்லாம் ஒலிக்கும், 'ஜனரஞ் சகமான' என்று கூடச் சொல்லலாம்.. அந்த அளவுக்கு எளிமையான சஷ்டி கவசத்துக்கு சிறப்புரையா என்ற சிறு வியப்புடன்தான் நூலை வாசிக்கத் தொடங்கினேன். பின்னர் தான் தெரிந்தது, இவ்வளவு நுட்பமான, நூதனமான பொருள் பொதிந்த கவசச் செய்யுள்களை, நாம் உட்பொருள் அறியாமலேயே இத்தனை நாட்களாகப் பாராயணம் செய்திருக்கிறோம் என்பது!




தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் முதல் தமிழிலும் ஆன்மிகத்திலும் தோய்ந்த மருத்துவர் சுதா சேஷய்யன் வரை, மிகப் பெருந்தமிழ் ஆளுமைகள் தந்திருக்கும் ஆசியுரையும் அணிந்துரைகளுமே போதும், நூலின் சிறப்பினை எடுத்துரைக்க! இந்தக் கால வழக்கு மொழியில் சொல்ல வேண்டுமென்றால், ஆசிரியர் 'சும்மா பிரித்து மேய்ந்திருக்கிறார்' என்றுதான் சொல்ல வேண்டும்.

முருகனின் பிறப்பு மற்றும் பெருமைகளில் தொடங்கி, கந்தர் சஷ்டிக் கவசம் பிறந்த காரணம், அதை இயற்றிய ஸ்ரீ தேவராய சுவாமிகள் அதை இயற்ற காரணம், எஸ்கே, எப்படி இயற்றினார் என்ற வரலாறுகளுடன் சுவையாகப் பயணிக்கிறது நூல்.

கவசத்தின் ஒரு சிறிய வார்த்தையைக் கூட விடவில்லை ஆசிரியர். 'துதிப்பார்க்கு' என்று துவங்கும் சஷ்டி கவசத்தின், முதல் வார்த்தையான 'துதிப்போர்க்கு', அடுத்த வார்த்தை 'வல்வினை' – இப்படியே வார்த்தைக்கு வார்த்தை பொருள் கூறி, அதற்கு இணையாக பல பக்தி இலக்கியங்களிலிருந்து தரவுகளை அவர் ஆய்வு செய்து அள்ளி வழங்கியிருப்பது பிரமிக்க வைக்கிறது. எடுத்துக்காட்டாக, "குமரனடி நெஞ்சே குறி" என்ற வரியில் வரும் 'குமரனடி' என்ற வார்த்தையில் இருக்கும் 'அடி' என்ற பதத்துக்கு அவர் தந்திருக்கும் சிறப்புரை பிரமாதம்!

"கடவுளர்களின் அருள் திரண்டு அவர்கள் திருவடிகளில் இருப்பதாக ஐதீகம்" என்று ஆரம்பிக்கும் ஆசிரியர், அதற்கு வள்ளுவரின் திருக்குறள், அருணகிரிநாதரின் கந்தர் அலங்காரம், திருமூலரின் திருமந்திரம், அப்பர் பெருமானின் தேவாரம், மாணிக்கவாசகரின் திருவாசகம், அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி, ஸ்ரீமூக கவியின் மூகபஞ்ச சதியின் பாதாரவிந்த சதகம் வரை அனைத்துப் பாடல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி, "இத்தனை பெருமை பெற்ற கந்தனின் திருவடி மலர்களை நாளும் பணிவதையே நம் குறிக்கோளாகக் கொள்ளச் சொல்கிறார் தேவராய சுவாமிகள்" என்று நிறைவு செய்கிறார்.

அதே போல சஷ்டி கவசத்தில் வரும் மந்திர ஒலிகளையும் 'ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்' என்ற ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரியின் மந்திரத்தையும், இன்னும் இதுபோல கவசச் செய்யுள்களில் ஒளிந்திருக்கும் மிக உயர்ந்த ஒலிக்குறிப்புகளையும் மிக நுட்பமாக ஆராய்ந்து, ஒப்பிட்டு, எளிமையாக வழங்கியிருக்கிறார் பழனியப்பன்.

எவ்வளவு நுணுக்கமான ஆய்வு. எத்தனை துல்லியமான தெளிவுரை! உள்ளங்கை நெல்லிக்கனி போல பொருளை விளங்க வைக்கும் இந்தச் சிறப்புரைக்காக அவர் எடுத்திருக்கும் முயற்சிகளும், கற்றிருக்கும் நூல்களும் ஏராளம். அத்தனையும் உள்வாங்கி சாறு பிழிந்து இனிக்க இனிக்கத் தந்திருக்கிறார். எந்தப் பாடலையுமே பொருள் புரிந்து படித்தால் அதன் சுவையே வேறு அல்லவா! அதுவும் இது முருகனுக்கான கவசம் என்னும் போது, இதன் பொருளறிந்து படிக்கும் போது, நமக்கு மிகப் பிரியமான முருகக் கடவுளை இன்னும் நெருங்கும் பந்தமும், பாசமும் ஏற்படுவது நிஜம். நமது உடலுக்கு எந்த ஊறும் விளையாமல் காக்கும் கவசம் இது என்பது நிதர்சனம்.

கந்தர் சஷ்டி கவசம் – சிறப்புரை

ஆசிரியர் இராமநாதன் பழனியப்பன்

வெளியிடுவோர்: அருள்மிகு செல்வமூர்த்தி விநாயகர் சாரிட்டபிள் ட்ரஸ்ட், பொன்னமராவதி.

தொடர்புக்கு: 9943224799.

# சிதம்பரத்தில் நகரத்தார் சம்போ



மணிமேகலை சரவணன்

காசி நகரத்தார் சம்போ என்பது, காசியில் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் இருந்து, காசி விஸ்வநாதர் கோயிலுக்கு இறைப் பொருட்களை 'சம்போ சம்போ சங்கர மகாதேவா' என்று உரக்க சொல்லிக் கொண்டு செல்லும் ஒரு மரபு ஆகும். இந்த மரபு 1813 முதல் ஒரு நாள் கூடத் தவறாமல் நடந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பஞ்சாப் மெயில் தவறினாலும் நகரத்தார் சம்போ தவறாது என்று காசி மக்கள் ஒரு பழமொழியாகக் கூறுவார்கள். தேவகோட்டையில் சிதம்பரம் நாச்சியப்ப செட்டியார் குடும்பம் இறைபணிக்கு பெயர் பெற்ற குடும்பம். தேவகோட்டை சித்திரை திருவிழாவில் ஏழாம் நாள் உற்சவம் கைலாய வாகனம். புரட்டாசி மாதம் நவராத்திரியில் ஏழாம் நாள் திருவிழா புட்டுக்கு மண் சுமந்த உற்சவம். இந்த இரண்டு உற்சவங்களும் தேவகோட்டை சிதம்பரம் நா.வீடு பொது. அவர்கள் வழி வழியாக தொடர்ந்து செய்யும் இறைபணிக்கு எடுத்துக்காட்டு. இத்தகைய பெருமை வாய்ந்த வீட்டில் கனகசபை என்ற பிள்ளையை அவரது பெற்றோர் அவரின் பதினாறாவது வயதில் காசிக்கு சென்று விஸ்வநாதரை தரிசிக்க மற்ற நகரத்தார்கள் துணையுடன் தனியே அனுப்பி வைத்தார்கள். அதன் பின் கனகசபை அவர்கள் பலமுறை காசிக்கு சென்று வருகின்ற போதிலும் இளம் வயதில் காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் இருந்து சம்போ எடுத்துச் செல்லப்பட்ட நிகழ்வினை கனகசபை என்ற இளம் பிள்ளை தன் மனதுக்குள் பொதிந்து வைத்துக் கொண்டார். சிதம்பரத்தில் இப்படி ஒரு நகரத்தார் சம்போ எடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஆவல் அந்த பிஞ்சு உள்ளத்தில் உதித்து, அது அவர் வளர வளர அதுவும் வளர்ந்து பதினாறு வயதில் தோன்றிய எண்ணம் இப்போது அறுபதாவது வயதில் மணிவிழா காணும் சமயத்தில் அவரது கனவு அனைத்து நகரத்தார் பெருமக்களின் ஆதரவோடு நனவாகி உள்ளது. சிதம்பரம் நகர விடுதியில் இருந்து கனக சபையான தில்லையில் ஆனந்த நடனம் ஆடுகின்ற நடராஜர் சுவாமிக்கு ஆவணி 1 ஆம் தேதி முதல் கனகசபை அவர்கள் ஒருங்கிணைப்பு செய்ய சம்போ எடுத்து செல்லப்படுகிறது. மாலை வேளையில் நடைபெறும் ஸ்படிக லிங்க அபிஷேகத்திற்குரிய பொருட்களை நகரத்தார் பெருமக்கள் ஆவணி 1-ஆம் தேதி 17.08.2025 முதல் கொண்டு செல்கின்றனர். முதல் நாள் சம்போ தேவகோட்டை ஜமீன்தார் அவர்களின் உபயத்துடன் தொடங்கப்பட்டு. நீதி அரசர் அவர்களின் மூத்த புதல்வர் AR.L. அருணாசலம் அவர்களின் வாழ்த்துரையோடும் தேவகோட்டை ராமநாதன் அவர்களின் சொற்பொழிவோடும் சிதம்பரம் நகரத்தார் சங்க உறுப்பினர்கள் தலைவர்கள் பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து ஊரில் இருந்தும் வந்திருந்த நகரத்தார் பெருமக்கள் புடை சூழ வெண் கொற்றக் குடை பிடித்து விடுதியில் இருந்து கோயில் வரை நடந்து எடுத்துச் செல்லப்பட்டது. தொடர்ந்து தினம் ஒரு நகரத்தார் என்ற வகையில் உபயதாரர்கள் கோயிலுக்கு சம்போ எடுத்துச் செல்கின்றனர். அருள்மிகு தில்லைக் கூத்தனையும் சிவகாமி அம்பிகையையும் அருகிருந்து பார்க்கும் பாக்கியமும், நம் பெயர் நட்சத்திரம் சொல்லி அர்ச்சனை செய்யவும், ஸ்படிக லிங்க அபிஷேக ஆராதனைகளை பக்கத்தில் இருந்து பார்க்கும் பாக்கியமும் இந்த சம்போ கொண்டு செல்பவர்களுக்கு கிட்டும். 365 நாளைக்கு 365 நகரத்தார் உபயம் என்பது இதன் தனிச் சிறப்பு. கிட்டதட்ட 300 பேருக்கும் மேல் இதற்கு முன் பதிவு செய்துள்ளனர். இன்னும் சில தேதிகளுக்கு உபயதாரர்கள் பதிவு செய்ய இயலும். விரும்புபவர்கள் திரு கனகசபை அவர்களை தொடர்பு கொள்ளலாம். தொடர்பு எண்: +91 63813 98533. அனைத்து நகரத்தார் பெருமக்களும் இந்த சம்போ பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளவும், வரும் காலத்தில் இளைஞர்கள் தொடர்ந்து பல்லாண்டு காலம் இதை நடத்திச் செல்லவும், எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனை வேண்டி வணங்கி மகிழ்கிறோம்.





நமது செட்டிநாடு

சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

### 141) திருவரங்கம்:

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருவரங்கம் வைணவத் திருத்தலங்களில் முதன்மையானது. கோயில் என்றாலே அது திருவரங்கம்தான். ஆழ்வார்களில் மதுர கவியாழ்வாரைத் தவிர மற்ற பதினோராழ்வார்கள் பாடிய தலம் இது மட்டுமே. இந்தப் பகுதி ஸ்ரீரங்கநாதன் பள்ளி என்றே முன்னாளில் அழைக்கப்பெற்றுக் காலப்போக்கில் திருச்சீரங்கநாதன் பள்ளியாகி இப்பொழுது திருச்சிராப்பள்ளி ஆகிவிட்டது என்று கூறப்படுகிறது. இங்கு பள்ளிகொண்டுள்ள பெருமாள் சத்தியலோகத்தில் பிரம்மதேவனால் வழிபடப் பெற்றவர். சூரிய குலத்தில் இட்சுவாகு மன்னன் இவரை அயோத்திக்குக் கொண்டு வந்தான். அக்குலத்தில் பிறந்த இராமபிரான் வரை எல்லோரும் இவரை வழிபட்டனர். இராமாயணம் முடிந்ததும் இராமபிரான் இப்பெருமாளை வீடணன் கேட்டுக் கொண்டபடி அவனுக்குக் கொடுத்தார். அவன் இவரைக் கைகளில் தாங்கிய புஷ்பக விமானத்தில் ஏறி இலங்கை செல்லும் வழியில், பக்தர்கள் கேட்டுக் கொண்டபடி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் ஒரு திருவிளையாடல் செய்தார். திருச்சிக்கு மேலே விமானம் பறந்த போது வீடணனுக்கு மலசலம் கழிக்க வேண்டிய அவசரம் ஏற்பட்டது. விமானத்தைக் காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் இடையில் உள்ள பெரிய மணல் திட்டில் இறக்கினான். அவனுக்கு முன்னால் அந்தணச் சிறுவனாகப் பிள்ளையார் நின்றார். வீடணன் இவரைக் கையில் வைத்திரு. கீழே வைத்து விடாதே. வைத்தால் அசைக்க முடியாது. நான் வந்து வாங்கிக் கொள்கிறேன்" என்று கூறிப் பிள்ளையாரிடம் பள்ளிகொண்ட பெருமாளைக் கொடுத்தான்.

பிள்ளையார் "நான் சிறுவன். இவர் மிகக் கனமாயி ருக்கிறார். நான் மூன்று எண்ணிச் சொல்வதற்குள் வந்துவிடு" என்றார். சென்ற வீடணன் வரத் தாமதமாயிற்று. அந்தணச் சிறுவனாக நின்ற பிள்ளையார் ஒன்று இரண்டு மூன்று என்றார். அவன் வரவில்லை. பிள்ளையார் பெருமாளைக் கீழே வைத்து விட்டார். கங்கையைப் விடப் புனிதமான காவிரிக் கரையில் "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசைப் பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கிப் பச்சை மாமலை போல் மேனி, பவளவாய் கமலச் செங்கண் அச்சுதன் பள்ளிகொண்டு விட்டார். அவருக்குக் காவிரிக் கரை பிடித்து விட்டது. அயோத்தி நகரிலிருந்து புறப்பட்டு வந்த பெருமாள் ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்துக் கேட்பதற்காகப் பொன் கொழிக்கும் பொன்னி நதி தன்னடியைத் தான் வருடப் புன்னகையோடு பள்ளிகொண்டு விட்டார். வீடணன் அந்தணச் சிறுவனைத் தலையில் குட்டினான். சிறுவன் மறைந்து விட்டான். இராமபிரானால் வணங்கப்பட்டதால் அரங்கநாதர் பெரிய பெருமாள் ஆனார். தாயார் படிதாண்டாப் பத்தினியான ஸ்ரீரங்க நாச்சியார். உற்சவர் நம்பெருமாள். இது ஆளவந்தாரும், இராமானுஜரும் தலைமையேற்று வைணவத்தை வளர்த்த இடம். இத்தலத்தில் அரியக்குடி சித. சாத்தப்ப செட்டியார், சித. அண்ணாமலைச் செட்டியார் இருவரும் பெரிய அன்னசத்திரம் கட்டினர். ரௌத்திரி ஆண்டு, தை மாதம், 17-ஆம் நாள் (27.04.1860) இக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது கட்டிட மதிப்பு ஐம்பதாயிரம் ரூபாயாகும். இச்சத்திரத்துக்கு விறகுக்கெனத் தோட்டம் விடப்பட்டது. மூன்று லட்ச ரூபாய் மதிப்புள்ள நஞ்சை நிலங்கள் எழுதிவைக்கப் பெற்றன.

### பாடல் பெற்ற திருத்தலங்களில் நகரத்தார் செய்த திருப்பணிகள்:

இதுவரை சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வர் பெருமக்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற திருத்தலங்களில், தென்னாட்டிலுள்ள ஆலயங்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்த திருப்பணிகளை எண்ணி எழுதிப் பார்க்கும் பேறு நமக்குக் கிடைத்தது. இவற்றிலேயே சில விவரங்கள் விட்டுப் போயிருக்கலாம். அவை கிடைக்கும் பொழுது இணைத்துக் கொள்வோம். இவை தவிர,

1) பாடல் பெறாத தென்னாட்டுத் திருத்தலங்களில் நகரத்தார் கடந்த 200 ஆண்டுகளில் செய்த திருப்பணிகள்.

2) வடநாட்டில் செய்த திருப்பணிகள்.

3) செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள நகரத்தார் ஊர்களில் செய்த திருப்பணிகள்.

4) அயல்நாடுகளில் செய்த திருப்பணிகள் ஆகியவற்றையும் சுருக்கமாகப் பார்க்க இருக்கிறோம். "காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே" என்று அப்பரடிகள் பாடுவது போல இறைவன் திருவருளால் கிடைக்கும் தகவல்களைப் பட்டியலிட்டு எழுதுகிறோம். திருப்பணி செய்த நகரத்தார் குடும்பங்களைச் சேர்ந்த பெருமக்கள் சிரமம் கருதாமல் அவர்கள் முன்னோர் செய்த திருப்பணி விவரங்களைத் தக்க ஆதாரங்களுடன் அனுப்பினால் அவர்கள் திருவடி பணிந்து நன்றியுடன் இணைத்துக் கொள்கிறோம்.

142) திருப்புலீச்சரம்:

சிதம்பரத்தில் உள்ள இளமையாக்கினார் கோயில் திருப்புலீச்சரம் என்று அழைக்கப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகையில் அவரால் முதலில் பாடப்பெற்றவர் திருநீலகண்டத்துக் குயவனார். திருநீலகண்டத்தின் ஆணையாகச் சத்தியம் செய்ததால் இளமையும், அழகும் மிக்க தன் மனைவி உள்பட எந்த மாதரையும் மனத்தாலும் தீண்டாமல் பல ஆண்டுகள் வாழ்ந்தார். இருவரும் முதுமை அடைந்தனர். சிவனடியாராக வந்த சிவபெருமான் இவரிடம் ஒரு திருவோடு கொடுத்துப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி வெளியில் போனார். மீண்டும் வந்து கேட்ட பொழுது திருவோடு காணாமல் போய்விட்டது. "நான் திருடவில்லை என்று உன் மனைவி கையைப் பிடித்துச் சத்தியம் செய்" என்றார் சிவனடியார். திருநீலகண்டர் காரணம் சொல்லாமல் மறுத்தார். வழக்குத் தில்லை வாழ் அந்தணர் சபைக்குச் சென்றது. அவர்கள் கேட்டதால், வேறு வழியின்றி நடந்த கதையைச் சொன்னார் திருநீலகண்டர். தான் பரத்தை வீட்டுக்குச் சென்றதையும், அதனால் தன் மனைவி திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டுத் தன்னைத் தீண்டக் கூடாது என்றதையும், அதனால் அவளை மட்டுமின்றி மற்ற மாதர்களையும் தான் மனத்தினாலும் தீண்டாமல் இத்தனை ஆண்டுகள் இருந்ததையும் நாயனார் விளக்கினார். அதன் பிறகு ஒரு கோலை இருபுறமும், இருவரும் பிடித்துச் சத்தியமாகத் திருவோட்டைத் திருடவில்லை என்று கூறிக் குளத்தில் மூழ்கி எழுந்தனர். கையிலிருந்த கோல் மறைந்தது. இருவரும் இளமை பெற்றனர். இறைவர் உமையோடும் காட்சி தந்தார். எனவே, இக்கோயில் இளமையாக்கினார் கோயில் எனப்பட்டது. இக்கோயில் காரைக்குடி பெரி.க. சின்னையா செட்டியார் வகைக் குடும்பத்தாராலும், நகரத்தார் பொருளுதவியினாலும் திருமதில் உள்பட எல்லாப் பகுதிகளும் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் முற்றும் புதிதாய்த் திருப்பணி செய்யப் பெற்று, சார்வரி ஆண்டு, வைகாசித் திங்கள், 8-ஆம் நாள் (20.05.1900) முதல் திருக்குட நன்னீராட்டும், குரோதன ஆண்டு, ஆனித்திங்கள், 25-ஆம் நாள் (08.07.1925) இரண்டாவது திருக்குட நன்னீராட்டும் சிறப்பாக நடைபெற்றன. காரைக்குடி பெரி.க. குடும்பத்தினர் நான்காயிரம் ரூபாய் செலவில் வேத பாடசாலைக் கட்டிடம் அமைத்தனர். இக்குடும்பத்தார் ரூபாய் தொண்ணூற்றி ஐந்தாயிரம் செலவு செய்து இளமையாக்கினர் குளத்தையும் புதுப்பித்துக் கட்டினர்.

143) திருஅனந்தேசுரம்:

சிதம்பரத்தில் உள்ள திருஅனந்தேசுரம் திருப்பணி கோட்டையூர் வெ.சி.அ. குடும்பத்தைச் சேர்ந்த இராமசாமி செட்டியார் அவர்களால் செய்யப் பெற்றது.

144) குத்தாலம் இராசகோபாலபுரம்:

கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் உள்ள குத்தாலம் திருத்துருத்தி என்று பாடப் பெற்றது. இத்தலத்தில் இராசகோபாலபுரத்திலுள்ள சிவன் கோவில் தேவகோட்டை ராம.அரு.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் பன்னிரெண்டு ஆயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப் பெற்று ஈஸ்வர ஆண்டு, வைகாசித் திங்கள், 22-ஆம் நாள் (04.06.1937) திருக்குட நன்னீராட்டு நடந்தது.

145) திருத்தக்களூர்:

திருநள்ளாற்றுக் கிழக்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்திலும், காரைக்காலுக்கு மேற்கே மூன்று கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது திருத்தக்களூர்த் திருத்தலம். இங்கே அறம் வளர்த்த நாயகி உடனாகிய திரிலோகநாத சுவாமி அருள்பாலிக்கிறார். இது தேவார வைப்புத் தலம். இதற்குத் தனிப்பதிகம் இல்லை. திருநாவுக்கரசர் ஆறாம் திருமுறையில் "மங்குல் மதிதவழும் மாடவீதி" (பாடல் எண்.6254) என்றும், "அஞ்சைக் களத்துள்ளார்" (பாடல் எண்.6759) என்றும், "இடைமருது ஈங்கோய்" (பாடல் எண்.6946) என்று தொடங்கும் மூன்று பாடல்களில் தக்களூரார் என்று குறிப்பிடுகிறார். ஏழாம் திருமுறையில் சுந்தரர் "வீழக்காலனை" எனத் தொடங்கும் (பாடல் எண்.7336) பாடலில் இவ்வூரைக் குறிப்பிடுகிறார். இந்தத் திருக்கோயிலுக்குத் தேவகோட்டை 'மேனா' வகையைச் சேர்ந்த ராம.மெ.ராம.அ. இராமநாதன் செட்டியார் அவர்கள் ரூபாய்.75,000/- செலவு செய்து திருப்பணி செய்து, ஈஸ்வர ஆண்டு, ஆவணி மாதம், ஐந்தாம் நாள், 19.08.1877-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள். இக்குடும்பத்தார் 1915-ஆம் ஆண்டில் இரண்டாவது திருக்குட நன்னீராட்டும் செய்தார்கள். இப்பொழுதும் இக்குடும்பத்தாரின் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

146) பொருள் வைத்த சேரி:

சிக்கல் திருத்தலத்துக்கு மிக அருகில் உள்ள இத்தலம் இப்பொழுது புறவாச்சேரி எனப்படுகிறது. நகரத்தார் குருபீடமான கோவிலூர்த் திருமடத்தை நிறுவிய முத்திராமலிங்க ஞானதேசிகர் என்ற கோவிலூர் ஆண்டவரின் குருநாதர் உகந்தலிங்க சுவாமிகள் இங்குதான் ஆண்டவருக்கு உபதேசம் அளித்தார். இங்குள்ள சிவன்கோயிலில் உள்ள முருகன் திருமேனி உலகப்புகழ் பெற்றது. இந்தச் சிவாலயம் காரைக்குடி நா.வ. மெய்யப்ப செட்டியார், சா.நா. சொக்கலிங்கம் செட்டியார் ஆகிய இருவர் முயற்சியாலும், நகரத்தார் பொருளுதவியாலும் ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் செலவில் திருப்பணி செய்யப் பெற்று, சுக்கில ஆண்டு, வைகாசித் திங்கள், ஆறாம் நாள், (19.05.1929) திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது.

(திருப்பணிகள் தொடரும்)

# திருச்செம்பொன் செய்கோயில் – [30]

நா. சௌரிராஜன், கோட்டையூர்



செம்பொன் செய்கோயில்
பொன்னரங்கனே போற்றி!
அல்லி மாமலர் நாச்சி நாயகனே போற்றி!

இத்தலம் திருநாங்கூரின் மத்தியில் உள்ளது. இராமபிரான், இராவணனைக் கொன்ற பிரமகத்தி தோஷம் நீங்கிட



இத்தலத்தில் முனிவர் ஒருவர் சொல்லியபடி நான்கு நாட்கள் தங்கிப் பொன்னால் பசு செய்து அந்தணனுக்குத் தானம் செய்ததாகவும், அவன் அதைக் கொண்டு இந்தக் கோயிலைக் கட்டியதால் செம்பொன் செய்கோயில் எனப் பெயர் பெற்றது. மூலவர்: செம்பொன் ரங்கர். தாயார்: அல்லி மாமலர் நாச்சியார். திருமங்கையாழ்வாரால் 10 பாக்களில் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம்.

# திருமணி மாடக் கோவில் – [31]

மணிமாடக் கோயில் நாராயணா போற்றி.
நந்தா விளக்குப் பெருமாளே போற்றி.
புண்டரீக வல்லித் தாயே போற்றி!

திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலம் திருநாங்கூரிலேயே உள்ளது. வருடத்தில் எல்லா நாட்களிலும், காலை நேரத்தில் பெருமாள் மீது சூரிய ஒளி விழுகிறது. இதனால் பெருமாள் எப்போதும் அணையா (நந்தா) விளக்கு போல பிரகாசமாகக் காட்சி தந்து அறியாமை என்னும் இருளைப் போக்குகிறார்.

பத்ரிநாத்தில் இருக்கும் நாராயணனே இங்கு 11




திருமாலில் ஒருவராக வந்து நின்றார். இது பத்ரிக்குச் சமமான திருத்தலம். திருநாங்கூர் கருட சேவைத் திருவிழா இந்தக் கோவிலின் முன்புதான் நடைபெறுகிறது. 11 பெருமாள்களுக்கும் பத்ரி நாராயணரே பிரதானமாக உள்ளார். திருமால் சாந்தப்படுத்திய சிவபெருமான் இக்கோயில் எதிரில் மதங்கீஸ்வரர் என்ற திருநாமத்துடன் தனிக்கோவிலில் அருள்பாலிக்கிறார்.

பத்ரியில் இருக்கும் நாராயணர் நான்கு வேதங்களையும் குதிரையாக்கி, பிரம்ம தேவரைத் தேரோட்டியாக அமர்த்திக் கொண்டு இங்கு வந்து எழுந்தருளினார். அதனால் இக்கோயில் தேர் போன்ற அமைப்பிலேயே அமைந்துள்து.



நாராயணனை நந்தா விளக்கே என்கிறார் திருமங்கையாழ்வார். அழகிய மாடங்களைக் கொண்ட வீடுகள் நிறைந்த இங்கு எம்பெருமான் எழுந்தருளி இருப்பதால் திருமணி மாடக்கோயில் எனப் பெயர் பெற்றது.

மூலவர்: நாராயணன் – கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலம் தாயார்: புண்டரீகவல்லித் தாயார்.

# திருவைகுந்த விண்ணகரம் - [32]

வைகுந்த விண்ணகர நாதனே போற்றி
வைகுந்த வல்லி வைகுந்தப் பெருமாளே போற்றி!

வைகுந்தமான பரமபதத்தில் எழுந்தருளியுள்ள வைகுண்ட நாதனே இந்த வைகுந்த விண்ணகரத்தில் உள்ளார். மூலவர்: வைகுந்த நாதன், தாயார்: வைகுந்தவல்லி. இப்பெருமானும் கருட சேவைக்கு வருவார். ராமபிரான்



பிறந்த இக்ஷ்வாகு குலத்தில் ஸ்வேத கேது என்ற மன்னன் நீதி தவறாது ஆட்சி செய்து, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி - திருமால் மீது அளவு கடந்த பக்தி கொண்டு - வைகுண்டம் சென்று அவரைத் தரிசிக்க வேண்டும் என விருப்பம் கொண்டான். அவனது மனைவி தமயந்தியும் உடன் வருவதாகக் கூறினாள். மன்னனும் தனது அரச கடமைகளை எல்லாம் முடித்து விட்டு, தன் மனைவியுடன் கானகம் சென்று பெருந்தவம் செய்ய ஆரம்பித்து, தங்களைச் சுற்றி தீ வளர்த்து அதன் நடுவில் நின்று நீண்ட நாட்கள் தவம் புரிந்தனர். தங்கள் பூத உடலைத் துறந்து வைகுண்டம் சென்றனர். ஆனால், அங்கே வைகுண்டவாசனைக் காணவில்லை. இருவரும் மிகவும் வருத்தத்தில் இருந்த போது, அங்கே வந்த நாரத முனிவர், "நீங்கள் தவம் செய்திருந்தாலும், நிறைய தான தர்மங்கள் செய்யவில்லை. அதனால்தான், வைகுண்டத்தில் திருமாலின் தரிசனம் கிடைக்கவில்லை" என்றார். மேலும், "பூவுலகில் காவிரி ஆற்றுக் கரையில் அமைந்துள்ள ஐராவதேஸ்வரரை வணங்கி முறையிட்டால், அவர் அருளால் உங்களுக்கு வைகுண்ட நாதனின் தரிசனம் கிடைக்கும்" என்று கூற, இருவரும் அதன்படியே செய்திட, சிவபெருமான் காட்சி கொடுத்து, "நாம் மூவரும் திருமாலின் தரிசனத்துக்காக தவம் இருப்போம்" என்று கூறிட, அவர்களுடன் உதங்க முனிவரும் சேர்ந்து கொண்டு நால்வரும் திருமாலை நோக்கி நீண்ட தவம் புரிந்தனர். திருமால் வைகுண்ட நாதனாக அவர்களுக்கு இங்கே காட்சி தந்தார். நால்வருக்கும் திருமால் காட்சி கொடுத்த இடம் என்பதால் இத்தலம், 'வைகுண்ட விண்ணகரம்' என்று அழைக்கப்பட வேண்டும் என்றும், "வைகுண்ட நாதர்" என்ற திருநாமத்துடன் திருமால் இங்கு கோயில் கொண்டு அருள வேண்டும் என்றும் சிவபெருமான், திருமாலிடம் வேண்டிக் கேட்டிட, அதன்படி, வைகுண்ட வாசனான எம்பெருமான், இப்பூலோகத்தில் வைகுந்தவல்லித் தாயாருடன் அருள்பாலிக்கிறார். பூலோகத்தில், நாம் வாழ்ந்திடும் காலத்திலேயே வைகுண்ட நாதனைத் தரிசிக்க இயலும். வைகுண்டத்தில் தேவர்களுக்குத் திருமால் காட்சி அளிப்பது போல, இத்தலத்தில் பூலோக பக்தர்களுக்கு அருள்புரிவதால், பரமபதத்திற்குச் சமமான தலமாக இது கருதப்படுகிறது.

# திருத் தேவனார் தொகை - [33]

மலர்ப் பொழில் சூழ் திருத்தேவனார் தொகையே போற்றி!
தெய்வங்களின் நாயகனே தெய்வநாயகா போற்றி.
கடல் மகள் நாச்சியே போற்றி!
கருணைக் கடல் கடவுளே போற்றி!



இத்தலம் திருநாங்கூரில் இருந்து 1 மைல் தொலைவில் உள்ளது. திருநாராயணனைக் காணத் தேவர்கள் இந்த இடத்தில் கூட்டம் கூட்டமாய் சபை கூடி நின்றதால் தேவனார்த் தொகை ஆயிற்று. திருப்பாற்கடலில் தோன்றிய திருமகளைப் பெருமாள் (தேவனார்) மணம் முடிப்பதைக் காண தேவர்கள் தொகையாக அதாவது, கூட்டமாக வந்ததால் திருத்தேவனார்த் தொகை என்று பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. மூலவர்: தெய்வ நாயகன். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம். தாயார்: கடல் மகள் நாச்சியார். திருநாங்கூரில் எழுந்தருளிய 11 பெருமாள்களில் இவர் திருவடந்தைப் பெருமான் ஆவார்.

(பயணம் தொடரும்)

திருநாங்கூர் 11 பெருமாள் கருடசேவைக்கு நம்மை அழைக்கும் ஸ்ரீ குமுதவல்லி ஸமேத திருமங்கை ஆழ்வார்





27 கிளைகள், 36 வருட அனுபவம்

சுற்றுலாவா யோசிக்கவே வேண்டாம்



**ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி**

Incredible India

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை-1

## SPECIAL TOURS 2025

www.srimurugantravel.com

| | | |
|---|---|---|
| 10 நாள் | ஆக்ரா-காசி அயோத்தியா — மாதந்தோறும் 9,21 | Rs. 13500/- |
| 13 நாள் | டெல்லி-ஆக்ரா அயோத்தியா — மாதந்தோறும் 6,18,27 | Rs. 17500/- |
| 6 நாள் | ஸ்ரீரடி பண்டரிபுரம் — மாதந்தோறும் 1,8,15,22 | Rs. 8000/- |
| 10 நாள் | குஜராத்-துவாரகா பட்டேல்சிலை — மாதந்தோறும் 17 | Rs. 17000/- |
| 17 நாள் | பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி — மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 30000/- |
| 13 நாள் | பத்ரிநாத் கேதார்நாத் — மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 25000/- |
| 14 நாள் | முக்திநாத்-நேபாள் கொல்கத்தா — மாதந்தோறும் 18 | Rs. 27000/- |
| 15 நாள் | நவஜோதிர்லிங்கம் — மாதந்தோறும் 18 | Rs. 20000/- |
| 10 நாள் | சிம்லா-மணாலி ஆக்ரா — ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 | Rs. 18000/- |
| 13 நாள் | அமர்நாத் — ஜூலை முதல் | Rs. 16000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 நாள் மும்பை-ஸ்ரீரடி — தினந்தோறும் — Rs. 14990/- | 6 நாள் காசி அயோத்தியா — Rs. 34990/- | 6 நாள் சிங்கப்பூர் மலேசியா — Rs. 84,990/- | 5 நாள் ஸ்ரீலங்கா Special — Rs. 44,990/- | 5 நாள் துபாய் அபுதாபி — Rs. 74,990/- |
| 4 நாள் கோவா SPL — Rs. 24990/- | 8 நாள் பத்ரி-கேதார் — வாரந்தோறும் ஞாயிறு — Rs. 44990/- | 5 நாள் சிங்கப்பூர் மலேசியா — Rs. 74,990/- | 8 நாள் Exclusive ஸ்ரீலங்கா — Rs. 64,990/- | 7 நாள் சௌத்கொரியா — Rs. 1,69,990/- |
| 4 நாள் டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர் — வாரந்தோறும் வியாழன் — Rs. 26990/- | 12 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி — வாரந்தோறும் திங்கள் — Rs. 54990/- | 10 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து — Rs. 1,34,990/- | 5 நாள் இந்தோனேசியா பாலி — Rs. 64,990/- | 7 நாள் கென்யா — Rs. 1,59,990/- |
| 5 நாள் அந்தமான் ஹேவலோக் — தினந்தோறும் — Rs. 29990/- | 6 நாள் முக்திநாத் நேபாள் — ஏப்ரல் 1,18 மே 1,10,18 — Rs. 29990/- | 8 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து — Rs. 94,990/- | 6 நாள் வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா — Rs. 94,990/- | 9 நாள் ஆஸ்திரேலியா — Rs. 2,94,990/- |
| 5 நாள் காஷ்மீர் குல்மார்க் — வாரந்தோறும் புதன் — Rs. 44990/- | 6 நாள் பூடான் SPL — வாரந்தோறும் செவ்வாய் — Rs. 44990/- | 5 நாள் பாங்காக் பட்டாயா Standard — Rs. 52,000/- | 7 நாள் Exclusive சீனா — Rs. 1,54,000/- | 11 நாள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து — Rs. 5,29,990/- |
| 5 நாள் டார்ஜலிங் கேங்டாக் — வாரந்தோறும் புதன் — Rs. 39990/- | 8 நாள் காஷ்மீர் லே-லடாக் — வாரந்தோறும் ஞாயிறு — Rs. 64990/- | 4 நாள் பாங்காக் பட்டாயா Basic — Rs. 37,990/- | 10 நாள் ஹாங்காங் மக்காவ் — Rs. 1,34,990/- | 9 நாள் ஜப்பான் — Rs. 2,94,990/- |
| 7 நாள் NORTH EAST — வாரந்தோறும் திங்கள் — Rs. 44990/- | 5 நாள் சிம்லா-குளு மணாலி — வாரந்தோறும் புதன் — Rs. 27990/- | 5 நாள் புக்கட் கராபி — Rs. 64,990/- | 6 நாள் ரஷ்யா Special — Rs. 1,34,990/- | 12 நாள் ஈரோப் Special — Rs. 2,74,990/- |
| 3 நாள் பூரி புவனேஸ்வர் — வாரந்தோறும் வெள்ளி — Rs. 24990/- | 5 நாள் லே-லடாக் — வாரந்தோறும் — Rs. 54990/- | 8 நாள் Exclusive தாய்லாந்து — Rs. 94,990/- | 4 நாள் எகிப்து Special — Rs. 1,29,990/- | 4 நாள் உஸ்பெகிஸ்தான் — Rs. 54,990/- |
| 7 நாள் குஜராத் துவாரகா — வாரந்தோறும் செவ்வாய் — Rs. 35990/- | 6 நாள் நைனிட்டால் முசௌரி-கார்பெட் — வாரந்தோறும் புதன் — Rs. 34990/- | 4 நாள் மாலத்தீவு Special — Rs. 59,990/- | 8 நாள் எகிப்து Cruise — Rs. 1,65,990/- | 4 நாள் கஜகஸ்தான் அல்மைட்டி — Rs. 74,990/- |

| ஆஸ்திரேலியா | SCANDINAVIA | ஈரோப் |
|---|---|---|
| 8 நாள் | 10 நாள் | 12 நாள் |
| ரூ. 2,59,990 முதல் | ரூ. 2,99,990 முதல் | ரூ. 2,74,990 முதல் |

**இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416**

கிளைகள் : சென்னை, வடபழனி, பெரியமேடு, மாம்பழம், மைலாப்பூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, காரைக்குடி, கோவை, திருச்சி, பழநி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பூர், இராஜபாளையம்

**24x7 Calling Mobile : 98424 47305**



# தொழில் தொடங்கலாம் வாங்க 81

சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட்-அப் உலகம்

# வீட்டிற்கே வரும் டிரையல் ரூம் ஒரு ஸ்டார்ட்-அப்...

சாதாரணமாக கடைக்குச் சென்று துணிகள் வாங்கும் போது டிரையல் ரூமிற்கு சென்று பல ஆடைகளை அணிந்து பார்த்து அதில் பெஸ்ட் ஆன ஒன்றை வாங்குவது நாம் எல்லோரின் வழக்கம். அந்த டிரையல் ரூம் வீட்டிற்கே வந்தால் எப்படி இருக்கும்? இது தான் இந்த ஸ்டார்ட் அப் கம்பெனியின் (tryo) கான்சப்ட்.

பெங்களூருவை தளமாகக் கொண்ட இந்த ஸ்டார்ட் அப், ஆடைகளை வாங்குவதற்கு பணம் செலுத்துவதற்கு முன் வீட்டில் போட்டு பார்த்து பிடித்ததை எடுத்துக் கொண்டு மீதியை ரிட்டர்ன் செய்வது என்ற கான்சப்டை வழங்குவதன் மூலம் ஆன்லைன் ஷாப்பிங் செய்யும் வழக்கத்தில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்திருக்கிறது.

### இந்தியாவின் பேஷன் சந்தை

இந்தியாவின் ஃபேஷன் ஆன்லைன் வணிக சந்தை 2032-ஆம் ஆண்டுக்குள் 8,50,000 கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், சரியான பிட்டிங், துணிகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மை குறித்த கவலைகள் காரணமாக கிட்டத்தட்ட 40% வாடிக்கையாளர்கள் ஆன்லைனில் ஷாப்பிங் செய்ய தயங்குகிறார்கள். இந்த நம்பிக்கையின்மை பெரும்பாலும் வாங்குபவர்களை ஆஃப் லைன் கடைகளுக்குத் தள்ளுகிறது, இது டிஜிட்டல் ஃபேஷன் அனுபவத்தில் ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்துகிறது. 'வீட்டிலேயே டிரையல் பார்க்கவும், பின்னர் பணம் செலுத்தவும்' என்ற வகையான ஃபேஷன் சந்தையை இந்த நிறுவனம் ஆரம்பித்து வைத்துள்ளது.

ஃபேஷன் ஆன்லைன் வணிகத்தில் உள்ள நம்பிக்கை இடைவெளியைத் தீர்க்க இந்த ஸ்டார்ட்அப் உருவாக்கப்பட்டது என்று எடுத்துக் கொள்ளலாம். வாங்குவதற்கு முன் முயற்சிப்பதன் மூலம் வரும் நம்பிக்கையை தக்க வைத்துக் கொண்டு ஆன்லைன் வணிகத்தின் வசதியை வழங்க வேண்டிய அவசியம் இருந்தது. அதற்கு இந்த ஸ்டார்ட் அப் கம்பெனி வழி வகுத்துள்ளது.

### எப்படி செயல்படுகிறது?

இந்த கம்பெனியின் செயலியில் (app) சென்று உங்களுக்கு பிடித்த 10 ஆடைகள் வரை பணம் ஏதும் கொடுக்காமலேயே ஆர்டர் செய்து, அவற்றை 60 நிமிடங்களிலேயோ அல்லது நீங்கள் விரும்பும் டயத்திலோ பெற்று 30 நிமிடத்தில் டிரையல் பார்த்து முடித்து விட்டு, பிடித்தமானவைகளை எடுத்துக் கொண்டு, அதற்கான பணத்தையும் செலுத்தி விட்டு, மீதமுள்ள ஆடைகளை திருப்பி கொடுத்து விடலாம். முதல் ஆர்டருக்கு தற்சமயம் 50 சதவீதம் தள்ளுபடியும் அளிக்கிறார்கள். இந்த சேவை தற்போது பெங்களூரில் மட்டும் இருக்கிறது. மற்ற ஊர்களுக்கும் சிறிது சிறிதாக விரிவுபடுத்தப்படும்.

ட்ரையோ ஏற்கனவே ஆயிரக்கணக்கான ஆரம்ப சோதனை ஆர்டர்களை வலுவான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் சராசரியை விடக் குறைந்த ரிட்டர்ன்களுடன் நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆண், பெண், குழந்தைகள் என்று எல்லோருக்குமான ஆயத்த ஆடைகளை இந்த தளம் மூலமாக வழங்குகிறது. மேலும், பெஸ்டிவல் ஆடைகளையும் வழங்குகிறது.

### என்னென்ன பிராண்டுகள்

இந்த ஸ்டார்ட் அப் நிறுவனம் தற்போது Bewakoof, Berger, Cove and Lane, Hues Fab,Indo Cotton, InstaFab, Journey East, Kisah, One Mile, Soul Innate, The Bear House, The Souled Store, Truetee, Blue Jam, Virgio, Nishorama உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட பிரீமியம் பிராண்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடைகளை வழங்குகிறது.

'டிரை பர்ஸ்ட், பின்னர் பணம் செலுத்தவும்' என்ற ஃபேஷன் சந்தையை இந்த நிறுவனம் ஆரம்பித்து வைத்துள்ளது.

### சமீபத்தில் கிடைத்த பண்டிங்

ஃபேஷன் வர்த்தக ஸ்டார்ட்அப் கம்பெனியான ட்ரையோ, ஜீரோபேர்ல் வென்சர் கேபிடல் மூலமாக ரூ.3 கோடி பண்டிங்கும் சமீபத்தில் திரட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த பண்டிங் கம்பெனியின் செயல்பாடுகளை அதிகரிக்கவும், தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டை வலுப்படுத்தவும், இந்திய ஃபேஷன் பிராண்டுகளுடன் கூட்டாண்மைகளை ஆழப்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

இந்த கம்பெனியின் இணையதளம் www.tryo.club.

# இந்த மாத வழிகாட்டி கல்லுப்பட்டி வெங்கடாஜலம் ராமையா மற்றும் பழநியப்பன் ராமையா (காரைக்குடி)



இந்த மாதம் மென்பொருள் உற்பத்தி செய்யும் சகோதரர்கள் இருவரை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் நாம் பெருமையடைகிறோம். காரைக்குடியில் மென்பொருள் (software) உற்பத்தி செய்யும் மாத்தூர் கோவில் – அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்த கல்லுப்பட்டி வெங்கடாஜலம் ராமையா (Founder MD, Statutory Compliance, Corporate Management) மற்றும் பழநியப்பன் ராமையா (Founder CEO, Project Delivery and Capacity Building) அவர்களை இந்த இதழுக்காக பேட்டி கண்டோம்.

சாதாரணமாக சாப்ட்வேர் கம்பெனி என்றால் பெங்களூர், சென்னை அல்லது ஹைதராபாத் ஆகிய ஊர்களில் ஒன்றுதான் தலைமையிடமாக இருக்க வேண்டும் என்பதை மாற்றி நமது செட்டிநாட்டின் தலைநகரமான காரைக்குடியில் ஆரம்பித்து அதை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் இந்த சகோதரர்களை பேட்டி காண்பதில் நமது செட்டிநாடு மகிழ்ச்சி கொள்கிறது.

அவர்களின் பேட்டி தொடர்கிறது....

### எப்படி சாப்ட்வேர் பிசினசில் நுழைந்தீர்கள்?

அப்பா சென்னையில் வேலை செய்து கொண்டிருந்ததால், நாங்கள் சென்னையில் தான் வளர்ந்தோம். நான் அம்பத்தூர் AIEMA Tech, கம்பெனியில் வேலை செய்து கொண்டிருக்கும் போது 1995–ம் ஆண்டு Aptech நிறுவனத்தில் பிரான்சைசி வாய்ப்புகள் கிடைத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி சென்னை அல்லது காரைக்குடியில் தொடங்கலாம் என்று முடிவெடுத்த போது, அவர்கள் கேட்ட பிரான்சைசி தொகை பெரிதாக இருந்தது. அப்போதே சுமார் 18 லட்சம் ரூபாய்.

ஆதலால், நாங்கள் இருவரும், நண்பர்கள் இருவருடன் பார்ட்னராக சேர்ந்து காரைக்குடியில் ஆரம்பித்தோம். தம்பி டெக்னிகல் சைடும், நான் அட்மினிடிஸ்ரேஷனும் பார்த்துக் கொண்டோம். சிறப்பாக சென்று கொண்டிருந்தது. 1999–ம் வருடம் தனியாக சாப்ட்வேர் கம்பெனி (WBC Software and Consulting) ஆரம்பித்தோம். 6 பேர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட கம்பெனி, தற்போது 120 பேர்கள் வேலை செய்யும் கம்பெனியாக வளர்ந்து இருக்கிறது.

தம்பி பழநியப்பன் ராமையா தொடர்கிறார், “முதலில் ஒரு Product கம்பெனியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், Tally போல ஒரு சாப்ட்வேர் தயாரிக்க வேண்டும் என்று ஆரம்பித்தோம். உலகின் பல நாடுகளின் அது போன்ற சாப்ட்வேர்களை பார்த்து ஒரு நல்ல சாப்ட்வேர் ப்ராடக்டை 3 வருட கடுமையான உழைப்பில் உருவாக்கினோம். ஒரு சிங்கப்பூர் நிறுவனம் அதில் 20 லைசென்ஸ் வாங்கியது எங்களது பெரிய வெற்றி.

பின்னர் ஒரு அமெரிக்க நிறுவனத்திற்கு 2006–ம் வருடம் ஹாஸ்பிட்டல் சாப்ட்வேர் ஒன்று உருவாக்கினோம். அவர்களுக்கு end to end Health Care application டெவலப்மெண்ட் செய்துள்ளோம். அது இன்றளவும் பயன்பாட்டில் இருக்கிறது. அந்த கம்பெனிக்கு இந்தியாவிலிருந்து offshore support செய்து வருகிறோம். அந்த கம்பெனிக்காக இந்தியாவில் 32 பேர் எங்கள் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்கள். இது தவிர ஆஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அரபு நாடுகள் போன்ற நாடுகளுக்கு எங்களது சாப்ட்வேர்கள் ஏற்றுமதி ஆகின்றன. நாங்கள் தற்போது end to end health care applications, Fintech, Travel and Tourism applications using latest AI / ML technology ஆகிய துறைகளில கவனம் செலுத்தி வருகிறோம்.

தற்போது பல இந்திய ஆர்டர்களும் எடுத்து செய்து வருகிறோம். அதாவது சாப்ட்வேர் டெவலப்மெண்ட், இணையதள வடிவமைப்பு போன்றவை. வருடந்தோறும் 10 முதல் 15 சதவீத வளர்ச்சியை எட்டி உள்ளோம். நாங்கள் காரைக்குடியில் இருந்தாலும் எங்களுடைய employee attrition rate 4 சதவீதம் தான் என்பது குறிப்பிடத்தக்கது”.

எங்களுடைய வேறு சில கஸ்டமர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் - Balmer Lawrie - Van Leer Limited, Bangalore, XOLO Pharmaceuticals Llp, Bangalore, Practo, Bangalore, Ashoka.org, Bangalore, AstorMueller Group, Bangalore, Ninjacart, Bangalore, Sathya Infotech, Tamilnadu, Kauvery Medical Hospitals, Tamilnadu, Sunblues, Vellore, Biddas, Trichy, Anand Engineering, Trichy, Alexandria International furnitures, UAE, Global EX, UAE, Kabrita, UAE, Key Business Group for Investments, UAE, APT Global Marine, UAE

### நீங்கள் பிசினஸ் செய்ய தூண்டுகோலாக இருந்தது யார்?

அம்மா, அப்பா இருவரும் என்று தான் கூற வேண்டும். அம்மா, நாங்கள் சிறுவர்களாக இருக்கும் போதே சிலோனில் இருந்து வரும் பொருட்களை வாங்கி மற்றவர்களுக்கு விற்பார்கள். சீட்டு பிடிப்பார்கள்.




திருச்சி ஸ்ரீ வளத்தி
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.

துவக்கம் 2005

வளத்திஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

0431-2760064
0431-7968005

TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

94439 86143

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்-
-கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064

★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com


மதுரையில் இருந்து சுங்குடி சேலைகள் வருவித்து வியாபாரம் செய்வார்கள். அவர்களுடைய வியாபாரம் செய்யும் திறமை எங்களையும் பிசினஸ் செய்ய தூண்டியது என்றால் மிகையாகாது.

நாங்கள் சாப்ட்வேர் கம்பெனி Aptech கம்பெனியின் பிரான்சைஸி எடுக்கப் போகிறோம் என்று சொன்ன போது, பணம் தேவை என்ற ஒரு நிலை வந்த போது தான் பார்த்துக் கொண்டிருந்த வேலையிலிருந்து VRS ஆப்ஷன் கொடுத்து, அதில் வந்த பணத்தை எங்களுக்கு கொடுத்து பிசினஸ் (Aptech) ஆரம்பிக்க உதவினார்கள்.

**இவ்வளவு பிசியாக இருக்கும் போது வேறு எப்படி உங்களை சமூக சேவைகளில் ஈடுபடுத்திக் கொள்கிறீர்கள்...**

அண்ணன் வெங்கடாஜலம் ரோட்டரியிலும், நான் லயன்ஸ் கிளப்பிலும் இருந்து சேவைகள் செய்து வருகிறோம். மேலும், அண்ணன் தமிழ்நாடு கிரிக்கெட் அசோஷியேஷன், சிவகங்கை மாவட்டத்திற்கு துணைத் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் காரைக்குடி சேம்பர் ஆப் காமர்ஸிலும் பதவி வகிக்கிறார்கள்.

இது தவிர நமது இளைஞர்கள் பிசினஸ் தொடங்க விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கு டெக்னிக்கல் அட்வைஸ் கொடுக்க தயாராக இருக்கிறோம்.

**குடும்பம் பற்றி கூறுங்களேன்...**

அப்பா திரு. ராமையா செட்டியார் அவர்கள். MC.T.M. குரூப்பில் 32 வருடங்கள் வேலை செய்தார்கள். மிகவும் திறமைசாலி. ஒரு சிறந்த அட்மினிஸ்டிரேட்டர் என்று கூறலாம். எங்கள் கம்பெனியை சிறப்பாக வழி நடத்தியதில் அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு. அம்மா திருமதி. முத்தாள் ஆச்சி. முன்பு கூறியபடி எங்களுக்கு தொழில் வழிகாட்டி என்று எடுத்துக் கொள்ளலாம். எனது மனைவி சிவகாமி. இரண்டு குழந்தைகள். மூத்தவர் முத்தாள், HR சம்பந்தப்பட்ட ஒரு ஸ்டார்ட் அப் கம்பெனி நடத்தி வருகிறார். கணவர் நடராஜன், குருகிராமில் Oil Pipeline Company-யில் Design Architect ஆக இருக்கிறார். இளையவர் ராமையா எங்களது கம்பெனியில் Digital Marketing பிரிவில் தலைமை வகிக்கிறார் என்றார் வெங்கடாஜலம்.

தம்பி பழநியப்பன் கூறுகிறார், "எனது மனைவி வள்ளியம்மை, B.Sc., Agri. தற்போது made to order diamond jewellery பிசினஸ் செய்து வருகிறார்கள். எனக்கு நான்கு குழந்தைகள். மூத்தவள் முத்தாள், கணவர் சிவராமன். ஆஸ்திரேலியாவில் வசிக்கிறார்கள். இரண்டாவது அபிராமி UI/UX Designer. சென்னையில் RR Donnelley கம்பெனியில் பணிபுரிகிறார். திருமணத்தை எதிர் நோக்கி இருக்கிறார். அடுத்த இருவர் இரட்டையர்கள். அலமேலு, ராமையா. 9-ம் வகுப்பு படிக்கிறார்கள்.

இவர்களது தங்கை அலமேலு, Fashion Designer ஆக இருக்கிறார்கள். கணவர் பழநியப்பன் (அரசி பழநியப்பன்), பின்லாந்தைச் சேர்ந்த கம்பெனியில் Senior Project Manager ஆக இருக்கிறார்கள். இரண்டு குழந்தைகள். பையன் பெரியகருப்பன், சென்னையில் ஆடிட்டராக இருக்கிறார். மனைவி மீனாள். பெண் அழகம்மை. கணவர் ஸ்ரீராம், பிசினஸில் இருக்கிறார். ■

ஈமெயில்: Sethuraman.sathappan@gmail.com,
மொபைல்: 9820451259,
இணையதளம்: www.startupandbusinessnews.com




மகன்லால்
வைரம் & தங்கம்

We Offer Diamonds
Grade by
GIA®

Authorised
Forevermark Jeweller
FOREVERMAR




MAGANLAL MEHTA & CO
மகன்லால் மேத்தா & கோ
Diamond & Gold Jewellery Private Limited

#51, AVM Building, Kallukatti North, Karaikudi - 630 001

# 27/43, North Usman Road, T.Nagar, Chennai - 600 017

we@maganlalmehta.com www.maganlaldiamonds.com

88 YEARS

CUSTOMER CARE

+91 888 111 5555

+91 888 111 4555

# இந்தியாவின் வளர்ச்சியில் இஸ்ரோவின் பங்கு - 4

## விண்வெளி ஆராய்ச்சியின் அபரிமிதமான வளர்ச்சி - 1



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

சென்ற இதழில் வாசகர்களுக்கு நான்கு மாமேதைகளின் அரிய முயற்சியால் ராக்கெட் விஞ்ஞானம் எப்படி சிறந்த வளர்ச்சியை அடைந்தது என்பதையும் இரண்டாவது உலகப்போரின் கட்டாயத்தால் உண்டாக்கப்பட்ட ஜெர்மனியின் V2 ராக்கெட் அதை அடுத்த பரிமாணத்திற்கு எப்படி எடுத்து சென்றது என்பதையும் அறிமுகப்படுத்தியிருந்தேன்.

இதன் பின்னர் குறுகிய காலத்தில் ராக்கெட் விஞ்ஞானத்தின் வளர்ச்சி எப்படி வேகமாக முன்னேறியது என்பதைக் குறித்து இந்த இதழில் காணலாம்.

ராக்கெட்டுகளின் முன்னோடியான V2 ராக்கெட் 1000 கிலோ போர்முனைகளை (Warheads) 300 கி.மீ தூரத்திற்கு 90 கி.மீ உயரத்திற்கு கொண்டு சென்று தாக்கும் வல்லமை கொண்டது என அறிகிறோம். மேலும் இந்த ராக்கெட்டில் இன்றைய ராக்கெட்டுகளின் அங்கங்களான மிக முன்னேறிய தொழில்நுட்பங்கள் எரிபொருள் பம்புகள் (Propellant Turbopumps), இலக்கை நோக்கி செலுத்தும் Inertial Guidance Systems அமைப்புகள் உள்ளிட்டவை பொருத்தப்பட்டிருந்தன என்பது ஜெர்மன் வல்லுநர்கள் தொழில்நுட்பத்தில் அக்காலத்திலேயே எவ்வளவு முன்னேறியிருந்தார்கள் என்பதை எடுத்துரைப்பதாக இருக்கிறது.



ரெட்ஸ்டோன் ராக்கெட்

இரண்டாவது உலகப் போர் முடிவடையும் தருவாயில் வெர்னர் வான் பிரான் உள்ளிட்ட ஜெர்மன் வல்லுநர்கள் அமெரிக்காவுக்கு கொண்டு வரப்பட்டு அங்கு குடியுரிமை பெற்று தங்கள் பணியை அமெரிக்க மண்ணில் தொடர்ந்தார்கள்.

போர் ஆயுதங்களாக உபயோகிக்கப்பட்ட ராக்கெட்டுகளை எப்படி விண்வெளி ஆராய்ச்சிக்கு உபயோகிப்பது என்ற கருத்து உலகமெங்கும் விஞ்ஞானிகளிடம் வியாபித்தது. இதன் விளைவாக V2 ராக்கெட்டுகள் அமெரிக்காவில் Redstone ராக்கெட் என்று மறுபெயரிடப்பட்டு அவை ஏவுகணைகளாக உபயோகப்படுத்தப்பட்டதோடு விண்வெளி ஆராய்ச்சியிலும் ஈடுபடுத்தப்பட்டன.

இவை உயர் விண்வெளியில் (High Altitude Conditions) உள்ள தட்ப வெப்பநிலை, அழுத்தம், சூரியனிலிருந்து வரக் கூடிய அண்டக்கதிர்கள் (Cosmic Rays), சப்தத்தை விட வேகமாக செல்லக்கூடிய (Super sonic Research) ஆராய்ச்சி ஆகியவைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு விண்வெளியைப் பற்றி நாம் அறிந்திராத பல உண்மைகளை வெளிப்படுத்தின.

இந்த சமயத்தில் சோவியத் யூனியன் V2 ராக்கெட்டை R1 Missile ஆக சிறிது காலம் உபயோகித்து பிறகு உலகத்தின் முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் (Inter Continental Ballistic Missile - ICBM) A1 ஏவுகணையை உருவாக்கி, முன்னர் கூறியபடி 1957ல் உலகின் முதல் செயற்கை உபகிரஹமான (நமது பூமண்டலத்தின் இயற்கை உபகிரஹம் சந்திரன்) ஸ்புட்னிக் 1-ஐ விண்ணில் செலுத்தி சரித்திரம் படைத்தார்கள். இதன் எடை 83 கிலோகிராம். இது



ஸ்புட்னிக் 1 உபகிரஹம்



விண்வெளியில் ஒரு உபகிரஹம்




உலகம் சுற்றும் வேகம்

250 கி.மீ உயரத்தில் நீள் வட்டப்பாதையில் (Elliptical Low Earth Orbit) செலுத்தப் பட்டது. இதில் சிரமம் என்னவென்றால் உபகிரஹத்தை அந்த உயரத்திற்கு (Altitude) கொண்டு செல்வதோடு அதை சுற்றும் பாதையில் சுற்றும் திசையில் (Attitude) முன்னர் முடிவு செய்த வேகத்தில் (Velocity) துல்லியமாக விடவேண்டும். வேகம் கூடினால் உபகிரஹம் அண்ட வெளி (Outer Space)-க்கு சென்று விடும் (Escape Velocity). வேகம் குறைந்தால் அது கீழிறங்கி காற்று மண்டலத்திற்குள் சென்று எறிந்து விடும். இந்த கடினமான காரியத்தை சோவியத் யூனியன் அன்றே அருமையாக நிகழ்த்திக்காட்டியது மிக வியப்பான விஷயம்.




உயரம் தாழ்ந்த வட்டப்பாதை

இங்கு உபகிரஹங்கள் செலுத்தப்படும் வட்டப்பாதைகள் (Orbits) குறித்து சிறிது விவரிக்க விரும்புகிறேன். உலகத்தின் அனைத்து உபகிரஹங்களும் பொதுவாக இரண்டு விதமான வட்டப்பாதைகளிலேயே செலுத்தப்படுகின்றன.

1. உயரம் தாழ்ந்த வட்டப்பாதை (Low Earth Orbit). இந்தப்பாதையில் செலுத்தப்படுகின்ற உபகிரஹங்கள் பொதுவாக 250 கி.மீ உயரத்தில் இருந்து 2000 கி.மீ உயரம் வரை பூமியை சுற்றி வருகின்றன. சுற்றும் பாதை துருவங்களை இணைக்கும் கோட்டில் இருந்தால் அது துருவ வட்டப்பாதை (Polar Orbit) என்று அழைக்கப்படும்

2. புவி ஒத்திசைவு வட்டப்பாதை (Geosynchronous Orbit). இந்தப் பாதையில் விடப்படும் உபகிரகங்கள் 35,786 கி.மீ உயரத்தில் பூமத்திய ரேகை மேல் வட்டமாக செலுத்தப்படுகிறது. இதன் விசேஷம் என்னவென்றால் பூமி 24 மணி நேரத்தில் தன்னைத்தானே ஒரு முறை சுற்றி வருவது போல் இந்தப்பாதையில் விடப்படும் உபகிரஹங்களும் 24 மணி நேரத்திற்கு ஒரு முறை பூமியை சுற்றி வருகின்றன. விண்வெளி மொழியில் இதை குறிப்பிடும் பொழுது (Relatively Static) பூமியை ஒப்பிடும் போது ஒரு இடத்தில் நிற்பது என்பதாகும். மேற்குறிப்பிட்ட இரண்டு சுற்றுப்பாதைகளில் செலுத்தப்படும் உபகிரஹங்களின் உபயோகங்கள் குறித்து பின்னர் விவரிக்கிறேன்.




புவி ஒத்திசைவு வட்டப்பாதை

Redstone, R1 ராக்கெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு ராக்கெட் விஞ்ஞானத்தின் நுணுக்கங்கள் பற்றிய அறிவு ஓரளவு கையில் கிடைத்ததால் இது குறித்த ஆராய்ச்சி மிக வேகமெடுத்தது. அமெரிக்கா ATLAS, TITAN போன்ற பெரிய ராக்கெட்டுகளை தயாரித்தது.இந்த ராக்கெட்டுகளெல்லாம் விண்வெளி ஆய்விற்கு பயன் பட்டதோடு, அணு ஆயுதங்களை கண்டம் விட்டு கண்டம் சுமந்து செல்லும் திறன் கொண்டவையாகவும் இருந்தன.

இந்த முன்னேற்றங்களுக்குப் பிறகு மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சிகள் வேகமெடுத்தன. அதைக்குறித்து அடுத்த கட்டுரையில் விவரிக்கிறேன்.

கட்டுரையை முடிக்கும் முன்னர் உலகத்திலுள்ள பெரும்பாலான விண்வெளி ஏவுதளங்கள் (Space Ports) ஏன் கிழக்குக் கடற்கரை ஓரங்களிலேயே அமைந்திருக்கின்றன என்பது குறித்து அறிய வாசகர்கள் ஆர்வமாக இருப்பீர்கள் என கருதுகிறேன். பொதுவாக ராக்கெட்டுகள் விண்ணில் ஏவப்படும்போது பாதுகாப்பு காரணங்களுக்காக மக்கள் அதிகம் வாழும் தரைப்பாகங்களை தவிர்த்து கடல் மேலேயே செலுத்தப்படுகின்றன. ஆகவே தான் ஏவுதளங்கள் கடற்கரை ஓரங்களில் கடலை நோக்கி அமைகின்றன. உலகம் தன்னைத்தானே சுற்றிக்கொள்ளும் வேகம் மிக அதிகமாக பூமத்திய ரேகை மேல் (Equatorial Plane) மேற்கிலிருந்து கிழக்காக மணிக்கு 1600 கி.மீ. ராக்கெட்டை கிழக்கு நோக்கி செலுத்தினால் பூமியின் வேகமும் ராக்கெட்டின் வேகத்தோடு சேர்ந்து நமக்கு கூடுதலாக கிடைக்கும். ஆகவேதான் ராக்கெட்டுகள் கிழக்கு கடற்கரைகளிலிருந்து கிழக்கு நோக்கி செலுத்தப்படுகின்றன.

இதுபோல் இன்னும் பல சுவாரசியமான தகவல்களோடு அடுத்த இதழில் உங்களை சந்திக்கிறேன். (தொடரும்)

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 50





## கி.பி.1800-ஆம் ஆண்டிற்குப் பின் செட்டிநாட்டுப் பகுதியில் நகரத்தார்கள்

மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

சென்ற இதழில் 1800-க்குப் பிறகான காலங்களில் நகரத்தார்களின் பஞ்சு, மிளகு, உப்பு வணிகங்கள் பற்றிய செய்திகளைப் பார்த்தோம். ஆனாலும் 1800-ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் நகரத்தார்கள் தொடர்பான கல்வெட்டுப் பதிவுகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. எனவே. வணிகம், வாழ்வு என அவர்களின் வாழ்க்கை நிலையைப் புரிந்து கொள்ள பரவலான சான்றுகள் இல்லை. இருந்த போதிலும் 1800-க்குப் பிறகு கிடைத்த சில கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு சில செய்திகளைப் புரிந்து கொள்ளலாம். 1800-ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் செல்வ நிலை சிறப்பாக இருந்தது என்பதைக் கீழ்க்கண்ட கல்வெட்டுகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். கோயில்கள் கட்டுவது, அறப்பணிகள் செய்வது போன்ற நடவடிக்கைகள் அதிகமாயின என்பதைக் காண முடிகிறது. பர்மா, இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் வணிகம் மேற்கொண்டதே காரணம்.



### 1800-களின் தொடக்கத்தில் உஞ்சனைக் கோயில்:

உஞ்சனை நகரத்தார்களின் வாழ்விடங்களில் ஒன்றாக இருந்திருக்கிறது. உஞ்சனை கிராமத்தில் சிவன் கோயில் முன்பு உள்ள பிள்ளையார் கோயிலில் உள்ள தூணில் இக்கோயிலைக் கட்டிய சாத்தன் செட்டியார் சுப்பிரமணியன் அவர்களின் திருவுருவச் சிலையும். அதற்கு மேலே இக்கல்வெட்டும் உள்ளது. புதிதாகப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு இது. இதுவரை எந்த நூலிலும் வெளிவரவில்லை.

'கல்வாயில் நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் பெருமாவூர் உடையான் சாத்தன் செட்டியார் சுப்பிரமணியன்' என்ற வரிகள் இலுப்பக்குடி நகரத்தார் செய்த அறப்பணியைப் பதிவு செய்துள்ளது. இதில் வரும் 'பெருமாவூர்' எங்கிருக்கிறது என்று தெரியவில்லை.



### அரியக்குடியில் இலுப்பக்குடி நகரத்தார்கள்:

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், அரியக்குடி செட்டிநாட்டு ஊர்களில் ஒன்றாகும். இங்குள்ள இடையர் கண்மாய்த் திடலில் நடப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு கி.பி.1803-ஐச் சேர்ந்தது. இலுப்பக்குடி தான்தோன்றீசுவரர் கோயிலுக்கு நிலக்கொடை கொடுத்ததைப் பற்றிய பதிவு இது. நன்கொடை கொடுத்தவர் பெயர் இல்லை. ஆனால், நகரத்தாராகத்தான் இருக்க வேண்டும். 'புகளிப் பட்டணமான இலுப்பைக்குடி தான்தோன்றீசுபரர் நாயனார்க்கு கேரளசிங்க வளநாட்டு தேனாற்றுப் போக்கு' என அந்த வரிகள் உள்ளன. 1800-களில் இலுப்பக்குடிக் கோயில் சிறந்த முறையில் வழிபாட்டில் இருந்திருக்கிறது. நகரத்தார்களின் மறுமலர்ச்சிக் காலம் என்று 1830-க்குப் பின் உள்ள காலத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அக்காலத்திற்கு முன்பே நகரத்தார்கள் காலத்தைத் துடிப்போடு எதிர்கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அரியக்குடி - இலுப்பக்குடி நகரத்தார்கள் கல்வெட்டு மூலம் தெரிந்து கொள்ளலாம்

### காசியில் சத்திரமும், விசாலாட்சி கோயிலும்:

காசி நாட்டுக்கோட்டைச் சத்திரத்தின் உட்பகுதியில் உள்ளது. காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறும், பர்மாவில் நகரத்தார் வரலாறும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மற்றும் நெடிய வரலாறாகும். காசிச் சத்திரம் உருவாகப் பெரும் பங்கு வகித்தவர்கள் பர்மா நகரத்தார்களே.

காசிச் சத்திரம் கட்டப்பட்டு, பணியைத் தொடங்கியது 1863-ல். காசியுடன் கொண்ட உறவு அதற்கு முன்பே தொடங்கியிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். (1863 காசி என்ற வாரணாசி, ஆவணம் 13 - 2002 பேரா. சு. இராசகோபால், கட்டுரை எண். 37, பக். 87) நகரத்தார்கள் காசியில் முதலில் மடம் கட்டியிருக்கிறார்கள்.

பின்னர்தான் 1908-ல் விசாலாட்சிக் கோயில் கட்டி, குடமுழுக்கு செய்திருக்கிறார்கள். எனவே 1800-களின் பிற்பகுதியில் பொருளியல் நிலை உயரத் தொடங்கி விட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. காரணம் பர்மாவில் நடந்த தொழில்கள். பொற்காலத்தைக் கொடுத்தது பர்மா. அவலத்தையும் அங்கேதான் நகரத்தார்களுக்கு வழங்கியது.

### 1873-ல் 'வெளிமுத்தி' தேவகோட்டை நகரத்தார் செய்த திருப்பணி:

தேவகோட்டைக்கு அருகில் 6 கி.மீ தொலைவில் உள்ள கோயில் வெளிமுத்தி சிவன் கோயில் என அழைக்கப்படுகிறது. இங்கு 1)"தேவர் கோட்டை வணிகர் குலம் ந.மு. அருணாசலம் செட்டியார் கட்டிய இராச கோபுரம்", 2)"தெ.பழனியப்பச் செட்டியார் செய்த திருப்பணி", 3)"ஆவி. கருப்பன் செட்டியார் செய்த திருப்பணி" என மூன்று பதிவுகள் உள்ளன. இக் கோயிலில் வேறு கல்வெட்டுகளும் உள்ளன. இவை கோயில் திருப்பணி தொடர்பானவை. 150 ஆண்டுகளுக்கு முந்திய நிலையை அறிந்து கொள்ள இயலுகிறது. நகரத்தார்களை 'வணிகர் குலம்' என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. (ஆவணம் - 10, 1999, கட்டுரை எண். 40, பேரா. நா.வள்ளி ஆண்டு 1873). இதே கோயிலில் உள்ள 1866-ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டில் 'கேரளசிங்கவள நாடாகிய ஏழகப்பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில் சிறுகுளத்தூருடையார்' என வயிரவன் கோயில் நகரத்தார்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

1873-ல் மண்ணூருடையார் திருப்பணி திருவண்ணா மலை மேனா கானா சத்திரம் உருவாக்கியதன் மூலம் நகரத்தார்களின் அறப்பணியும், அருள்பணியும் மீண்டெழத் தொடங்கியதைக் காண முடிகிறது. திருவண்ணா மலை மெ.க. சத்திரம் ஓர் எடுத்துக்காட்டு.

### 1877-ஆம் ஆண்டு வேலங்குடி ஊரணி ஆவணங்கள்:

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் இருந்து 8 கி.மீ. தொலைவில் கோட்டையூரை அடுத்து உள்ள ஊர் கோ.வேலங்குடி ஆகும். கோ.வேலங்குடியில் உள்ள விளக்குத் தூண் 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. விளக்குத் தூண் அன்பளிப்பாக கொடுத்தது பற்றிய பதிவு உள்ளது. (வேலங்குடி ஊரணி ஆவணங்கள் 1877-ஆம் ஆண்டு, ஆவணம் - 9, 1998 பேரா.சு. இராசகோபால்). இங்கு ஒரு காளி கோயில் உள்ளது. இக்கோயில் வயல் நாச்சியம்மன் என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் அனைத்துச் சமூகத்தினரும் கலந்து கொள்ளும் 'ஏழூர்ச் செவ்வாய்' என்ற திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. நகரத்தார்களில் ஆத்தங்குடி மற்றும் முத்துப்பட்டிணத்தைச் சேர்ந்த நகரத்தார்கள் பெரும் பகுதியாகக் கலந்து கொள்கிறார்கள். 1877-ஆம் ஆண்டு இந்த ஊரணி சீர்திருத்திக் கட்டப்பட்டது என்ற பதிவு உள்ளது (பேரா. சு. இராசகோபால்)

### 1886-ல் வேலங்குடி ஓலை ஆவணம்:

'வேலங்குடி ஊறணி முறி' என்றும் அழைக்கப்படுகிறது. ஊருணிக்கரை சீர்திருத்தியது பற்றி எழுதப்பட்டுள்ளது.


உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி

8508392087 / 8778527165 / 8760742590

ADVT


மற்றொரு ஓலை ஆவணம் 'வேலங்குடி ஊற்முறி' என அழைக்கப்படுகிறது. இந்த ஆவணமும் ஊரணி தொடர்பானதே. நீர் நிலைகளைப் பாதுகாக்க மாத்தூர் - அரும்பாக்கூர் பிரிவு நகரத்தார்களின் இடைவிடாத முயற்சியினை இந்த மூன்று ஆவணங்களும் உணர்த்துகின்றன (ஆவணம் 9 - 1998 திரு.சு. இராசகோபால்)

### 1880-ல் நற்சாந்துபட்டி சூடாமணிபுரமுடையார்



நற்சாந்துபட்டியின் பழைய பெயர் திருமலைசமுத்திரம் ஆகும். இப்பெயர் வந்த காரணமும் ஆய்வுக்குரியது. இவ்வூருக்கு அருகில் உள்ளது மலையக் கோயில் ஆகும். பல்லவர் கால குடவறைக் கோயிலாகும் இது. இந்த மலையின் மேலே உள்ளது சுப்பிரமணியர் கோயிலாகும். மேலே உள்ள கோயிலுக்குச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. இலுப்பக்குடிக் கோயில் சூடாமணி புரமுடையார் பிரிவைச் சார்ந்த பெரியகருப்பன் செட்டியார் மகன் ராமனாதன் உள்ளிட்டோர் மலைக்கும். சுனைக்கும் படிக்கட்டுகள் அமைத்துக் கொடுத்திருக்கின்றனர். இன்றும் இவை பயன்பாட்டில் உள்ளன.

### 1883 அயோத்தியில் (ஆவணம் - 24, 2013, அயோத்தி நகரச் சத்திரம்)

அயோத்தி நகரில் ஏறத்தாழ 140 ஆண்டுகளுக்கு முன்னரே சத்திரம் கட்டப்பட்டு விட்டது. சத்திரம் அமைக்க வேண்டிய அளவுக்கு அயோத்திக்குச் சென்று வந்த

நகரத்தார்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்க வேண்டும். நீண்ட கால தொடர்பிற்குப் பின்னர் தான் சத்திரம் அமைக்க வேண்டும் என்ற தேவையும் எழுந்திருக்க வேண்டும். எனவே. அயோத்தியுடன் நகரத்தார்களின் தொடர்பு நெடியது எனலாம்.

**வாலிகண்டாபுரம் வாலீஸ்வரர் கோயில்:**

உகளூர் கூற்றத்து அத்தியூரை சேர்ந்த திருவாலி வீரை நாரணன் என்பவர் இக்கோயிலில் அரைவிளக்கு எரிய வைக்கப் பொன் வழங்கி உள்ளார். இதைப் பெற்றுக் கொண்ட நகரத்தார் தினமும் ஆழாக்கு நெய் வழங்கியுள்ளார். கல்வெட்டில் கொடையாளரின் பெயர் உள்ளிட்ட சில பகுதிகள் சிதைந்துள்ளன. இருப்பினும் கருவறை வட சுவரில் பரக்கேசரி வர்மனின் (உத்தமசோழன்) 13-ஆம் ஆண்டு கல்வெட்டில் இவர் குறிப்பிடப்படுகிறார். இந்த நகரத்தார் யார் என்பதை அடையாளங் காணப்பட வேண்டியுள்ளது

கி.பி. 1800-க்குப் பிறகான 13 கல்வெட்டுகள் மேலே தரப்பட்டுள்ளன. 120 ஆண்டு கால பரப்பில் நமக்குக் கிடைத்திருக்கும் கல்வெட்டுகள் சிலவே. ஆனாலும் அவற்றின் மூலம் நகரத்தார்களின் எழுச்சியைப் புரிந்து கொள்ளலாம். செல்வநிலை மேலோங்கி இருந்திருக்கிறது. அதன் வெளிப்பாடே கோயில்களுக்குச் செய்த அறப்பணிகள்.

(வரலாறு வளரும்)



# வள்ளியப்பா இலக்கிய வட்டம், கோவை குழந்தை இலக்கியப் போட்டிகள் அறிவிப்பு

**குழந்தைகளுக்கான அறிவியல் சிறுகதை நூல் போட்டி:**

2022, 2023, 2024-ஆம் ஆண்டுகளில் வெளியான குழந்தைகளுக்கான சிறந்த அறிவியல் சிறுகதை நூல் ஒன்றுக்கு 'வள்ளியப்பா இலக்கிய விருதும்' ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ரொக்கப் பரிசும் வழங்கப்படும். நூல்கள் 3 பிரதிகளுடன் எழுத்தாளரின் முழு முகவரி, அஞ்சல் எண் மற்றும் தொடர்புக்கான அலைபேசி எண் ஆகியவற்றைத் தனித்தாளில் எழுதி அனுப்ப வேண்டும். இப்போட்டியில் குழந்தைகளுக்கான அறிவியல் சிறுகதையை நூலாக வெளியிட்டுள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களும் பங்கு பெறலாம்.

**பள்ளி மாணவருக்கான கட்டுரைப் போட்டி:**

6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இதில் பங்கு பெறலாம். குன்றக்குடி மகா சந்நிதானம் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, 'குன்றக்குடி அடிகளாரின் இலக்கியப் பணி' அல்லது 'குன்றக்குடி அடிகளாரின் சமுதாயப் பணி' என்ற தலைப்பில் A4 தாளில் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும். தமிழில் திருத்தமான கையெழுத்தில் அல்லது கணினியில் அச்சிட்டு அனுப்பலாம். மாணவர் பெயர், பெற்றோர் பெயர், வீட்டு முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், படிக்கும் வகுப்பு, பள்ளி முகவரி மற்றும் தொடர்புக்கான அலைபேசி எண் ஆகியவற்றைத் தனித்தாளில் தெளிவாக எழுதி/ அச்சிட்டுக் கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும். சிறந்த சிறுவர் கட்டுரை ஒன்றுக்கு முதல் பரிசாக ரூ. 3,000/-, இரண்டாம் பரிசாக ரூ. 2,000/-, மூன்றாம் பரிசாக ரூ. 1,000/- ஆக மொத்தம் மூன்று கட்டுரைகளுக்கு ரூ.6,000/- (மொத்தம் ஆறு ஆயிரம் மட்டும்) இராயவரம் தெய்வதிரு மு.அ.மு.சுப.பழனியப்ப செட்டியார் நினைவுப் பரிசாக திரு.பழ.சுப்பிரமணியன் அவர்கள் வழங்குகிறார்கள். மேற்கண்ட இரண்டு போட்டிகளுக்கும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. எழுத்தாளர்கள் தங்கள் நூல்களையும், பள்ளி மாணவர்கள் கட்டுரைகளையும் தெளிவான முகவரி மற்றும் அலைபேசி எண்ணுடன் 07.10.2025, செவ்வாய்க் கிழமைக்குள் கிடைக்குமாறு கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். போட்டியில் வென்றவர்களுக்கு, நவம்பர் 7, 2025 அன்று நடைபெற இருக்கும் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா பிறந்த நாள் விழாவில் பரிசுகள் வழங்கப் பெறும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:** தேவி நாச்சியப்பன், 'குழந்தைக் கவிஞர் இல்லம்', 3/628, 9-ஆம் வீதி வடக்கு விரிவு, சுப்பிரமணியபுரம். காரைக்குடி - 630003, WhatsApp No: 70104 96677 / 97877 49693



# ஸ்ரீ வீரமுக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பூலாங்குறிச்சியில், ராம.ப.வ. குடும்பத்தினரால் நிர்மானிக்கப்பட்ட அருள்மிகு ஸ்ரீ வீரமுக விநாயகர் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம், விசுவாவசு வருடம், ஆனி மாதம், 30-ஆம் தேதி (14.07.2025) திங்கட் கிழமை அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது. நகரத்தார்கள், பூலாங்குறிச்சி ஊர்ப் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## கோவை நகரத்தார் சங்கம் பெருமையுடன் வழங்கும்

# VIBES of CHETTINAD

### சுவை, பாரம்பரியம், கலாசாரம்

கொங்குநாட்டைக் கலக்கப் போகிறது செட்டிநாடு. ஆம். தனக்கே உரிய அறுசுவை உணவுகளாலும் பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தாலும் கோவை நகரை அதிரவைக்க வருகிறது 'VIBES of CHETTINAD' என்னும் இரு நாள் கொண்டாட்டம்.

கோவை நகரம் உதயமானதைக் கொண்டாடும் 'கோயம்புத்தூர் விழா 2025' வரும் நவம்பர் 14 முதல் நவம்பர் 24 வரை, கோவையில் நடைபெறுகிறது. 'யங் இண்டியன்ஸ்' (Young Indians) அமைப்பின் கோவை பிரிவு நடத்தும் இவ் விழாவின் ஒரு பகுதியாக, 'வைப்ஸ் ஆஃப் செட்டிநாடு' (VIBES of CHETTINAD) என்ற செட்டிநாட்டு உணவு மற்றும் ஷாப்பிங் கொண்டாட்டம் நடைபெற்விருக்கிறது.

**தேதி:** நவம்பர் 15 (சனிக்கிழமை) & 16 (ஞாயிறு), 2025.

**இடம்:** சுகுணா ஆடிட்டோரியம், காளப்பட்டி மெயின் ரோடு, கோவை. (கோவை விமான நிலையத்திலிருந்து 2.30 கி.மீ)

Vibes of Chettinad - நிகழ்வில், செட்டிநாடு பகுதியின் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் தயாரிக்கும் பொருட்களை அறிமுகப்படுத்தவும், விற்பனை செய்யவும் கண்காட்சி மற்றும் விற்பனை ஸ்டால்கள் அமைக்கப்படும். செட்டிநாடு கலை மற்றும் கை வினை பொருட்கள் காட்சிப்படுத்தப்படும். அது மட்டுமின்றி, கோயம்புத்தூர் மக்களுக்கு, தரமான செட்டிநாடு சமையல் சுவையை அனுபவிக்க ஒரு சிறந்த வாய்ப்பை, Vibes of Chettinad வழங்கும்.

**நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்கள்:**

- 8 முதல் 16 வயது வரை உள்ள நகரத்தார் குழந்தைகளுக்கு, அவர்கள் உருவாக்கிய கைவினைப் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் ஆகியவற்றை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் இலவச ஸ்டால் வழங்கப்படும். சிறுவயதிலிருந்தே தொழில் முனைவு மனப்பாங்கை ஊக்குவிப்பதற்கு இது உதவும்.
- எல்லா வயது நகரத்தார்களுக்கும், மேடை கலை, இசை, நாடகம் போன்ற தங்கள் திறமைகளை காட்சிப்படுத்த மேடை வழங்கப்படும்.
- Donar Pass வைத்துள்ள அனைவருக்கும் வாழை இலையில் உணவு (மதிய உணவு/ இரவு உணவு) பரிமாறப்படும். மேலும், பார்வையாளர்கள் நேரடி விற்பனை மையங்களில் இருந்து செட்டிநாடு ஸ்நாக்ஸ் மற்றும் உணவுகளை வாங்கிக் கொள்ளலாம்.

நிகழ்ச்சி குறித்த செய்திகள் அனைத்து அச்சு, வானொலி, சமூக ஊடகங்களில் வெளியாகும். Vibes of Chettinad நிகழ்ச்சிக்கு, நகரத்தார் விளம்பரதாரர்கள் (Sponsors) மற்றும் கண்காட்சி பங்கேற்பாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

இதன் அறிமுக மற்றும் தொடக்க விழா, கடந்த ஆகஸ்ட் 24-ம் தேதி கோவை நகரத்தார் சங்க வளாகத்தில் நடைபெற்றது. மதுரை தியாகராஜர் ஆலையின் நிர்வாக இயக்குநர் ஹரி தியாகராஜன் மற்றும் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி தலைவர் அண்ணாமலை ரகுபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று உரையாற்றினர். இவ்விழாவில் கோயம்புத்தூர் தொழில் மற்றும் சமூகத் துறையினரும், Young Indians (Yi) உறுப்பினர்களும், கோவை நகரத்தார்களும் பங்கேற்றனர். காத்திருங்கள் கோவை நகரத்தார் பெருமக்களே. அறுசுவையுடன் நம் அருமைப் பண்பாட்டையும் நுகரத் தயாராகுங்கள்!

**மேலும் தகவல்களுக்கு:** S S T. சுவாமிநாதன்,
(பொதுச் செயலாளர் – கோவை நகரத்தார் சங்கம்)
செயலாளர் – Vibes of Chettinad நிகழ்ச்சி - 98420 79444.

OL. சுப்பிரமணியன், நிர்வாகச் செயலாளர்
கோவை நகரத்தார் சங்கம் - 99444 68064.

# நகரத்தார்களும் அன்னதான திருப்பணியும்



டாக்டர் சோம வள்ளியப்பன்

திருவெண்காடு – சீர்காழியில் இருந்து பூம்புகார் செல்லும் வழியில் 13 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அது திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஒரு திருத்தலம் ஆகும். சுவாமி சுவேதாரண்யேஸ்வரர். அம்பாள், பிரம்ம வித்யாம்பிகை. மேலும், புதன் பகவானுக்கு அங்கே ஒரு தனி சன்னதி உள்ளது. புதன் சேத்திரமாகத் திகழ்கிறது.

சென்னையில் வசிக்கிற அவர் ஒரு மாதம் முன்பே சீர்காழிக்கு அருகில் இருக்கும் திருவெண்காடு கோவிலில், ஆடி மாத உத்திர நட்சத்திரத்தில் (ஜூலை-31) செய்ய வேண்டிய வேலைகளைத் தொடங்கி விட்டார்.

நான் அவரைப் பார்க்கச் சென்ற போதெல்லாம் அதற்கான வேலைகள் செய்து கொண்டிருந்தார். மேலும் அது குறித்து என்னிடம் பேசுவார். ஒருநாள் அப்படி பேசிக் கொண்டிருக்கையில், “இந்த முறை நீங்களும் வாருங்களேன்” என்றார்.

கிளம்பிப் போனோம். அறைகள் எடுத்துத் தங்கினோம். ஏற்பாடுகள் எப்படி நடக்கின்றன என்று அன்னதானம் செய்யும் இடத்திற்குப் நேரே போய் பார்த்தார். நானும் அவருடன் சென்றேன்.

நண்பகல் மணி 11. நல்ல வெயில். சாப்பாடு போடுகிற அந்த சிமெண்ட் கொட்டகைக்குப் போனோம். இரண்டு, மூன்று பெரிய அறைகளாக இருந்த அந்த இடத்தில் சுமார் ஒரு பந்திக்கு 200 நபர்கள் உட்காரும் விதமாக பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன.

சாப்பாடு, மதியம் காவேரிப்பூம்பட்டினத்தில் இருந்து சுவாமியுடன் கோவிலுக்கு வருபவர்கள் தீபாராதனை முடித்து உச்சிக்காலமும் பார்த்த பிறகு வரும்போதுதான். அதற்கு மதியம் ஒரு மணிக்கு மேலாகி விடும். ஆனால், ஏற்பாடுகள் சரியாக இருக்கிறதா என்பதை பார்ப்பதற்காக அவர் இரண்டு மணி நேரம் முன்பாகவே வந்து விட்டார். அவர் மட்டுமல்ல அவருடன் அவருடைய மனைவியும். இந்த வேலையில் அவருக்கு உதவியாக இருக்கிற உள்ளூர்காரர்களும், அவர் ஊரிலிருந்து வந்திருந்த அக்காமார்களும் அங்கும் இங்கும் ஓடி வேலை செய்து கொண்டிருந்தார்கள். வெளியே, திறந்த வெளியில், மரத்தடியில் கூட்டடுப்பு போட்டு சமையல் நடந்து கொண்டிருந்தது. என்ன, எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று அவர்களை அவர் அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தார்.

ஒரு மணி போல மக்கள் விறுவிறுவென்று வந்தார்கள். அவரும் அவருடைய மனைவியும் எழுந்து நின்று அனைவரையும் வரவேற்றார்கள். விரிக்கப்பட்டிருந்த ஜமுக்காளத்தில் அமரச் சொன்னார்கள்.

பருப்பு, நெய், வாழைக்காய் பொரியல், புடலை கூட்டு, பரங்கிக்காய் புளிகறி, பூசணி சாம்பார், தக்காளி ரசம், அப்பளம், வடை மற்றும் அரிசி பாயாசம் என பல ஆண்டுகளாய் தொடரும் அதே மெனு. பந்தி பரிமாறல் தொடங்கியது.

முதல் பந்தியில் விசாரித்து விட்டு, இரண்டாவது பந்தியில் அவர் சாப்பிட அமர்ந்தார். அவர் மனைவி வேண்டாம் என்றதால், அவர்களுக்கு பாயாசம் மட்டும். அடுத்து இன்னும் இரண்டு பந்திகள் நடந்தன.

காவேரிபூம்பட்டினத்திலிருந்து வந்தவர்கள் மட்டுமல்ல. நகரத்தார்கள் மட்டுமல்ல. கோயிலுக்கு வந்திருந்தவர்கள், உள்ளூர்காரர்கள், பள்ளி ஆசிரியர்கள் என பலரும் வந்தார்கள். சிலர், அவர் மற்றும் அவருடைய மனைவி கால்களில் விழுந்து வணங்கினார்கள். ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்கள்.

காவேரிபூம்பட்டினத்தில் பட்டினத்தார் திருவிழாவை சிறப்பாக, அவர்களது ஐயா காலத்திலிருந்து, ஏறக்குறைய 90 ஆண்டுகளாக தொடர்ந்து ஒரு வாரம் நடத்தும், கண்டனூர் நா.அரு.க.அரு. அழகப்ப செட்டியார் கோவிலில் வேலைகளை முடித்து விட்டு அங்கு வந்தார்கள்.

அன்னதானம் கொடுக்கிற கணவன் மனைவிக்கு பொன்னாடை போர்த்தி காலைத் தொட்டு வணங்கினார்கள். பட்டினத்தார் வரலாற்றையும், அதை நாடகம் போல காவேரிபூம்பட்டினத்திலும், திருவெண்காட்டிலும் அவர்கள் நடத்துவது குறித்து எனக்குச் சொன்னார்கள். கடைசி பந்தியினர் சாப்பிட்டு விட்டு, சொல்லிக் கொண்டு போகையில் வணங்கி வழி அனுப்பிவிட்டுத்தான் அவர், அவருடைய ஹோட்டல் அறைக்கு கிளம்பினார்.

அது சரி. யார் அந்த அவர்?

அவர், தேவகோட்டை அட்வகேட் M.RM. SP.V. சுப்பிரமணியம் செட்டியார். வயது 94. அவர் மனைவி. தனலட்சுமி ஆச்சி. அந்த வயதிலும் அன்னதானத்தை முன் நின்று, நேரடியாக பார்த்து செய்வது, அவர் பொறுப்பேற்றுக் கொண்ட 25 ஆண்டுகளாக. சுப்ரமணியம் செட்டியாரின் ஐயா, M.RM.SP. சுப்பிரமணியம் செட்டியார் திருவெண்காட்டில் அன்னதானம் ஆரம்பித்தது, 1930-களில். அதாவது 90 ஆண்டுகளுக்கு முன்பு.



மனைவி தனலட்சுமி ஆச்சி மற்றும் மகள்களுடன் தேவகோட்டை அட்வகேட் M.RM.SP.V. சுப்பிரமணியம் செட்டியார்.

இறைவனுக்கு ஆலயங்கள் எழுப்புவது, அவற்றைப் பராமரிப்பது, திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்வது ஒரு வகை தர்மம் என்றால், இறைவனின் அடியவர்களுக்கு உணவு இடுவது மற்றொரு வகை. பெரியபுராணத்தில் தெய்வச் சேக்கிழார் பெருமான் வியந்து போற்றுகிறார்.

கோவில் கட்டுமானம் மற்றும் குடமுழுக்குத் திருப்பணிகள் போன்றவற்றை ஒருவரது வாழ்நாளில் அவர் ஓரிரு அல்லது அதிகபட்சம் நான்கு ஐந்து முறைகள் செய்ய முடியும். செய்ய வேண்டியிருக்கும். ஆனால், அன்னதானம் என்பதற்கு அளவு இல்லை. நகரத்தார்கள் காலங்காலமாக செய்துவரும் மற்றொரு முக்கிய திருப்பணி மற்றும் சமுதாயப்பணி, –வடித்துப் போடுதல்'.

கோயில்களில் இறைவர்க்கு வாகனங்கள் செய்து கொடுப்பது, விஷேச நாட்களுக்கு பல்வேறு கட்டளைகள் வைப்பது, நகைகள் மற்றும் தேவைப்படும் பல பொருட்களையும் செய்து கொடுப்பது, நந்தவனம் வைத்து தொடர்ந்து பூக்கள் கொடுப்பது, தொடர்ந்து பூஜை புனஸ்காரங்கள் செய்வது தவிர, பல்வேறு விசேட நாட்களில் மக்கள் கோவில்களில் கூடும் வேளைகளில் உணவு கொடுப்பதையும் நகரத்தார்கள் பன்னெடுங்காலமாக வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

இராமகிருஷ்ணா மடம், வடலூர் இராமலிங்க சுவாமிகள் திருக்கோயில் உள்ளிட்ட பல இடங்களில் வெகுகாலமாக அன்னதானம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஹரே கிருஷ்ணா இயக்கத்தினர், சாய்பாபா கோவில் நிர்வாகத்தினர் என பலரும் அன்னதானம் செய்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய வளர்ச்சி ஆகியவை வந்துவிட்டபின் பலரும் அன்னதானம் செய்கிறார்கள். அரசே கோவில் பணத்திலிருந்து அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்கிறது. ஆனால், தனி நபர்களாக, குடும்பங்களாக தொடர்ந்து அன்னதானம் செய்வதில் முன்னோடி மற்றும் முன்மாதிரியாக இருப்பது நகரத்தார்கள் என்றால் அது மிகையாகாது.

தொழில், வணிகம் செய்து ஈட்டுகிற பொருள் முழுவதும் ஈட்டுபவருக்குத்தான். அவர் அதை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். எப்படியும் செலவு செய்யலாம். ஆனால், நகரத்தார்கள் அதற்கும் சில வழிமுறைகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அதை அவர்களது வழித்தோன்றல்களும் விடாமல் கடைப்பிடித்து வருகிறார்கள்.

சேமிப்புக்கு, தொழில் வளர்ச்சிக்கு என்று லாபத்தில்ஒருபகுதியைதர்மத்திற்குஎன்றுஎடுத்து வைக்கும் பழக்கம் நகரத்தார்களிடம் உண்டு.

பெரும் வசதி இருக்கும் நகரத்தார் குடும்பங்கள் பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கி நடத்துகிறார்கள். சிலர் பல்கலைக் கழகங்களே நடத்தினார்கள். இவர்கள் தவிர பல நகரத்தார்கள் கல்வி கற்க என எண்ணற்ற ஊழியர் பிள்ளைகள் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு பணம் கொடுத்து உதவி வருகிறார்கள்.

வணிகத்தில் வருமானம் நிச்சயமற்றது என்பதால் அவர்களிடம் இருக்கும் சொத்துகளிலிருந்து ஒரு பகுதியை தர்மத்திற்கு எடுத்து வைக்கும் நகரத்தார் குடும்பங்கள் உண்டு. அந்த பணத்தை வைத்து டிரஸ்ட் உருவாக்கி, அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து தர்மம் தடையின்றி நடக்க வழி செய்து விடுவார்கள்.

அப்படி மிகப்பெரும் பணத்தை எடுத்து வைத்து டிரஸ்ட் உருவாக்கித் தர்மங்கள் செய்கிற குடும்பங்கள் பல நூறு இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் மேலே பார்த்த தேவகோட்டை அட்வகேட் சுப்பிரமணியம் செட்டியார் குடும்பம். அதே திருவெண்காட்டில்,

கடந்தசிலஆண்டுகளாககாரைக்குடிகொப்புடையம்மன் ஹார்டுவேர் உரிமையாளர் மற்றும் மற்றொரு செட்டியார் மாலைப் பலகாரம் கொடுக்கிறார்கள். காலை பலகாரத்தை, 2024ம் ஆண்டு முதல் தேவகோட்டை டென்னிஸ் அரு. வீட்டினர் கொடுக்கிறார்கள்.

அரசர்கள் காலத்தில் ஆலயங்கள் சிரமம் இல்லாமல் இருந்திருக்கலாம். மக்களாட்சி வந்தபின், சொத்துக்கள் இல்லாத கோயில்கள் மூன்று கால பூஜைகளுக்கே சிரமம் எனும் நிலைமையில் இருந்தன. அப்படிப்பட்ட சில நூறு கோயில்களை நகரத்தார்கள், எடுத்து திருப்பணி செய்திருக்கிறார்கள்.

பக்கத்து வீதியில் வேலை கிடைத்தால் தேவலாம் என்று நினைக்கும் பலரையும் பார்த்திருக்கிறோம். வேலை மாறுவது, ஊர் மாறுவது எல்லாம் சிரமம் என்பார்கள். குடும்பத்தைப் பிரிந்து வாழ மனமில்லை என்பார்கள். ஆனால், தற்போது இருக்கும் எத்தனையோ

வசதிகள் இல்லாத ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பே, பல வாரங்கள் கடுமையான கடற் பயணம் செய்து, அயல்நாடுகளுக்குப் போய், சில பல ஆண்டுகளுக்கு அங்கேயே தங்கி, பொருள் ஈட்டி, அதன் ஒரு பங்கில் அந்த நாடுகளிலும் நகரங்களிலும் கோயில்கள் கட்டி இருக்கிறார்கள்.

நித்திய பூஜைகள், பால் கட்டளைகள், நந்தவனம் என்று நகரத்தார்கள் செய்து வரும் திருப்பணிகள் ஏராளம்.

செட்டிநாட்டு பகுதியில் இருந்து 2,225 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் காசி, நாசிக் போன்ற நகரங்களிலும் சிவபெருமானுக்கு தினசரி மூன்று வேளை சம்போ என இருநூறு ஆண்டுகளாக, உலகப்போர்கள், விடுதலைப் போராட்டங்கள், கொள்ளை நோய்கள், ஊரடங்கு, கொரோனா காலகட்டங்களில் கூட விடாமல் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

மதுரை, சிதம்பரம், திருவண்ணாமலை, காளஹஸ்தி, காசி, இராமேஸ்வரம் என பல புகழ் பெற்ற கோவில்களில் மட்டுமல்ல. இன்னும் சில சிறிய பெரிய, சில ஆயிரம் கோயில்களிலும் தொடர்ந்து திருப்பணிகள் செய்து வருகிறார்கள். உதாரணத்திற்கு, காசி சத்திரத்தில் நகரத்தார்களின் கோவிலூர் மடாலயமும், திருவண்ணாமலையில், கோட்டையூர் மெ.க, குடும்பத்தாரும், சிதம்பரத்தில், காரைக்குடி எம்.எஸ்,எம் குடும்பத்தாரும், மயிலாடுதுறையில் கண்டனூர் நகரத்தார்களும் சில பல ஆண்டுகளாய் அன்னதானம் செய்து வருகிறார்கள்.

தைப்பூசத்திற்கு காவடி எடுப்பவர்களுக்கும், திருவொற்றியூர், குன்றக்குடி, வைத்தீஸ்வரன் கோவில், திருச்செந்தூர், வல்லக்கோட்டை, கொடுமளூர், கோட்டூர் பாதயாத்திரை செல்பவர்களுக்கு மட்டுமல்ல. சபரிமலைக்கு மாலை போடும் நேரம், காவடி செலுத்திவிட்டு திரும்பி வரும் நேரம், புரட்டாசி மாதம் இராமாயணம் படித்து, மாத கார்த்திகைக்கு, திருப்புகழ் படித்து, முற்றோதல் செய்து என பண்டிகைகளையும், வாய்ப்புகளையும் தேடித்தேடி பல்வேறு ஊர்களிலும், திருக்கோயில்களிலும் நகரத்தார்கள் தொடர்ந்து எத்தனையோ ஆண்டுகளாக அன்னதானம் செய்து வருகிறார்கள்.

மணிமேகலை சொல்லும் அறம் தமிழின் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையின் கதை மாந்தர்கள், நகரத்தார்கள் என்பார் உண்டு. அதில், உலகில் வாழும் உயிர்களுக்கு உண்ணுவதற்கு உரிய உணவு கொடுப்பவர்கள், உயிர் கொடுத்தவர்களாகக் கருதப்படுவார்கள் எனும் பொருள்பட,

“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே”

என்று சொல்லப்படுகிறது.

கோவலன் மாதவி ஆகியோரின் மகளான மணிமேகலையை அவள் பெயர் கொண்ட தெய்வம் மணி பல்லவத் தீவில் விட்டது. அங்கிருந்த தீவதிலகை என்னும் தெய்வம் தோன்றிப் பல்வேறு அறிவுரைகள் கூறியது. அது பசியின் கொடுமையைப் பற்றி விவரித்தது. “பாரகம் அடங்கலும் பசிப் பிணி அறுக” எனக் கூறியது.

திருக்குறளில், “அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி” என்ற குறள் அன்னதானத்தின் சிறப்பைப் பற்றிக் கூறுகிறது.

”அன்னதானம் செய்யும் போது, மனம் உருகி, பக்தியோடு செய்ய வேண்டும். அன்னதானம் செய்யும் போது, ஜாதி, மதம், இன வேறுபாடுகளையும் பார்க்காமல், அனைவரையும் சமமாக நடத்த வேண்டும். அன்னதானம் செய்யும் போது, கொடுப்பவர், பெறுபவர் இருவரின் மனதும் நிறைவடையும் வகையில் செய்ய வேண்டும்” என்றார் வடலூர் இராமலிங்க அடிகள்.நகரத்தார்கள் அவ்வாறே செய்து வருகிறார்கள். தொடரட்டும் அவர்கள் அன்னதானத் திருப்பணியும். ♦




Dr.மணிஸ் பல் மருத்துவமனை
No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்
இலவச பல் பரிசோதனை செய்யப்படும்
பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்
பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.
Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923



# ஏழிளந்தமிழ்

## 4. நல்வழி உரை - செம்மல் வ.சுப.மாணிக்கனார்

### கடவுள் வணக்கம்

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

விநாயகப் பெருமானே! பாலும், தேனும், வெல்லப்பாகும், பருப்பும் ஆகிய நான்கு பொருட்களை உனக்குப் படைப்பேன். எனக்கு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தர வேண்டுகிறேன்.

### நன்மையே செய்க

1. புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் – எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.

புண்ணியத்தால் வாழ்வும், பாவத்தால் தாழ்வும் உண்டாகும். ஒருவன் செய்யும் புண்ணிய பாவங்களே அவன் எதிர்காலச் சேமிப்பு ஆகும். எல்லாச் சமயத்தார்களும் சொல்வது இக்கருத்தே. ஆதலால் பாவத்தை நீக்கிப் புண்ணியம் செய்க.

### உயர்குலம் இழிகுலம்

2. சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

துன்பப்படுவோர்க்குக் கொடுத்து உதவுபவர் உயர்குலத்தார் ஆவர். அங்ஙனம் கொடாதவர் தாழ்ந்த குலத்தவர் ஆவர். உண்மை நூலில் சொல்லப்பட்ட கருத்தும் இதுவேயாகும். ஆதலால் பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை.

### ஈகை பயன் வீடுபேறு

3. இடும்பைக் கிடும்பை இயலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே – இடுங்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

துன்பத்தின் இருப்பிடமான இந்த அழியும் உடம்பை மெய் கருதி இராமல், விரைந்து அறம் செய்ய வேண்டும். அறம் செய்யின் வீடுபேறு கிட்டும்.

### காலம் அறிந்து செய்க

4. எண்ணி ஒருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்தும் போதல்லாற் – கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு.

நற்காலம் இல்லாவிடின் திட்டமிட்டுச் செய்யும் காரியமும் நடைபெறாது. நற்காலம் நேரின், கண்ணில்லாதவன் குறி பாராமல் மாமரத்தில் எறிந்த கோலினால் மாங்காய் விழுதல் போல, திட்டமிடாத செயலும் கைகூடும்.

### கவலையடைதல் கூடாது

5. வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா – இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

ஊழால் வாராதனவற்றை விரும்பி அழைத்தாலும் வரமாட்டா. ஊழால் வரக்கூடியவற்றைப் போமின் என்று வெறுத்தாலும் போகமாட்டா. ஆதலால், இன்பத்தை விரும்பியும், துன்பத்தை வெறுத்தும் கவலை அடைதல் கூடாது.

### பேராசை கூடாது

6. உள்ள தொழிய ஒருவர்க் கொருசுகமுங்
கொள்ளக் கிடையா குவலயத்தில் – வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழும் உயிர்க்கு.

திரைகடல் ஓடி அளவில்லாமல் பொருள் தேடி வந்தாலும் விதிப்படி தான் ஒருவர் நுகர முடியும். இதனை உணர்ந்து பேராசை கொள்ளாமல் வாழ வேண்டும்.

### ஞானிகள் பற்றற்று இருப்பர்

7. எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை – நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

உடம்பு, நோய்களும் புழுக்களும் நிறைந்த இழிவுடையது. இத்தன்மையை ஞானிகள் அறிந்திருப்பர். ஆதலால் தாமரை இலையில் தண்ணீர் போல உடம்பின் மீது பற்றற்று இருப்பர்.

### ஒழுக்கம் பொருளினும் சிறந்தது

8. ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த வாயினும்
கூட்டும் பயனன்றிக் கூடாவாம் – தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்.

அளவற்ற பொருள்தேடி வைத்தாலும் ஊழினளவே நமக்குப் பயன்படும். மேலும் செல்வமோ நிலையற்றது. என்றும் நிலைபெறும் நல்லொழுக்கத்தையே தேட வேண்டும்.

### குடிப்பிறந்தார் வறுமையிலும் உதவுவர்

9. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் – ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

ஆறு வற்றி வறண்ட காலத்தும் ஊற்று நீரால் உலகத்தவரை உண்பிக்கும். அதுபோல நல்ல குடியிற் பிறந்தவர் வறுமையடைந்த காலத்தும் தம்மால் இயன்ற அளவு பிறர்க்கு உதவுவர்.

### கொடுத்து உண்டு வாழ்க

10. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

இறந்தவர்க்காகப் பல்லாண்டுகள் அழுதாலும் அவர் திரும்பி வரமாட்டார். நாமும் ஒருநாள் இறப்பது உறுதி. ஆதலால் இறப்பதற்குள் அறஞ்செய்து உண்டு கவலையற்று வாழ்தல் சிறப்பாகும். (தொடரும்)



# குறள் பாட்டு

**குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி**

அதிகாரம் – 44 (குற்றம் கடிதல்)

437) செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.
செல்வத்துப் பயனே ஈதல் என்பதை
சிறிதும் சிந்தையில் கொள்ளா தவர்கள்
செல்வம் பெருகினும் சிறிதும் ஈயாமல்
சேர்த்து வைத்தால்அது சிறிதும் தங்குமோ
சேரச் சேர செல்வம் அதனை
தீரத் தீரக் கொடுக்கும் கொடையே
ஊறி ஊறி ஊற்றாய்ப் பெருகிடும்
உதவுநீ ஏழைக்கு உன்பொருள் எல்லாம்.

440) காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.
விரும்புவ தெல்லாம் நுகர்வதை மற்றவர்
விழைந்துண ராவகை நுகர்பவர் தமக்கு
ஒருபகை இல்லை பகையால் சூழ்ச்சிகள்
ஒருசிறி தளவும் பாதிப்ப தில்லை
மற்றவர் நுகர்வதில் மகிழ்ச்சியைக் காண்பதில்
மனதினில் பொறாமை ஏற்படும் என்பதால்
மற்றவர் அறியா வண்ணம் நுகர்வதில்
மனிதப் பகைகள் வேரற்றுப் போகும்.

அதிகாரம் – 45 (பெரியாரைத் துணைக்கோடல்)

442) உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.
நாட்டைப் பேண யார்துணை வேண்டும்
நாளும் வருகிற அல்லலை அறிந்து
நாட்டு மக்கள் துன்பப் படாமல்
நலம்காக் கின்ற பெரியவர் துணைகொள்
வந்த துன்பம் மட்டு மல்ல
வருகிற துன்பம் இதுவென உணர்ந்து
எந்தத் துன்பமும் வராமல் காக்கும்
இணையிலாப் பெரியார் துணைதே டிக்கொள்.

443) அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.
வரும்துயர் களையும் பெரியார் துணையை
வருத்தி முயன்று சொந்தமாய்க் கொள்க
அரிதிலும் அரிது அப்படி உறவாய்
அடைவது ஆயினும் முயன்றால் அடையலாம்
பெரியார் துணையை உறவை நாளும்
பெற்றிடல் அரிதெனக் கருதி விடாதே
பெரியார் துணைதான் வரும்துயர்க்கு ஆறுதல்
பேணிக் கொள்க பெரியார் துணையினை.

இறைவன் உயிர்களிடத்துச் செய்யும் அனைத்தும் ஐந்தொழில் ஆகின்ற ‘அருளலே’.

அவை,

1) ‘படைத்து அருளல்’: அஃதாவது, உயிரோடு வினையைக் கூட்டுவித்து அருளல்.

2) ‘காத்து அருளல்’: அஃதாவது, உயிரை இளைப்பாறச் செய்து அருளல்.

# திருமந்திரச் சுவை – 50

# அனைத்தும் அருளலே



**பூங்குன்றம் இராமசாமி**

3) ‘அழித்து அருளல்’: அஃதாவது, உயிரை இளைப்பாறச் செய்து அருளல்.

4) ‘மறைத்து அருளல்’: அஃதாவது, தன்னை மறைத்து, உலகைக் காட்டி, அவ் உலகப் போகத்தில் உயிரை ஆழ்த்தி, அவ்வழியில் அவ் உலகியலே தவறு என்று உயிருக்கு உணர்ப்பித்து அருளல்.

5) ‘அருளல்’: உயிரைத் தன்னோடு இணைத்து அருளல்.

இவற்றை இறை நேரடியாகச் செய்வதில்லை. அவன் தன் சக்தியாலேயே (ஆற்றல்) இவை அனைத்தையும் செய்விக்கிறான்.

நாம் புரிந்து கொள்ள வேண்டியே, இறைவனை ‘ஆண்’ என்றும், அவன் அருளை, கருணையை, சக்தியைப் (சக்தி, ஆற்றல்) ‘பெண்’ என்று கொள்கிறோம். அதனை, ‘இறைவியாய், அம்மையாய்’ உருவகிக்கிறோம். மாறாக, அங்கே ‘ஆண், பெண்’ என்கிற பேதம் ஏதும் இல்லை.

இம் முன்னுரையோடு திருமூலரின் இப் பாடலை நோக்குவோம்.

அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்துஇளைப் பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுது ஊட்டி
அருளால் என்நந்தி அகம்புகுந் தானே (10.1800)

இறை அருளால் பிறந்து, வளர்ந்து, இளைப்பாறி, மறைந்து, ஆனந்தம் என்னும் அமுதை ஊட்டி, அடியவன் உள்ளத்தில் அக் குருநாதன் (இறை) எழுந்தருளி உள்ளான்.

ஆன்மாக்களுக்குச் சுதந்திரம் என்றும் இல்லை. ஆகவே, அதனதன் வினைவழி அதனதனுக்கு நுகர்ப்பித்து அவற்றை உயர்த்தித் தன் பேரின்பத்துள் திளைக்கச் செய்கிறான் இறைவன்.

அனைத்தும் ‘இறையின் அருளல்’ அன்றி வேறில்லை. ★

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)



# இராம காவியம்

## முதல் நாள் போர் - (22)

குன்றினை ஒத்த கற்கள் குவித்து
வேரோடு மரங்கள் பற்றிபுதைத்து
நீரோடு நிறைந்த அகழியை தூர்த்து
முன்னேறி முட்டி கதவை உடைத்து
வானரப் படைகள் உள்ளே நுழைந்தன
இலங்கையை காக்கும் பஞ்ச பதத்தை
இல்லாமல் செய்ய இருவரும் விளைந்தனர்
இந்திரஜித் இரும்பெனும் படையுடன்
வேள்வியாய் இருந்து காத்திருக்க
வீடணன் சொன்ன யோசனைப்படி
அந்தி சாயும் வேலைக்காக
ஆவலாய் அவர்கள் காத்திருக்க
ஆதவன் இறங்க மெல்ல மெல்ல
அண்ணலின் அம்பு பாய்ந்தது நேராய்
பஞ்ச பதம் வெடித்து சிதறி
விண்ணிலே கலந்தது வீணாய் போனது
இருந்த இடம் இல்லாமல் போனது
இந்திரஜித் மிரண்டு இயக்கம் இழந்தான்
என்ன நடந்தது என்னவோ என்று
இருந்த ராவணன் இடிந்து போனான்
மன்டோதரி கலங்கினால் கவலை யுற்றாள்
இச்சை இறுமாப்பு இன்னமும் கூட
கச்சையை கட்டி கட்டளை இட்டான்
அன்னையை வணங்கி மனைவியை பார்த்து
முன்னே நடந்தான். தேரில் ஏறி
பின்வரும் படையுடன் போர்க்களம் சென்றான்.

## இலங்கே ஈஸ்வரன் - (23)

காதில் குண்டலம் காற்றில் அசைந்திட
எழுந்திடும் ஓசை மணியோசை
ஒருகால் எடுத்து மறுநாள் வைக்க
நால்வகை படையின் நடையோசை
காலின் தண்டைகள் தகதகவென மின்ன
வந்தனன் இராவணன் இராமன் முன் நின்றான்
இருவரும் களத்தில் எதிர்பட நின்றனர்
இங்கும் அங்குமாய் அம்புகள் பறந்தன
இராமன் அம்பு மணிமுடியைத் தட்டி கடலில் எறிந்தது
நடுங்கிய படைகள் ஒடுங்கி போயினர்
சிதறி ஓடி மறைந்து போயினர்
துணையின்றி இராமன்முன் துவண்டு போனான்
தனித்துப் போராடிக் களைத்த இராவணன்
வாளும் இழந்தான் வாழ்நாள் மறந்தான்
நிராயுத பாணியை நிந்திக்க என்னாது
இனிதே இராமன் சொன்னான்
இன்று போய் நாளை வா
எதிர் கொள்வோம் போரில் என்றான்
இராமனின் மானுட தர்மம் கண்டான்
மனதில் வியந்தான் பெரும் வீரனாய்.

## கும்பகர்ணன் இறப்பு - (24)

அரண்மனை வந்த ராவணன் ஆடிப் போனான்
அன்னை மடியில் அமைதியை தேடினான்
முன்வினை யெல்லாம் முகப்பில் நிற்க
என்ன செய்வான் ஏதும் அறியான்
மாலியவான் பாட்டனை நிமிர பார்த்தான்
ராம பாணத்தை நன்கு புகழ்ந்தான்
ராமன் முன் காமன் கடுகேயாவான்
அவன் வீரம்முன் தோற்று நானோ
பேரிழந்தேன் புகழிழந்தேன் எல்லாம் இழந்தேன்
ராமருடன் போரை சீதை கண்டிருந்தால்
இகழ்ந்தவள் என்னை கோழை என்றிருப்பாள்
காமன் கரும்பு வில்லும் தோற்றது
எந்தன் இரும்பு வில்லும் தோற்றது
பாட்டன் தேற்றினான் பக்குவம் சொன்னான்
செயித்தாலும் தோத்தாலும் சீதை உனக்கில்லை
உண்மையை உணர்ந்து உளரலை விடு
தூங்கும் தம்பியை துயில் எழுப்பு
வீங்கிய தோளன் வெற்றிக்கு உகந்தான்
உண்டு பெருத்தவன் மாமிச மலையவன்
கண்டதும் ஓடுவார் போரிட தயங்குவர்
மண்ணில் எதிர் படுவோரை மிதித்து
விண்ணுக்கு அனுப்பும் வீரம் செறிந்தவன்
இத்தனை கேட்டதும் ஏற்றம் கொண்டான்
அத்துனை மல்லரை அழைத்து சொன்னான்
கும்பகர்ணனை எழுப்பி கூட்டி வரச்சொன்னான்
உறக்கம் நீங்கினான் உண்மையும் அறிந்தான்
செறுக்கு மிகுந்தான் சீதையால் அழியவே
வெறுக்கும் நிலையிலும் வேண்டினன் அழிவையே
வந்தவனை தழுவி வரவேற்ற ராவணன்
வானரப் படையுடன் வந்த இருவரை
போரிலே கொன்று புகழ் ஈட்டி வாவென்றான்
உதிக்கும் சூரியன் தன்செயல் மாத்தலாம்
உத்தமி சீதையை உயர்ந்த ராமனை
எத்துனை செய்தாலும் வெல்ல இயலாது.

(தொடரும்)

# மரபியல் நோய்களுக்கு மருந்து ஆய்வாளர்

## அமெரிக்கா வாழ் டாக்டர் பிரியா சேதுசொக்கலிங்கம்





தமிழ்ச் செம்மல்
முனைவர் சே.குமரப்பன்

**அமெரிக்காவில் அரிதான மரபியல் நோய்களுக்கு மருந்து கண்டுபிடித்து வரும் டாக்டர் பிரியா சேதுசொக்கலிங்கம் அவர்களுடன் ஒரு நேர்காணல்.**

**உங்கள் குடும்பம் பற்றி:**

கண்டவராயன்பட்டியில் வீஆர். குமரப்ப செட்டியார் – ஏகம்மை ஆச்சி எனது பெற்றோர் ஆவர். எனது தகப்பனார் குமரப்ப செட்டியார் பெண்கள் நன்கு படிக்க வேண்டும். வாழ்வில் முன்னேற வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும். “மாபெரும் சபைகளில் நீ நடந்தால் மாலைகள் விழ வேண்டும்” என்ற அளவிற்கு வாழ்வில் உயர வேண்டும் என்று சிறு பிள்ளையிலேயே எங்களை ஊக்குவித்து வளர்த்தார்கள். என்னையும், என் உடன்பிறந்த இரு சகோதரிகளையும் நன்கு படிக்க வைத்தார்கள். நாங்கள் மூன்று பேரும் பெண் குழந்தைகள். மூன்று பெண் குழந்தைகளையும் நன்கு படிக்க வைத்து, இன்று நாங்கள் மூன்று பேரும் நல்ல பணிகளில், நல்ல நிலையில் உள்ளோம்.

**உங்கள் கல்வி பற்றி:**

நான் 12–ஆம் வகுப்பில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதன்மை மாணவியாகத் (Rank) தேர்ச்சி பெற்றேன். பன்னிரண்டாம் வகுப்பு முடித்ததும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்ற கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் முதன் முதலாக உயிர்வேதியியலில் பட்ட வகுப்பு (B.Sc. Bio-Chemistry) தொடங்கினர். அப்பொழுதுதான் இந்த பாடப்பிரிவு கொண்டு வரப்பட்டது. அது சிறப்பாக இருக்கும் என்று அந்த பட்ட வகுப்பில் சேர்ந்து படித்தேன். அதில் தேர்ச்சி பெற்ற பிறகு என்னுடைய உயிர்வேதியியல் முது அறிவியல் (M.Sc.) பட்டப் படிப்பினை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்தேன். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதலாவதாகத் தேர்ச்சி அடைந்து தங்கப்பதக்கம் பெற்றேன். அதன் பின்னர் எனது ஆசிரியர்களும், பெற்றோரும் ஆராய்ச்சிக்கு செல்வதற்காக சிஎஸ்ஐஆர் நெட் தேர்வு (CSIR NET Exam) எழுத ஊக்குவித்தனர். நானும் சிஎஸ்ஐஆர் நீட் தேர்வு எனும் நுழைவுத் தேர்வினை எழுதினேன்.

**சிஎஸ்ஐஆர் நீட் தேர்வு பற்றி கூறுங்கள்**

சிஎஸ்ஐஆர் எனும் அமைப்பு 1942–ஆம் ஆண்டு சர்.சி.வி. ராமன், ஆற்காடு ராமசாமி முதலியார் மற்றும் பட்நாகர் ஆகியோரால் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் கீழ் தொடங்கப்பட்டது. இதற்கான நிதியை மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை வழங்கி வருகிறது. உலகின் மிகப்பெரிய புகழ்பெற்ற சிறந்த ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். ஆயிரக்கணக்கான காப்புரிமைகளை பெற்ற நிறுவனம் ஆகும்.

ஆண்டுதோறும் ஆராய்ச்சி மேற்கொள்ளுபவர்கள் உதவித் தொகை பெறுவதற்காக சிஎஸ்ஐஆர் நீட் தேர்வு நடத்தப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இந்த நுழைவுத் தேர்வு எழுதுகிறார்கள். இது மிகவும் கடினமாக இருக்கும். இதில் தேர்ச்சி பெறுவது சிரமம். பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் எழுதினாலும் ஆண்டுதோறும் 100 மாணவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர். இத்தகைய போட்டி நிறைந்த கடினமான தேர்வினை நான் எழுதி அந்தத் தேர்வில் வெற்றி பெற்றேன். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. தேர்வில் வெற்றி பெற்ற பிறகு சிஎஸ்ஆர் அமைப்பின் கீழ்வரும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள

39 ஆராய்ச்சி நிலையங்களில் எதில் வேண்டுமானாலும் சேர்ந்து ஆராய்ச்சி செய்யலாம்.

**நீங்கள் எந்த ஆராய்ச்சி நிறுவனத்தைத் தேர்வு செய்தீர்கள்?**

அச்சமயம் எனது பெற்றோர் கோவையில் இருந்தனர். நான் 39 ஆய்வு நிலையங்களில் எதில் வேண்டுமானாலும் ஆய்வு மேற்கொள்ளலாம் என்று இருந்த நிலையில், அருகாமையில் இருக்கக் கூடிய மைசூரில் உள்ள சிஎப்டிஆர்ஐ (CFTRI) எனப்படும் மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தை தேர்ந்தெடுத்தேன். மைசூர் சென்று சிஎப்டிஆர்ஐ-யில் சேர்ந்து எனது ஆராய்ச்சி பணியைத் தொடங்கினேன்.

**அங்கு நீங்கள் எது பற்றிய ஆய்வை மேற்கொண்டீர்கள்?**

அங்கு புரோட்டீன், வைட்டமின்கள், தாது பொருட்கள், ஆன்ட்டி ஆக்சிடென்ட் நிறைந்த சிறந்த உணவாக பயன்படக்கூடிய ஸ்பைருலீனா (Spirulina) எனும் நீலப்பச்சை பாசியில் எனது ஆய்வைத் தொடங்கினேன்.

நான் ஆய்வு செய்து கொண்டிருக்கையில் ஆய்வு மேற்படிப்பிற்காக (Senior Research Fellowship) மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு உதவித் தொகை கேட்டு சிஎஸ்ஐஆர்-க்கு விண்ணப்பித்தேன். டெல்லியில் உள்ள சிஎஸ்ஐஆர் தலைமையகத்தில் நேர்முகத் தேர்வுக்கு சென்றேன். சிஎஸ்ஐஆர் எனது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு எனக்கு ஆராய்ச்சி நிதி உதவி வழங்கியது. நான் நான்கு ஆண்டுகள் மைசூர் உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி கழகத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றேன்.

**முனைவர் பட்டம் பெற்ற பின் என்ன செய்தீர்கள்?**

நான் பல்வேறு நிறுவனங்களுக்கு ஆய்வு பட்டம் மேற்படிப்பிற்காக (Post Doctoral) விண்ணப்பித்தேன். ஜப்பானில், ஒசாகாவில் உள்ள நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் பயோமெடிசன் என்னும் நிறுவனத்தில் இருந்து எனக்கு பணி ஆணை வந்தது. இதற்கு இடையில் எனக்கும் தேவகோட்டையைச் சேர்ந்த சொக்கலிங்கம் அவர்களுக்கும் திருமணம் நிச்சயமானது. சொக்கலிங்கம் அமெரிக்காவில் இருந்தார். இதனால் நான் அந்தப் பணியை ஏற்று ஜப்பானுக்குச் செல்லவில்லை.

**எப்பொழுது அமெரிக்காவிற்குச் சென்றீர்கள்?**

எனக்கும், சொக்கலிங்கத்திற்கும் 1996-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்த ஒரு மாதத்தில், டிசம்பர் மாதம் அமெரிக்காவிற்கு வந்தேன். அமெரிக்காவில் எனது கணவர் வசித்து வந்த Memphis என்னும் ஊரில் உள்ள (Tennessee university) டென்னசி பல்கலைக்கழகத்தில் எனது ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பைத் (Post Doctoral) தொடர்ந்தேன்.

**டென்னசி பல்கலைக்கழகத்தில் உங்கள் ஆய்வு பற்றி**

டென்னசி பல்கலைக்கழகத்தில் உள்ள டென்னசி மெடிக்கல் ஸ்கூல் எனும் மருத்துவக் கல்லூரியில் தசைகளை பலவீனப்படுத்தும் மரபணு நோய்கள் (Muscular Distrophy) பற்றி ஆய்வு செய்தேன். இந்த நோய் மரபணு மாற்றங்களால் நடைபெறுகிறது. இந்த நோய் தசை நார்களை பலவீனப்படுத்தி உறுப்புகளை பாதிக்கத் தொடங்கும்.

**டென்னசி பல்கலைக்கழகத்தில் உங்கள் ஆய்வு எப்படி இருந்தது?**

நான் பணியாற்றிய துறையின் பேராசிரியராக, பேராசிரியர் Dr.Jarrett இருந்தார். எனது ஆய்வோடு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு உடற்செயலியல் மற்றும் உயிர் வேதியியல் பாடத்தைக் கற்பிக்கும் பணியை எனக்கு வழங்கினார். இதனால் இங்கு நான் ஆய்வு மேற்கொண்டதோடு மாணவர்களுக்கு பாடங்களும் நடத்தினேன். எனவே, நான் ஆய்வுப் பணியையும், கற்பித்தல் பணியையும் ஒரே நேரத்தில் ஆற்றினேன். இது பலவற்றை தெரிந்து கொள்ளவும், எனது திறமையை வளர்க்கவும் மிகவும் உதவியாக இருந்தது.

**எவ்வளவு நாட்கள் டென்னசி பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்தீர்கள்?**

இங்கு சில ஆண்டுகள் எனது ஆய்வுப் பணியை செய்தேன். நான் கற்பிக்கும் வேலையை தொடர விரும்பினேன். ஆனால், எனது கணவர் பாஸ்டனுக்கு மாறியதால், நானும் எனது குடும்பமும் பாஸ்டனுக்கு மாறினோம். அங்கு சென்றவுடன் எனது பணி மாறியது.

அங்கு மஸ்குலர் டிஸ்ட்ரோபி பற்றி ஆய்வு செய்யும் ட்ரக் டிஸ்கவரி சயின்டிஸ்ட் (Drug Discovery Scientist) ஆக வியத் Wyeth எனும் மருந்து தயாரிக்கும் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன். இந்த நிறுவனம் பின்னர் ஃபைசர் (Spizer) எனும் புகழ் பெற்ற மருந்து தயாரிக்கும் நிறுவனத்தின் கீழ் வந்தது. இந்த பணியானது எனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

இங்கு நான் நோய் பரவு முறைகளையும், அதற்கான காரணங்களையும் ஆய்வு செய்து அதற்கான மருந்து கண்டுபிடிக்கும் பணியைத் தொடங்கினேன். சில ஆண்டுகளுக்கு பிறகு நான் முழுமையாக மருந்து உருவாக்கும் பணியில் ஈடுபட்டேன்.

விளையாட்டு வீரர்களின் காயங்களை போக்க போன் மோர்போஜெனெடிக் புரோட்டீன் (Bone Morphogenetic Protein) எனும் பிஎம்பி 2 எனும் சிகிச்சை மூலம் குணப்படுத்தும் முறையைச் செயல்படுத்தினேன்.

நான் இந்த நிறுவனத்தில் இருந்து Shire என்னும் நிறுவனத்திற்கு மாறினேன். இந்த நிறுவனம் Takeda என்னும் மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் கீழ் வந்தது இங்கு அரிதான மரபணு நோய்களுக்கு (Rare Genetic Diseases) மருந்து கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டேன்.

(தொடரும்)

# அனுபவங்கள் அஸ்தமிப்பதில்லை

அரியக்குடி " ஸ்ரீ" – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



ஒரு வாரமாகவே ஒரே பேச்சு... நான் வேலை பார்த்த இடத்தில் என்னை மட்டும் மதித்து ஒரு மீட்டிங்கிற்கு வரச் சொல்லியிருக்கிறார்கள். இத்தனாந்தேதி ... இத்தனை மணிக்கு ... காரைக்குடி & செக்காலையில ... மொபைல் போனில் சேமித்து வைத்த நம்பர்களுக்கெல்லாம் அழைப்புகள் பறந்து கொண்டிருந்தன.

ஆச்சி, அடுப்படியில், இவுக பார்த்த அரண்மனை சேவுகத்த நம்பி எங்க அப்பச்சிதான் ஏமாந்தாக. பழைய "கட்டியத்த" கூறிகிட்டு. இன்னைக்குப் பலகாரத்தை நேரத்துக்கு சாப்பிடாம இந்த இராமயணத்தை காலையிலே ஆரம்பிச்சிட்டாங்க என அலுத்துக் கொண்டிருந்தது செட்டியாருக்கு கேட்கவில்லை.

ஆத்தா, மகன் படிச்சு முடிச்சிட்டான். எல்லா பாங்க்லயும் சொல்லி வைச்சிருக்கோம். இன்னைக்கு நாளைக்குன்னு வேலை வந்திடும். நல்ல தாக்கலா இருந்தா சொல்லுங்க. இப்படி ஒரு ஆத்தாவின் மகன் தான் நம்ம கதாநாயகன்.

நமக்கு ரிசர்வ் பாங்க்ல வேலை கிடைக்கும்னு காதலை தொடங்கினவனுக்கு, ஒரு சின்ன பாங்க்ல வேலை கிடைச்சு, சிக்கனமான வாழ்வைத் தொடங்கினவன். நாம காதலிச்ச பொண்ணு கிடைக்கலை. நம்ம காதல் ஒரு தலைக் காதல் போல எனப் புரிந்து கொண்டு, கிடைச்ச பொண்ணை காதலிக்கத் தொடங்கினான். காதல்னா காதல் அப்படிக் காதல்.

பொழுது எப்ப விடியும் .... மலரெப்ப மலரும்..... சிவன் எப்ப வருவார் .... பலன் எப்பத் தருவாரென, காலைப் பலகாரம், பிளாஸ்கில் காபி, மதியம் சாப்பாடு, மாலையில் கொறிக்க தேன்குழல், சீடை என கேரியர் ரெடியாகிடும். "உன் கைப்பக்குவம் நல்லாருக்குன்னு என் டிபன் பாக்ஸை முதல்ல திறந்து எல்லாரும் எடுத்தர்ராய்ங்க. கடைசியல எனக்குன்னு ஒண்ணு இல்ல. எல்லாத்தலயும் கொஞ்சம் கூட வைங்கிறேன்" எனச் சொல்லி முடிப்பதற்குள், சாமி படத்திற்கு பக்கத்தில் வக்கூடு வந்திடும். சைக்கிள்ல வக்கூட வைச்சு, வீட்டோரமா இருக்கிற கல்லுல கால் வைச்சு, வக்கூடு சாஞ்சிடாம சைக்கிள்ல கால் தூக்கிப்போட்டு (அப்பச்சிக்கு சைக்கள்ல கெந்தி ஏறத் தெரியாது) வண்டி புறப்பட்டா, இனி செட்டியார் வர ராத்திரி 8 ஆகிடும்.

இப்படி 35 வருடம். ஆச்சி சாப்பாடு கட்டி அரண்மனை சேவுகம் தொடர்ந்திருக்கு. அப்பச்சி ஒவ்வொரு ஊர்லயும் 3 வருஷம், 4 வருஷம், பெரிய பதவியில இல்லைங்கிறதால செட்டிநாட முழுசாச் சுத்தின முருகன் ஆகிட்டார். ரிட்டையர் ஆகிட்டாலும், அப்பச்சி சொன்னா சரிதான்னு டெபாசிட் போடுறவங்க, எங்க கடன் வாங்கினா வட்டி குறைச்சு இருக்கும்னு கேட்க வாரவங்க, இப்படி தினமும் ஞாயிற்றுக்கிழமைதான்.

10 மணியானச் சரி, இப்ப சைக்கிள் இல்லை. ஸ்கூட்டி வைச்சிருக்காக. வண்டி அவுக பாங்க் வாசலுக்கு போயிடும். பாங்க்ல கஸ்டம்மர்ஸ் உக்கார்ர பகுதியில பரீட்சை எழுதற பாடு, பணம் போடுற சலான், பணம் எடுக்கிற சலான் எல்லாம் சகிதமா உட்கார்ந்திடுவாக. மண்ணு வெட்டுற காசு எடுக்க வருமே திருக்கூட்டம் அதுக்கெல்லாம் எழுதித் தருகிற வேலை. மதியம் இரண்டு வரை குனிஞ்ச தலை நிமிற முடியாது. இப்படி 5 வருஷம்னு போயிக்கிட்டு இருந்திச்சு பொளைப்பு.

அக்கவுண்ட் நம்பர்லாம் 15 இலக்கத்தில வந்திடுச்சு. பேரேடு இருந்த எடமெல்லாம் கம்பியூட்டர் உட்கார்ந்திடுச்சு. 100 எடுக்கணும் அப்பச்சின்னா, 1000-ம்னு எழுதி அப்பச்சி நினைப்பு தப்பி எழுதி கொடுக்க ஆரம்பிச்சதும் அந்தத் தன்னார்வத் தொண்டும் நின்னிடுச்சு. முற்றோதல், பிரதோஷம், தேய்பிறை அஷ்டமின்னு அடுத்த பை தூக்கிப் பயணம் போய்க்கிட்டிருந்த போதில் தான் பாங்க்ல வேலை பார்த்து ரிடையரானவங்கள பாங்க் சேர்மன் பார்க்கணும்ங்கிறார் என்ற அழைப்பு.

பாங்க் கூட செய்யாத ஒரு வார முன்னேற்பாடுகள் அப்பச்சி செய்து கொண்டிருக்கிறார். அன்றைக்கு அதிகாலை 4.00 மணிக்கே விடிந்து விடுகிறது. தலைகாணிக்கு கீழ் துவைச்சு உருவி மடிச்சு வைத்திருந்த "அயன்" செய்தது போலிருந்த சட்டை ரெடி. ஒரு வாரத் "தாடி" எடுத்து, குளித்து, திருவாசகம் சொல்லி முடிச்சா காலை மணி 7.45. "என்னங்கற, டிபன் ரெடியா எல்லாரும் வந்துருவாக". சாப்பிட்டு கை கழுவின கையோடு, நாலஞ்சு வருஷத்துக்கு அப்புறம் பேண்ட எடுத்து மாட்டுனா, பேண்ட் பத்தல. ஆச்சி சாப்பாட்டுல அப்படி வளர்த்திருக்கிறார். "என்னங்றேன். பேண்ட்ல அப்பல்லாம் டக்க எடுத்து விடுவியே. பாரு முடியுமான்னு". ஆச்சி "அதெல்லாம் முடியாதுன்னு" கராறச் சொல்லிடுச்சு.

இப்ப பாரம்பரிய வேஷ்டி. அயன் செய்தது போன்ற சட்டை மாட்டி. மீட்டிங்




நமது செட்டிநாடு

# கவிமாமணி புதுவயல் செல்லப்பன் அவர்களின் 99-ஆம் ஆண்டு பிறந்தநாள்

26.08.2025 அன்று நமது செட்டிநாடு இதழ் ஆசிரியர் குழு உறுப்பினர் கவிமாமணி புதுவயல் செல்லப்பன் அவர்கள் தனது 99 ஆம் பிறந்தநாளை அவர் குழந்தைகளுக்காக எழுதியுள்ள ‘பாராட்டுக்குரிய பாரத மக்கள்’ என்னும் நூலினை ஆறாவயல் RM. சண்முகம் செட்டியார் அவர்கள் வெளியிட உறவினர்கள் நண்பர்களுடன் கொண்டாடினார். புதுவயல் செல்லப்பனார் நீண்ட ஆயுளுடன் நல்ல உடல் நலத்துடன் நீடுழி வாழ நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.

ஸ்பாட்டிற்கு 8.30 மணிக்கே வந்திட்டாரு செட்டியாரு. ஒரு பிள்ளையக் காணும். ஐயா, என்ன வேணும்னு ஒரு குரல். திரும்புனா வாட்ச் மேன். “பாங்க்.. மீட்டிங்..” அது 11 மணிக்கில்ல.. போய்ட்டு அப்புறமா வாங்கன்னுட்டாரு.

பெரியார் சிலைகிட்ட ஒரு காபி, தினத்தந்தி வாசிப்புன்னு நேரத்தைக் கடத்திட்டு மீண்டும் வந்தா. ஒவ்வொரு ஆளா வருது. அவுகளான்னு அடையாளம் கண்டுபிடிக்க கொஞ்ச நேரம் புடிக்குது. எல்லாரும் ரிடையர்டு. சிங்கமா இருந்தவகள்லாம் சின்னப் பூனையாட்டம் ஓரமா நடந்தாக. கூட்டம் 50 பேர் இருக்கும். ஒருத்தர ஒருத்தர் பேரச்சொல்லி சௌக்கியமான்னு கேட்டது ஆனந்தமா இருந்தது. அவுக அவுக தன் பிள்ளைக எங்க இருக்கு. தான் என்ன பண்றாக. உடல் நிலை எப்படி இருக்குன்னு பேசிக்கிட்டிருக்கும் போது. சேர்மன் வருகிறார் என்றார்கள். எல்லாரும் எழுந்து கும்பிட்டாங்க.

ஒவ்வொரு ரிடையரான ஸ்டாபிகிட்டயும் வந்து சேர்மனே ஒரு ரோஸ் கொடுத்து கைகுலுக்கி சிரித்தார். சில நடுங்கிய கைகள் எசமான் கையைத் தொடக் கூசி விரலை மட்டும் தொட்டன. ஒரு பெரியவர் செய்வதறியாது இவர் தான் பென்சன் தர்ரவரா என்று அவர் காலைத் தொட எத்தனிக்க, சேர்மன், ஐயா நான் உங்க பையன் மாதிரி என அவர் காலைத் தொட அரங்கமே உணர்வலைகளால் அதிர்ந்தது. சிலர் சேர்மனுக்கு சால்வை அணிவித்தனர். நம்ம அப்பச்சி சேர்மன் பக்கத்தில போய் ஒரு பின்னுன பையிலிருந்த ஒரு பிரேம் போட்ட சர்டிபிகேட்ட எடுத்து வெள்ளந்தியா “நான் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு பாதயாத்திரை போய் வந்திருக்கிறேன். சர்டிபிகேட் பாருங்க” என்றார். சேர்மன் அப்படியா என்று கேட்டுவிட்டு, அடுத்த சப்ஜக்ட் என்ன என்று திரும்ப. மீட்டிங் தொடங்கியது.

“பழைய மாதிரி டெபாசிட் வரமாட்டேங்குது. ரிடையரான உங்களுக்கு பெரிய அனுபவம் இருக்கு. நாங்களெல்லாம் உங்க பிள்ளைக போல. உங்களுடைய நீண்டகால அனுபவத்திலிருந்தும் இப்ப உள்ள நிலவரப்படியும் நம்ம பாங்க் டெபாசிட்டைக் கூட்டறதுக்கு என்ன வழின்னு சொல்லுங்க. இது உங்க பாங்க். உங்களுடைய உழைப்பு இன்னும் இது வளருவதற்கு தேவைப்படுது” என்று முடித்தார்.

ஒவ்வொரு குரலாக வந்தது. இன்டரஸ்ட் ரேட் குறைவா இருக்கு. அதைத் தாங்க. இதைச் சொல்லுங்க என்று சம்பிரதாயமா பலர் பேசுனாங்க. சிலர் ஐயா கொஞ்சம் நாளான்னாலும் இப்பவாவது டெபாசிட்டுக்கு கஸ்டமர்களைப் பார்ப்போம்னு சொல்றீங்க பாருங்க. வாங்க நாங்களும் வீடு வீடா வரோம். டெபாசிட் கூடணும். லாபம் கூடணும்னு எங்களுக்கும் பாங்க் மேல அக்கறை இருக்கு. அதில் கொஞ்சம் சுயநலமும் கலந்திருக்கு. பாங்க் நல்லா இருந்தாத்தானே எங்களுக்கு பென்சன் வரும் என்று அடுத்தடுத்த திட்டங்களையும் பேசினார்கள்.

சார், பாங்குக்குள்ள போனா தலை நிமிர்ந்து, “வாங்க, உங்களுக்கு என்ன வேணும்னு கேட்கிற ஸ்டாஃப் இருக்காங்களான்னு எல்லாரும் தேடுறாங்க. கஸ்டமர்தான் கடவுள்னு சொல்லிக் கொடுக்கணும் சார். நமக்கு எதிர்த்தாப்ல நிக்குறவங்க வலியைக், குரலைக் கேட்க பாங்க் கவுண்டருக்குள்ள கொஞ்சம் ஈரம் உள்ளவங்கள போடுங்க சார்” எனச் சொல்ல நினைச்சதை இன்னும் சேர்மன்கள்கிட்ட இருக்க பயத்துல, யாருமே சொல்லலை.

காபி, சாப்பாடெல்லாம் கொடுத்தார்கள். ரிடையராகி வீட்டிற்கு வந்த அன்றைக்கு தெருவில் ஒரு வியாபாரி “ஓடாத பேன், பிரிஜ், வாஷிங்மிஷின், வாட்ச். பாடாத ரேடியோ, டிவி எது இருந்தாலும் கொடுங்க. வீட்டுல அடசலை ஒழிங்க. காச வாங்கிக்கங்கன்னு ஒலித்த அந்தக் குரல் இப்போது மீண்டும் அப்பச்சிக்கு ரீங்காரம் இட்டது. ஓடுகிற ஒவ்வொரு நிறுவனத்தையும், உற்சாகமாக ஓட வைக்க, இந்த ஓடாத மிஷின்களும் இன்னும் தேவைப்படுகிறது போலும். அப்பச்சி வீட்டு டிபன் கேரியர் அடுத்த பயணத்திற்கு தயாராகி விட்டது.

# நகரத்தார் சிகரத்தார் 118



காரைக்குடி நாராயணன்



ஆச்சி ரத்னசபாபதியிடம் வந்து மெல்லப் பேச்சை ஆரம்பித்தார்.

ரத்னசபாபதி, யானை இருந்து அரசாண்ட இடத்தில பூனை இருந்தாப் புலம்பித்தானே ஆகணும். என் பேச்சை மத்த பேரன், பேத்திகள் கேக்குற மாதிரி என் தம்பி மகன் நீயும் கேப்பாய்ன்னு நம்பித்தான் ஜானகி அய்த்தியாண்டி மகள் பரிபூரணத்தை உனக்குப் பேசி முடிச்சேன். நீ என்னவோ சொல்றே. இருக்குறதை விட்டுட்டுப் பறக்குறதைப் புடிக்கக் கூடாது. காவேரிப்பூம்பட்டினத்தில போய் கடல்ல முழுகித் தலை குளிச்சிட்டு வாப்பா. சோதிடர் சொன்னபடி எல்லாம் நல்லபடியா நடக்கும்.

சோதிடத்தில எனக்கு நம்பிக்கை இல்லே.

எங்களுக்கு இருக்கு. கடல்ல முழுகிட்டு வாப்பா. ஆச்சிமார்கள் பிள்ளைகளுக்குத் தாலாட்டுப் பாடுகிற போதே இதைச் சொல்லி இருக்கோம்.

சங்கு முழங்க சமுத்திரத்தில் மீன் முழங்க
எங்கும் முழங்கவென்று எழுந்தருளி வந்தாயோ
கொற்கைத் துறைமுகத்தில் – கண்ணே நீ
கொண்டு வந்த கெட்டி முத்தோ
குலசேகரப்பட்டணத்தில் – கண்ணகி
குளிக்க எடுத்த முத்தோ
மூனுகப்பல் கொடி பிடிக்க
முத்துக்கப்பல் ஓடிவர
மூழ்கிக் குளிச்சு முத்தெடுக்கும்
மூத்தவனே கண்ணுறங்கு

ஆச்சி கண்கலங்க இந்தத் தாலாட்டைப் பாடும் போது செட்டியார், ஆச்சிக்குக் கை காட்டி விட்டுப் பேசினார்.

ரத்னசபாபதி, யாருப்பா அந்த சினேகவல்லி. எங்கிட்ட தனியாச் சொல்லு.

மாமா. இத்தனை வருஷம் எல்லாருக்கும் தெரியாம, ரகசியமா இருந்தது இப்போ எல்லாருக்கும் தெரியட்டும். சினேகவல்லி என் கூடப் பிறக்காத சகோதரி. என்னை விட 15 வயசு மூத்தவள். இன்னம் கல்யாணம் ஆகலே. ஆனா, அவங்களைப் பாத்தா ரதிதேவி தோத்துப் போயிடுவா. அந்த அழகும், நளினமும் அவங்க தாசி குலத்துக்கான அங்கீகாரம்.

அங்கிருந்த அத்தனை பேரும் அதிர்ச்சி அடைந்தார்கள்.

ஆச்சி பெருமூச்சு விட்டபடி மெல்லப் பேச ஆரம்பித்தார்.

ரத்னசபாபதி, இது எப்பவோ நடந்துது. ஏன் இப்போ அதைப் பத்திப் பேசிப் பிரச்சனை பண்றே. அன்னைக்கு வாழ்ந்தோம். இன்னைக்கு வசிக்குறோம்.

ரத்னசபாபதி கொஞ்சம் கோபமாகவே கேட்டான்.

வாழ்றதுக்கும், வசிக்குறதுக்கும் என்ன வித்தியாசம்?

ஆச்சி விவரமாகச் சொன்னார்.

நிறைய இருக்கு 1940-லேருந்து 1990-க்குள்ளே வாழ்ந்தவங்க பெருமைபட்டுக்கலாம்.

ஆயாக்களும், அப்பத்தாக்களும் செட்டிநாட்டுப் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்த கல்வெட்டா இருந்தாங்க. அயல்நாட்டுக்குப் போன அய்யாக்களும், அப்பச்சிகளும் கொண்டுவிக்கப் போன இடத்தில பர்மாக்காரிகள், சிலோன்காரிகள், மலாய்க்காரிகள்ன்னு சம்பாத்தியத்தோட சந்தோஷத்தை உண்டாக்கிக்கிட்டாங்க. அயல்நாடு போகாதவங்க உன் அப்பச்சி மாதிரி விராலிமலையிலேயும், சுத்தி உள்ள ஊர்கள்லேயும் சொந்தத்தை உருவாக்கிட்டாங்க. அவங்க இல்லாத போதும் ஆயாக்களும், அப்பத்தாக்களும் சந்தோஷங்களை மனசுக்குள்ளே அடைச்சு வச்சு, வீட்டுல மாடு வளத்துப் பால் கரந்து வித்து, தோட்டத்தில காய்கறி விளைச்சு, வருஷத்துக்கு ஒரு தடவை நெல் அவிச்சு காயப் போட்டு, வத்தல்வரளி, உப்புக்கணம் காயவச்சு, கொட்டான் கடகாம் முடைஞ்சு நேரத்தைச் சந்தோஷமாக்கி நிம்மதியா வாழ்ந்தாங்க. திண்ணை எப்போ கிரில் கம்பி ஆச்சோ அப்பவே போச்சு ஒற்றுமை, அகலமான தூண்கள் வச்ச வீடு எப்போ செங்குத்தாப் போச்சோ அப்பவே போச்சு உறவு. திராட்சைக் கொத்து மாதிரி இருந்த கூட்டுக்குடும்பம், ஆப்பிள், அன்னாசி மாதிரித் தனித்தனியாப் போனதுதான் முக்கிய காரணம்.

அத்தை நீங்க சொல்றதெல்லாம் படிக்காத பெண்கள் வாழ்ந்த காலம். இப்போ எல்லாப் பெண்களும் நல்லாப் படிச்சு நல்லது கெட்டதைச் சிந்திக்க ஆரம்பிச்சிட்டாங்க. ஆபிசுக்கும் போய் ஆண்களை விடச் சம்பாதிக்க ஆரம்பிச்சிட்டாங்க.

அத்தை, கட்டுப்பாடுகள் கொண்ட நம்ம சமூகத்துக்கு அங்கேயும் இங்கேயும், தெரிஞ்சும் தெரியாமலும் ஆதரவாக இருந்து ஒரு காலத்துப் பொட்டுக் கட்டியவர்கள்-ங்குற பேரோட இருக்குற சில பெண்களோட வாழ்க்கை பொட்டலாத்தான் இருக்கு. அவங்களுக்கு ஏன் நம்ம நகரத்தார்கள் வாழ்க்கை கொடுக்கக் கூடாது. சைவப் பிள்ளைமார்களின் பெண்கள் தேவைன்னு நம்ம நகரத்தார் திருமணத் தகவல் மையம் வெளிப்படையா விளம்பரம் கொடுக்குற போது நான் ஏன் என் கூடப் பிறக்காத சகோதரிக்கு வாழ்க்கை கிடைச்சதும் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது.

ஆச்சி சொல்ல முடியாமல் மெல்லத் தலைகுனிந்தபடி சொன்னார்.

ஒரு குடும்பப் பெண்ணின் அங்கீகாரம் கற்பும், ஒழுக்கமும்தான்.

ரத்னசபாபதி கோபமாகக் கேட்டான்.

உ ஸ்ரீ ராமஜெயம்

# சுவீகாரம்

நாட்டரசன் கோட்டை, இளையாத்தங்குடி
கோவில் – கழனி வாசல் பிரிவு
6 மாதம் அல்லது 1 வயதிற்குள் உள்ள
ஆண் குழந்தை வேண்டும்.
சுவீகாரம் விட விரும்புவோர்.
தொடர்புக்கு : 9486905906

பொட்டுக் கட்டிய பெண்களாப் பிறந்ததால ஒரு பெண் தப்பானவளா? அத்தை உங்களுக்கு எல்லாம் தெரியும். நீங்க ஒரு படிப்பாளி. பேச்சாளரும் கூட. எத்தனையோ திருமணங்கள்ல வாழ்த்திப் பேசி இருக்கீங்க.

இதிகாசங்கள்ல எடுத்துக்குங்க. ராமாயணத்தில சீதை வனவாசம் அனுபவிச்சா. அவளை ராமன் தீக்குளிக்கச் சொன்னான். பாரதத்தில அஞ்சு பேரோட வாழ வேண்டிய நிலைமை பாஞ்சாலிக்கு வந்துது. அழகான பெண். வயதானவனைக் கல்யாணம் பண்ணிக்குறா. அவன் தொழுநோய்க்கு ஆளானப்புறமும் அவனைத் தோள்ல சுமந்து தாசி வீட்டுக்குப் போறா. இது நளாயினி கதை. இதெல்லாம் வடமொழி இலக்கியம். ஆனா, தமிழ் இலக்கியம் ரொம்ப வித்தியாசமானது. மனைவியைக் கொல்லக் கணவன் மலை உச்சிக்குக் கூட்டி வந்தது தெரிந்த மனைவி அவனை மூன்று தடவைகள் சுற்றி வந்து, அவன் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினால் மோட்சம் என்று கூறி, அவள் கணவனை மலையிலிருந்து தள்ளி விடுகிறாள். இது குண்டலகேசி. ஏன் இவ்வளவு. நம்ம கண்ணகி, கணவன் செய்யாத குற்றத்துக்கு மதுரையே எரிச்சா. இது சிலப்பதிகாரம். ஒரு ராஜகுமாரன் பேரழகியிடம் காதல் கொண்டான். அவன் காதலை நிராகரிச்சுத் துறவறம் பூண்டாள். இது மணிமேகலை.

ஆச்சி, அவன் சொன்ன இலக்கியங்களை ஒரு பக்கம் ரசித்தாலும், இன்னொரு பக்கம் வேதனையின் விளிம்பில் இருந்தார். அவனோ நாடக வசனத்தை ஒத்திகை பார்ப்பது போலப் பேசினான்.

அத்தை இப்படி நடக்கும் என்று தெரியாமலே நான் ஒரு நாடகம் எழுதி அயல்நாட்டில் அரங்கேற்றினேன்.

தலைப்பு –‘மாதவியின் கடிதம்’. கோவலன் மாதவியைப் பிரிந்து போக, அவன் பிரிவு தாங்காமல் மாதவி, கோசிகா என்பவனிடம் கோவலனுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்புகிறாள். இது அவள் தாய் சித்ராபதிக்குப் பிடிக்கவில்லை. அவள் சொல்கிறாள். மாதவி, பெண்களின் ஒரு துளிக் கண்ணீர் ஒரு கடலையே உள்வாங்கச் செய்யும். வலிமை பெற்றது. அதை எல்லாவற்றையும் நம்மிடம் இழந்து போன கோவலனுக்காக ஏன் வீணாக்குகிறாய். மலரிடம் தேனிருக்கும் வரை தான் வண்டுகள் வரும். அதுபோல் தான் உன்னைப் போன்ற பெண்களிடம் இளமை இருக்கும் வரைதான் செல்வந்தர்கள் வருவார்கள். அதை அழுது இழந்து விடாதே. இன்று மாலை மன்னர் வீதி உலா வருகிறார். அவரை அழைத்து வா. அரண்மனை சுகம் அனுபவிக்கலாம். ஒப்பாரியை நிறுத்தி விட்டு ஒப்பனை செய். போ.

இதைக் கேட்ட மாதவி கோபத்தில் கொந்தளிக்கிறாள். ஆடல் மகளிர் என்றால் இதுதான் சட்டமா என்று அழுதாள்.

அதற்குச் சித்ராபதி, ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும், முத்துமாலையும் பரிசளித்து தலைக்கோலி என்ற பட்டத்தையும் மன்னன் வழங்கிக் கௌரவித்தாரே. அதை விலைக்கு வாங்க முடிந்தவனே உன்னை மனைவியாக அடையலாம் என்கிறாள் தாய் சித்ராபதி. அதை வலம்புரி முத்தே, கரும்பே, தேனே என்று கண்ணகியை வர்ணித்த கோவலன் வாங்கி, மாதவியுடன் குடும்பம் நடத்துகிறான். ஆனால், இந்திர விழா அந்தச் சந்திரனையும், சூரியனையும் பிரித்தது. காவிரியே சோழ மன்னன் கங்கைப் பெண்ணை விரும்பினாலும், நீ அவனை வெறுப்பதில்லை என்று கோவலன் பாடிய பாட்டைத் தவறாகப் புரிந்து கொண்ட மாதவியை விட்டுக் கோவலன் பிரிந்து செல்கிறான். அவனைப் பிரிந்து வாழ முடியாமல் தான் கடிதம் எழுதி, மாதவி கோசிகனிடம் அனுப்பினாள். அவன் கடிதத்தைக் கொடுத்துவிட்டு வந்து ஏமாற்றத்துடன் நின்றான்.

அவனிடம் மாதவி கேட்டாள்.

கோசிகா என்னைப் பற்றிக் கோவலன் என்னவெல்லாம் கேட்டார்.

ஒன்றுமே கேட்கவில்லை.

மகள் மணிமேகலையைப் பற்றிக் கூடக் கேட்கவில்லையா?

இல்லை.

அப்பாவின் மார்பில் உதைத்து விளையாட மகள் மணிமேகலைக்கு ஆசை இருக்காதா?

மாதவி அழுதாள். கோசிகா கண்டுகொள்ளாமல் போனான்.

சித்ராபதி வந்து மாதவிக்குத் தூபம் இட்டாள்.

மாதவிக் கண்ணே. கோவலன் உனக்குக் காவலனாகக் கொஞ்ச காலம் இருந்தான் என்று நினைத்துக் கொள்.

பத்துக் கப்பல்களுக்குச் சொந்தக்காரர் நாளங்காடியிலுள்ள கடைகளில் பாதி இவருடையது. அவர் இன்று மட்டும் இருப்பார். நாளை கிரேக்கம் போய் விடுவார். ஒப்பனை செய்து கொண்டு வா. போ.

மாதவி விரக்தியுடன் சிரித்துக் கொண்டே கேட்டாள். மணிமேகலை யார் என்று கேட்டால் என்ன சொல்வது.

உன் தங்கை என்று சொல்.

மாதவி கண் கலங்கினாள். ஒரு தீர்மானத்துடன் ஒப்பனை அறைக்குச் சென்றாள். சித்ராபதி ரத்தத்தை உறிஞ்சும் அட்டையாக இருந்தாள். ஆனால், மாதவியோ மொட்டையடித்துக் காவி உடுத்தி வந்து துறவியாக நின்றாள். அவள் கால் சலங்கை கடவுள் முன் ஆடுவதற்கு மட்டுமே என்று தெரிந்த நகரமே ஆச்சரியப்பட்டது என்று ரத்னசபாபதி சொல்லி முடித்தான்.

இவ்வளவு பெரிய கதையை அவன் சகோதரியாக நினைக்கும் சினேகவல்லியின் தாயும், மாதவியும் ஒன்று தான் என்பதற்காகச் சொன்னான் என்று புரிந்துகொண்டதை ராஜ்மோகன் ரசித்தான்.

ஆச்சியிடம் மெல்லப் பேசினான்.

கணிகையர் குலத்தில் பிறந்திருந்தாலும் மாதவியும், மணிமேகலையும் கற்பிற் சிறந்தவர்களாக வாழ்ந்தது மிகவும் பெருமை.

ஆச்சி, ரத்னசபாபதி விருப்பம் போல அவர் மூத்த சகோதரி சினேகவல்லியின் திருமணத்தையும் நடத்த ஏற்பாடு செய்தால் நடக்க வேண்டியது நல்லதாக நடந்து விடுமே.

ஆச்சி யோசித்து விட்டுச் சம்மதம் என்று தலையாட்டினார்.

(தொடரும்)



# விலங்கின் அறிவோடு ஒரு பறவை



சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்

காலம் காலமாக நம்மில் பலர் மனசுக்கு நெருக்கமாக வைத்து நட்பு பாராட்டி வீட்டில் வளர்க்கும் செல்லப் பறவை கிளி. அது மிதமான வெப்ப மண்டலத்தில் பெருகி வளரும் பறவைதான். இந்திய இலக்கியங்களும், புராணங்களும் கிளிகளைக் கொண்டாடி இருக்கின்றன. ஆனாலும் கிளி நம் இந்திய மண்ணில் தோன்றிய பறவை அல்ல.

**கிளிகள் பிறந்த பூமி:**

ஆஸ்திரேலியாவின் மையத்தில் கோண்ட்வானா பகுதியில், தற்காலத்தில் வாழும் கிளிகளைப் போன்ற பறவையின் எலும்புக் கூடுகளின் படிவங்கள் கிடைத்திருக்கின்றன. அவை கிளிகள் 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கலாம் என்று சான்று கூறுகின்றன.

**சுதந்திர வாழ்க்கை:**

கிளிகள் காடுகளில் வளர்ந்த மரங்களின் பெரிய பொந்துகளில் முட்டை இட்டுக் குஞ்சு பொரித்து, அங்கு கிடைக்கும் கொட்டைகளையும், விதைகளையும் சாப்பிட்டுக் கொண்டு உல்லாசமாக வாழப் பிறந்தவை. ஆனோல், கிளிகளின் உடல் நிறத்தின் கவர்ச்சியே அவற்றிற்குப் பகை ஆகிப்போனது, பெண்களின் உடல் அழகே அவர்களை ஆண் மிருகங்களின் கைகளில் சிக்க வைத்துச் சீரழிப்பது போல!



**சிறைக் கூண்டு வாழ்க்கை:**

காலப்போக்கில் கிளிகள் சிறை பிடிக்கப்பட்டு உலகமெங்கும் வர்த்தகப் பொருள்கள் ஆயின. 2021-ல் எடுத்த கணக்குப்படி, சுமார் 50 மில்லியன் கிளிகள் (அன்றைய தினத்தில் உலகில் வாழ்ந்த மொத்தக் கிளிகளின் எண்ணிக்கையில் 50 சதவீதம்) கூண்டில் அடைபட்டு வீடுகளில் செல்லப் பிராணிகளாகச் சிறை வாழ்க்கை வாழ்கின்றன.

**இந்தியாவில் கிளிகள்:**

ஆதியில் இந்தியாவில் சிந்துசமவெளியில் கிளிகள் கி.மு. 5-ம் நூற்றாண்டில் காணப்பட்டதாகச் சரித்திரக் குறிப்புகள் இருக்கின்றன. மாவீரன் அலெக்சாண்டர் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்த போது, சிந்து சமவெளிப் பகுதியில் இருந்து மேற்கத்திய நாடுகளுக்குக் கிளிகளைக் கொண்டு சென்றிருக்கிறார். தென்னிந்தியாவில் இருந்த கிளிகளுக்குக் கழுத்தைச் சுற்றி ரோஸ் நிற வளையங்கள் காணப்பட்டன. சிந்து சமவெளிக் கிளிகளுக்கு கழுத்தில் வளையம் இல்லை.

**கிளிகளின் உணவு:**

ஆண் கிளிக்கும், பெண் கிளிக்கும் உருவத்தில் எந்த வேறுபாடும் கிடையாது.

கிளிகளின் முதன்மையான உணவு கொட்டைகளும், பருப்புகளும், விதைகளும்தான். சில கிளிகள் பழங்களைக் கடித்துத் திண்பதுகூட, பழங்களின் சதையை நீக்கிக் கொட்டைகளை உண்பதற்காகத்தான். சில கிளிகள் சிறு நத்தைகளையும், புழு, பூச்சிகளையும் உண்கின்றன.

ஆஸ்திரேலியாவில் காணப்படும் லோரிகீட் கிளிகள் பூக்களில் உள்ள தேனையும், மகரந்தப் பொடியையும் உண்கின்றன. அதற்குத் தகுந்தாற்போல்



அவற்றின் நாக்கின் நுனியில் ப்ரஷ் போன்ற குஞ்சங்கள் (முடிகள்) இருக்கின்றன.

**வண்ணங்களின் ரகசியம்:**

கிளிகளின் இறகுகளில் உள்ள சிவப்பு, மஞ்சள், பச்சை வண்ணங்கள் அழகுக்காக இல்லை. அவை கிளியின் உடலைப் பாக்டீரியாக் கிருமிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக உற்பத்தியாகி இறகுகளில் படியும் நிறமிகள் (pigments).

**கால்கள் எதற்கு?:**

பறவைகள் பொதுவாகக் கால்கள் இரண்டால் மட்டும் தத்தித் தத்தி முன்னுக்குச் செல்லும் பழக்கம் உள்ளவை. ஆனால் கிளிகள் செங்குத்தான மரங்களில் வாழப் பழகியதால், அவற்றின் கழுத்தாலும், வலிமையான அலகாலும் மரத்தில் முட்டுக் கொடுத்து, செங்குத்தான பகுதிகளில் உடலை உந்தி முன்னுக்குக் கொண்டு செல்லும் திறமை படைத்தவை.

கிளியின் ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்கள். இரண்டு விரல்கள் முன்னோக்கியும், இரண்டு விரல்கள் பின்னோக்கியும் வளைந்து இருக்கும். மரக் கிளைகளை இறுகப் பற்றிக்கொண்டு ஏறவும், உணவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கடித்து உண்ணவும் இந்த ஏற்பாடு.

**மூளையின் வலிமை:**

பொதுவாகப் பறவைகளுக்குப் பெருமூளை (Cerebrum), நடுமூளை (Midbrain), சிறுமூளை (Cerebellum) இவையெல்லாம் மனித இனம், விலங்குகளின் மூளையைவிட மிகவும் சிறியவை. விலங்குகளுக்குப் பெருமூளையின் மேற்பரப்பு கார்டெக்ஸ் என்கிற நரம்பு முடிச்சுக்களால் பின்னிக் கிடக்கிறது. கார்டெக்ஸில்தான் கற்றல், அறிதல், சிந்தனை போன்ற உயர்தர வேலைகள் எல்லாம் நடக்கிறது. பறவைகளுக்குக் கார்டெக்ஸ் கிடையாது. அதற்குப் பதிலாகப் பாலியம் (Pallium) இருக்கிறது. பறவைகளின் பாலியம் விலங்குகளின் கார்டெக்ஸை விட மிக மிகச் சிறியது. ஆனாலும் கிளிகளின் பாலியம் மற்ற பறவைகளின் பாலியத்தை விடப் பெரியது. அதனால் விலங்குகளோடு கிளிகள் அறிவுத் திறமையில் போட்டி போட முடிகிறது.




**ருசி தெரிந்த பறவை:**

கிளிகளுக்கு உணவின் ருசி தெரியும். என்ன, மனிதனுக்கு நாக்கில் 10000 சுவை அரும்புகள் உள்ளன. கிளிக்கு 350 சுவை அரும்புகள் (taste buds) தான். அவை நாவிலும், தொண்டையின் அடிப்பகுதியிலும் உள்ளன. அழுற்சியான சுவை கிளிக்கு நன்கு புலப்படும். அதனால் நச்சுத் தன்மை கலந்த உணவுகளையும், கொட்டைகளையும் துப்பி விடும்.

**புத்தியின் ரகசியம்:**

கிளிகள் கழுத்தை 180 டிகிரி திருப்ப முடியும்.

கிளி அதிபுத்திசாலியான பறவை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன:

கிளியின் உடல் எடைக்குத் தக்கபடி மூளையின் அளவு எவ்வளவு இருக்க வேண்டுமோ அதைவிடப் பெரிதான மூளை இருக்கிறது. இது எதனால்? கிளிக்குப் பெருமூளையும் அதன் மேல் படர்ந்திருக்கும் பாலியம் என்ற திசுவும் மற்ற பறவைகளுக்கு அமைந்திருப்பதை விடப் பெரியது. மண்டையின் பின்பக்கத்தில் உள்ள சிறு மூளையை, முன்பக்கம் உள்ள பெருமூளையோடு இணைக்கும் SpM என்ற நரம்புப் பாதை அகலமானது. கிளியின் SpM மற்ற பறவைகளைவிட 5 மடங்கு பெரியது.

அதனால் பெருமூளையின் சிந்தனை, கற்கும் திறன், சிக்கல்களுக்குத் தீர்வு காணும் ஆற்றல், சிறு சிறு கருவிகளைக் கையாளும் பயிற்சி இவையெல்லாம் உடல் உறுப்புக்களை இயக்கும் சிறு மூளையின் ஆற்றலோடு ஒருங்கிணைந்து வேகமாகப் பணியாற்றுகிறது.

**சமூக உணர்வு:**

கிளிகள் கூட்டமாக, குழுவாக சமூக உணர்வுடன் வாழத் தெரிந்த பறவைகள். உணவு தேடுதல், குளம், குட்டைகளில் குளித்தல், விளையாடுதல், ஒன்றையொன்று அழைத்துக் குரல் கொடுத்தல் போன்ற எல்லா நேரங்களிலும் கூட்டமாகக் கூடிவிடுகின்றன. இப்படி வாழ்க்கையின் தேவைகளுக்கு மற்ற கிளிகளோடு ஒன்றாகச் சேர்ந்து கொள்வதே எதிரிகளிடமிருந்து பாதுகாப்புத் தரும் என்பதைக் கிளிகள் தெளிவாக உணர்ந்திருக்கின்றன.

தங்கள் குழுவின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளவும், எதிரிகளைப் பற்றிய எச்சரிக்கை செய்து கொள்ளவும், கிளிகள் விதம் விதமான குரல் ஒலிகளை எழுப்பும்.

(குரல் ஒலி தொடரும்)




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan

# கானாடுகாத்தான் ஸ்ரீகரைமேலழகர் அய்யனார் கோவில் கும்பாபிஷேகம்





கானாடுகாத்தானில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீகரைமேலழகர் அய்யனார் கோயிலில் அமர்ந்து அருள்பாலிக்கும் ஸ்ரீமகாகணபதி, ஸ்ரீபழனி ஆண்டவர், ஸ்ரீபூர்ண-புஷ்கலா சமேதரருடன் கரைமேல் அழகர் அய்யனார், ஸ்ரீஆஞ்சநேயர், ஸ்ரீஅகோரவீரபத்திரர், ஸ்ரீசப்த கன்னிகள், ஸ்ரீமுனீஸ்வரர், ஸ்ரீஅரசுமுகம், ஸ்ரீசன்னாசி, ஸ்ரீபைரவர், ஸ்ரீ18-ஆம் படிக்கருப்பர், ஸ்ரீநாச்சாத்தாள், ஸ்ரீதேனாத்தாள், ஸ்ரீபெரியகருப்பர், ஸ்ரீசின்னக்கருப்பர், ஸ்ரீபரமனூர் காளி அம்மன், ஸ்ரீபேச்சியம்மன், ஸ்ரீநொண்டிக்கருப்பர், ஸ்ரீபேச்சிமுத்தம்மன், ஸ்ரீகன்னிமூலவிநாயகர், ஸ்ரீசிதம்பர விநாயகர், ஸ்ரீமுன்னோடிக் கருப்பர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கும் புதியதாக நிறுவப்பட்டுள்ள ராஜகோபுரத்திற்கும் விசுவாவசு ஆண்டு, ஆவணி மாதம், 19-ஆம் தேதி (04.09.2025) வியாழக்கிழமை, துவாதசி திதியும், உத்திராட நட்சத்திரமும், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் துலாம் லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. நகரத்தார் பெருமக்களும், சுற்று வட்டார பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக செப். 2-ஆம் தேதி காலை 7.00 மண அளவில் விக்னேஸ்வர பூஜை, நவக்கிரக ஹோமத்துடன் யாகசாலை வேள்வி பூஜைகள் நடைபெற்றது. செப்.3-ஆம் தேதி யாகசாலை பூஜைகள் தொடர்ந்து நடைபெற்று விசேஷ பூஜைகள் நிகழ்த்தப்பட்டது. அன்றைய தினம் இரவு தேவகோட்டை ராமநாதன் தலைமையில் மாபெரும் பட்டிமன்றம் நடைபெற்றது. செப்.4-ஆம் தேதி கும்பாபிஷேக நாளன்று காலை 10.30 மணிக்கு மேல் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களின் "அருள் தரும் அய்யனார்" எனும் தலைப்பில் பாராட்டரங்கம் நடைபெற்றது.

Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 September - 2025
Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.

**பெறுபவர்களைவிட கொடுப்பவர்களே பாக்கியவான்கள்**

# அனைவரும் கொண்டாடும் தீபாவளியை (20-10-2025) அன்னையருடன் கொண்டாட உதவுங்கள்!

## அன்னையர் அகம் மகிழ அன்னதானத்திற்கு நன்கொடை அளித்து அன்னையர் வாழ்வில் தீபஒளி ஏற்றுவோம்

**அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.** காஞ்சி ஸ்ரீ மகாப் பெரியவா ஆசியுடன் தாங்கள் எல்லா வளமும், நலமும் பெற மனதார பிரார்த்திக்கின்றோம். குமரன் இளைப்பாறிய குன்றத்தூர் முருகன் கோயில் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள **ஸ்ரீ அவ்வை ஹோம்** கடந்த **31 ஆண்டுகளாக** வயதான, நோய்களால் பாதிக்கப்பட்டும், நடக்க முடியாமலும், படுத்த படுக்கையாகவும் உள்ள வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் கருணை உள்ளம் கொண்ட நல்லோர்களின் அன்பான ஆதரவோடு செய்து, தினசரி இறை வழிபாட்டுடன் அவர்களை இறுதிவரை பராமரித்து பாதுகாத்து வருகிறது. எத்தனை வரங்கள் வேண்டுமானாலும் பெற எளிய வழி வயதான அன்னையருக்கு அன்னதானம் செய்வது மட்டுமே. உதவி செய்யும் நல்உள்ளங்கள் நீடூழி வாழ தீபஒளி திருநாளன்று கூட்டுப் பிரார்த்தனையும், செல்வ வளம் பெருகவும், வறுமை நீங்கவும் ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமம் சிறப்பாக நடைபெறும். ஸ்ரீ அவ்வை ஹோமில் உள்ள வயதான அன்னையர்களும் மகிழ்ச்சியுடன் இத்தீபஒளித் திருநாளை கொண்டாட உங்கள் அன்பளிப்புகளை பொருட்களாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவி செய்திட வேண்டுகிறோம். **தாங்களும் குடும்பத்துடன் இறைவன் அருள் பொருந்தி இந்த இல்லத்தை பார்வையிட்டு அனைத்து அன்னையரின் அளவற்ற ஆசியினையும், வாழ்த்துகளையும் பெற அன்புடன் அழைக்கிறோம்.**

## அன்னையருக்கு தாங்கள் அன்னமிடுவதால் பரம்பொருளுக்கே அன்னமிட்டவர் ஆகின்றீர்கள்

தீபாவளி அன்று நடைபெறும் அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமத்திற்கு **ரூ.300/-** அனுப்புபவர்களுக்கு **குபேர எந்திரம்** அனுப்பி வைக்கப்படும்

தீபாவளி அன்று இனிப்பு வழங்க **ரூ.500/-** அனுப்புபவர்களுக்கு **பித்தளையிலான சுப தீப விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

அன்னையர் ஒருவருக்கு மருத்துச் செலவுக்கு **ரூ.1,000/-** அனுப்பவுபவர்களுக்கு **கரும்பு காமாட்சி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

அன்னையர்களுக்கான ஒரு மாத பால் செலவு **ரூ.2,000/-** அனுப்புபவர்களுக்கு **முருகர் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

அன்னையர்களின் உடைகளுக்கு **ரூ.3,000/-** அனுப்புபவர்களுக்கு **வலிமை மிக்க சிவலிங்கம் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு **ரூ.4,000/-** அனுப்புபவர்களுக்கு **லட்சுமி ஹயக்ரீவர் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து அன்னையர்களுக்கும் உணவுக்கு **ரூ.5,000/-** அனுப்புபவர்களுக்கு **பித்தளையிலான முருகன் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

10 நாள் உணவுக்கு **ரூ.10,000/-** அனுப்புபவர்களுக்கு அதிஅற்புதங்களை நிகழத்தும் **ஸ்படிக மாலையும்**, 7 கோடி மஹாமந்திர பலனை உள்ளடக்கிய **ருத்ராட்ச ஜெப மாலையம்**, செல்வ வளம் பெருக்கும் **ஸ்ரீ லட்சுமி குபேர விக்ரஹமும்** அனுப்பி வைக்கப்படும்

**தீபாவளியன்று லட்சுமி குபேர ஹோமம் சிறப்பாக நடைபெறும். லட்சுமி குபேர ஹோமம் செய்வதன் முலம் செல்வச் செழிப்பைத் தரும், செல்வம் தெய்வீக மகிழ்ச்சி மற்றும் ஆன்மிக நல்வாழ்வை கொண்டு வரும். இந்த இனிய தீபாவளி நாளில் முதியோர்களுக்கு இனிப்பு உணவு மற்றும் பட்டாசுகளை வழங்கி அவர்களின் ஆசீர்வாதங்களை பெறுவோம்.**

வயதான அன்னையர்களின் அன்னதானத்திற்கும், மருத்துவ செலவுக்காக தாங்கள் அனுப்பும் நன்கொடையை **CHEQUE/DD/MO** மூலமாக **SRI AVVAI HOME** என்ற பெயரில் அல்லது **Direct Remittance**-ஆக **SRI AVVAI HOME, ICICI BANK, MYLAPORE BRANCH, CHENNAI-4, SB A/C NO: 218601000078, IFSC CODE: ICIC0002186** என்ற வங்கி கணக்கில் அல்லது அருகில் உள்ள **QR Code**-ஐ ஸ்கேன் செய்தும் தங்களுடைய நன்கொடையை அனுப்பலாம். நன்கொடை அனுப்பும் பொழுது தங்களின் பெயர், கோத்திரம், நட்சத்திரம், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவ குறிப்பிட வேண்டுகிறோம். **நன்கொடை அனுப்பும் அனைவருக்கும் தீபாவளி அன்று நடைபெறும் ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும், அன்னையர்களின் ஆசீர்வாத பிரசாதங்களும், ரசீதும் தீபாவளிக்கு பின் அனுப்பி வைக்கப்படும்**

Scan this QR code using any UPI-enabled mobile app

தங்களின் பிறந்த நாள், திருமண நாள், தொழில் தொடங்கிய நாள், முன்னோர்களின் நினைவு நாட்கள், அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் அன்னையர்களுக்கு சிறப்பு அன்னதானம் செய்து தங்கள் மகழிச்சினையும், நினைவுகளையும் பகிர்ந்து கொள்வதற்கு ஈடு இணை வேறு எதுவுமில்லை

மகாப் பெரியவா ஆசியுடன் 30ஆண்டுகளாக ஆதரவற்ற அன்னையரை அரவணைக்கும் ஆனந்தம் ததும்பும் அன்பு இல்லம்

# ஸ்ரீ அவ்வை ஹோம்®

குன்றத்தூர் முருகன் கோயில் அடிவாரம், குன்றத்தூர், சென்னை-69

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

**8754 999 999**

HOME CELL: **8754 888 888**

sriavvaihome@gmail.com



**தீபஒளி திருநாளை நம் இல்லத்து அன்னையர்களுடன் கொண்டாடி மகிழுங்கள். தங்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் தீபஒளி மலரட்டும்**